# வ. ரா. (வ. ராமசாமி)

சு. வேங்கடராமன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

வ.ரா.

(வ. ராமசாமி)

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

*(நாகார்ஜுன மலை சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.*

*பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)*

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# வ.ரா. (வ. ராமசாமி)

சு. வேங்கடராமன்

சாகித்திய அக்காதெமி

*Va.Ra* (Va. Ramasamy) - Monograph in Tamil
by S. Venkataraman, Sahitya Akademi, New Delhi, 1993

© சாகித்திய அக்காதெமி,
முதல் வெளியீடு 1993
ISBN 81-7201-543-7

**சாகித்திய அக்காதெமி**

**தலைமை அலுவலகம்**
ரவீந்திரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புதுதில்லி 110 001
**விற்பனை**
'ஸ்வாதி' மந்திர்சாலை, புதுதில்லி 110 001

'குணா பில்டிங்ஸ்', (2வது மாடி), 304-305, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

'ஜீவன்தாரா பில்டிங்' (4வது மாடி), டைமண்ட் ஹார்பார் சாலை, கல்கத்தா-700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், பம்பாய்-400 014.

109, ஜே. ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

**விலை ரூ.15**

அச்சிட்டோர்: உதயம் ஆப்செட்ஸ், சென்னை-2

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | 7 |
| 1. | வாழ்க்கை வரலாறு | 9 |
| 2. | வ.ரா. படைத்த நூல்கள் | 16 |
| 3. | வ.ரா. எழுதிய மகாகவி பாரதியார் | 20 |
| 4. | வ.ரா.வின் படைப்பிலக்கியம் | 32 |
| 5. | வ.ரா.வின் கட்டுரைகள் | 42 |
| 6. | வ.ரா. எழுதிய வாழ்க்கைச் சித்திரம் | 53 |
| 7. | வ.ரா.வின் பிறநூல்கள் | 62 |
| 8. | வ.ரா.வின் பெண்ணுரிமைச் சிந்தனைகள் | 69 |
| 9. | வ.ரா. என்ற மனிதர் | 84 |
| | பிற்சேர்க்கை | 90 |
| | வ.ரா.வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் | |
| | வ.ரா.வின் நூல்கள் | |
| | துணை நூற்பட்டியல் | |

# முன்னுரை

புதுதில்லியில் அமைந்துள்ள சாகித்திய அக்காதெமி நிறுவனம் பணித்தபடி எழுதப்பட்டுள்ள வ. ராமசாமி (வ.ரா.) அவர்களின் இலக்கியப் பணிகள், தனிமனிதப் பண்புகள் ஆகியவற்றை எடுத்துக்கூறும் இந்தச் சிறு நூல், அவரை அறிந்து கொள்ளவும், அவர் நூல்களில் திளைக்கவும் உதவுமாறு எழுதப்பட்டுள்ளது. வ.ரா. சிறந்த நாவல் ஆசிரியர் மட்டுமல்லர்; வாழ்க்கை வரலாற்றாசிரியர்; ஏராளமான கட்டுரைகளைத் தந்த உரை நடை நூலாசிரியர்; பத்திற்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் பணியாற்றிய இதழாசிரியர்; சிறந்த மொழி பெயர்ப்பாளர்; வாழ்க்கைச் சித்திரம் (நடைச்சித்திரம்) என்ற புதிய இலக்கிய வகையையும், உயர் கற்பனை நாவல் என்னும் இலக்கியத்தின் வகையையும் முதன் முதலாகத் தமிழ் மொழிக்கு அறிமுகம் செய்தவர்; சிறந்த பேச்சாளர்; அனைத்திற்கும் மேலாகப் புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்லிலும், செயலிலும், கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய தீரமிக்க இந்திய விடுதலைப் போராட்ட வீரர். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் புலமை பெற்றுச் சிறப்புடன் விளங்கிய வ.ரா.வினுடைய தனிப்பெரும் பண்புகளை, இலக்கியப் பணியை, இச்சிறுநூலில் முழுவதுமாக மதிப்பிட்டுவிட முடியாது. என்றாலும் பொதுமக்களும் புரிந்து கொள்ளும் வகையிலும் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மறுமலர்ச்சி உரைநடை முதல்வர்களில் ஒருவரான வ.ரா.வை இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் ஒருவராக அறிமுகப்படுத்தும் முறையிலும் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியாரை அடியொற்றி வ.ரா. அவர்களும் நாட்டு விடுதலை, சமூக மாற்றம், பெண் விடுதலை, தமிழ் மொழியின் சிறப்பு ஆகிய கருத்துக்களைத் தம் படைப்புகளில் தொடர்ந்து எழுதினார்.

நாட்டுப்பற்றும் மனித நேயமுமே வ.ரா.வின் எழுத்துக்களில் அடிநாதமாக ஒலிக்கின்றன. அத்தகைய வ.ரா.வினைத் தேசிய அளவில், பிற இந்திய மொழியினருக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கில் முதல் படியாக, இச்சிறு நூலை எழுதும்படி பணித்த சாகித்திய அக்காதெமி நிறுவனத்தாருக்கு மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் கூறுகிறேன்.

இந்த நூல் எழுதத் தொடங்கும்போது வ.ரா.வின் படைப்புக்கள் கிடைப்பது மிக அரிதாக இருந்தது. அதற்கென மிகவும் முயன்று பலரையும் அணுகி, பல நூலகங்களுக்கும் சென்று, நண்பர்கள் பலரின் ஒத்துழைப்புடன் இந்தப் பணியை முடித்தேன். பணிமுடியுந்தறுவாயில், வ.ரா. நூற்றாண்டு விழாவை ஒட்டி அவர் நூல்கள் பல மறுபதிப்பாக வெளிவந்தன. இப்போது புதியதாக வந்த பதிப்பையும், புதிய பதிப்பு வெளி வராத நூல்களுக்குப் பழைய பதிப்பையும் பின்பற்றியுள்ளேன்.

இந்த நூல் உருவாக்கத்தின் தொடக்க நிலையில் அரிய ஆலோசனைகளை வழங்கியதுடன் அமரர் வ.ரா. என்ற தம்முடைய சிறு நூலையும் அனுப்பித் தந்து வழிகாட்டிய திரு. பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி) அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. வ.ரா.வின் நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைத் தந்து உதவியும், புகைப்படப் பிரதி எடுத்து அனுப்பியும் தம்முடைய ஆய்வேட்டைக் கொடுத்தும் உதவிய வ.ரா. ஆய்வாளர் டாக்டர். பழ. அதியமான் (அகில இந்திய வானொலி, புதுவை) அவர்களுக்கும், பழமையான நூல்கள், பத்திரிகைகள் அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்து வைத்துள்ள தமது தனிப்பெரும் ஆராய்ச்சி நூல் நிலையத்திலிருந்து வ.ரா.வின் நூல்கள், பழைய இதழ்கள், வ.ரா.வைப் பற்றிப் பிறர் எழுதிய கட்டுரைகள் ஆகிய அனைத்தையும் அன்புடன் தந்து உதவிய காலஞ் சென்ற திரு. ரோஜா முத்தையா (கோட்டையூர்) அவர்களுக்கும் நன்றி. வ.ரா.வின் நூல்கள் தந்து உதவிய டாக்டர் பழனி இராகுலதாசன், (பேராசிரியர் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை) டாக்டர் தே. சொக்கலிங்கம் (தமிழ்ப் பேராசிரியர், அழப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி), திரு. கி. பழனிச்சாமி (ஞானி) (கோயம்புத்தூர்) ஆகியோருக்கும் இந்த நூல் உருவாக்கத்தின் போது ஆலோசனை வழங்கிய டாக்டர் தி.ப. சித்தலிங்கய்யா (பேராசிரியர், சைவ சித்தாந்தத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் நன்றி உரியது.

மதுரை சு. வேங்கடராமன்.

# இயல் 1

## வாழ்க்கை வரலாறு

### பிறப்பு

தமிழ் உரைநடை உலகில் தனிச் சிறப்பு உடையவர் வ.ரா. என்று அழைக்கப்படும் வ.ராமசாமி ஐயங்கார் ஆவார். பாரதியாராலே 'உரைநடைக்கு வ.ரா.' என்று பாராட்டுப் பெற்றவர் அவர். தஞ்சை மாவட்டத்தில் திருப்பழனத்திற்கு அருகில் திங்களூர் என்னும் சிற்றூரில் 1889 - ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் பதினேழாம் நாள் அவர் பிறந்தார். அவருடைய தந்தையார் வரதராஜ ஐயங்கார்; தாயார் பொன்னம்மாள். அவரோடு உடன் பிறந்தோர் எழுவர்; வ.ரா. மூத்த பிள்ளை.

### கல்வி

தாம் பிறந்த ஊரில் ஒரு புதுக்கிணறு வெட்டுவதற்குக் கூட மக்களிடம் செல்வமும், ஒற்றுமை உணர்வும் கிடையா என்று அவரே நமது தமிழ் நாடு கட்டுரையில் விளக்குகிறார். திங்களூரை அடுத்துள்ள உத்தமதானபுரத்தில் (உ.வே. சாமிநாதய்யர் பிறந்த ஊர்) தம்முடைய தொடக்கக் கல்வியைப் பயின்றார். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் தமிழ் நாடு எப்படி இருந்தது என்பதற்குத் திண்ணைப்பள்ளிக் கூடம் ஒரு சாம்பிள்; பள்ளிக்கூடத்திற்குத் தனிக்கட்டிடம் கிடையாது. அது வாத்தியார் வீட்டுத் திண்ணைதான்" (வ.ரா. வாசகம் ப. 7) என்று அவர் தம் பள்ளி வாழ்க்கையை அதே கட்டுரையில் விளக்குகிறார். திண்ணைப்பள்ளியிலிருந்து எட்டுவயதில் திங்களூரிலுள்ள பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். அங்கே ஆங்கிலமும் பயின்றார். பின்னர் திருவையாற்றிலுள்ள சென்டிரல் உயர்நிலைப் பள்ளியில் மேற்படிப்புப்படித்தார். 1905 - ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். பின்னர் தஞ்சாவூர் புனித பீட்டர் கல்லூரியில் சேர்ந்து எப்.ஏ. பயின்றார். எப்.ஏ. தேர்வில் தோல்வியுறவே மனம் கலங்கிய வ.ரா. கல்கத்தாவில் சுரேந்திரநாத் பானர்ஜி நடத்தி வந்த தேசியக் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பினார். கல்கத்தா சென்ற அவர், தக்க பரிந்துரையின்மையால் கல்லூரியில் சேர இயலாது ஊர் திரும்பினார்.

## விடுதலைப்போராட்ட ஈடுபாடு

இத்துடன் கல்வியை நிறுத்திக்கொண்ட வ.ரா. விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, நாட்டிற்காக உழைக்கத் தொடங்கினார். தம்முடைய கல்லூரி நாட்களிலே, வந்தேமாதரம் முழக்கமிட்டதற்காகக் கல்லூரி முதல்வரால் தண்டனை பெற்ற அனுபவம் அவருக்கு உண்டு. அக்காலத்தில் திருவரங்கத்தைச் சார்ந்த கொடியாலம் ரெங்கசுவாமி ஐயங்கார், விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்து வந்தார். தேசியவாதிகளுக்கு அவர் பொருளுதவியும் செய்து வந்தார். ஒரு முறை அவ்வாறு புதுச்சேரியில் இருந்த அரவிந்தருக்குப் பொருள் உதவி செய்ய விரும்பி அதற்கு வ.ரா. வைப் பயன்படுத்திக் கொண்டார். நாட்டு விடுதலைப் போராட்ட ஆர்வமும், இளமைத் துடிப்பும் செயற்பாடும் மிக்க வ.ரா. இத்தகைய செயல்களை முழு ஈடுபாட்டுடன் திறம்படச் செய்ய உதவினார்.

## பாரதி சந்திப்பு

பாண்டிச்சேரிக்குச் சென்று அரவிந்தரைக் காண வ.ரா. மிகவும் உற்சாகத்துடன் விரும்பியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஏனெனில் பாண்டிச்சேரியில் மகாகவி பாரதியாரைக் காண்பதை வ.ரா. பெரும்பேறாகக் கருதினார். அதற்கு முன்னரே பாரதியின் நண்பரான வி. கிருஷ்ணசாமி ஐயர் அந்நாளில் வெளியிட்டிருந்த பாரதியின் சுதேசகீதங்கள் யாவற்றையும் படித்து அதில் ஈடுபட்டிருந்த வ.ரா.விற்கு இவ்வாறு புதுச்சேரிக்குச் செல்வது மிகவும் ஈடுபாடு மிக்க செயலாக இருந்ததில் வியப்பில்லை. பாரதியாரைச் சந்தித்ததாலே வ.ரா. தாய்மொழியின் சிறப்பு, தேசபக்தி, சமூக விடுதலை, பெண் விடுதலை போன்றவற்றில் தீவிர ஈடுபாடு கொண்டார். தம் வாழ்நாள் முழுவதும் இவற்றிற்கென உழைத்தார். தம் படைப்புக்கள் அனைத்திலும் தாரக மந்திரங்களாக இவற்றையே தொடர்ந்து எழுதினார். 'விடுதலை என்ற சொல்லை நாட்டிற்கு உபயோகப்படுத்தி நான் கேட்டது பாரதியாரிடந்தான். தமிழுக்கு உயர்வு உண்டு; தமிழனுக்கும் பெருமை உண்டு என்பது பாரதியாரைப் பார்த்த பின்னர் தான் என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தது. வெறும் வந்தேமாதரக் கூச்சலிட்டு வந்த சிறுபிள்ளையான எனக்கு பாரதியாரைக் கண்டபின்னர் அபரிமிதமான உற்சாகம் வந்தது

என்றால், அது கற்பனையே அல்ல' என்று வ.ரா. மகாகவி பாரதியார் (பக். 8-9) நூலில் பாரதியைத் தாம் சந்தித்த போது முதல் நாள் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுவதிலிருந்து இதனை உணரலாம். வ.ரா.வின் வாழ்க்கைப் போக்கை மாற்றி, அவரைப் பாரதிப் பித்தராக ஆக்கிய இந்த நிகழ்ச்சி 1911 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிகழ்ந்தது. வ.ரா. வின் வாழ்கைப் பாதையில் இது மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். பின்னர் 1914 ஆம் ஆண்டு வரை புதுச்சேரியில் தங்கி பாரதிக்குச் சேவை செய்து அவருடன் உடனிருப்பதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார், வ.ரா. பின்னர் மகாகவி பாரதியின் இலக்கியத் தரம் குறித்து எழுதவும் மகாகவி பாரதியார் நூலை எழுதவும் அவருக்கு இத்தொடர்பு உதவியது. வ.ரா. வைப் பொருத்தவரையில் பாரதிதான் அவருக்கு மாதா, பிதா, குரு. தெய்வம்.

## அரசியல் ஈடுபாடு

காங்கிரஸ் இயக்கத்தில் வ.ரா. தீவிரமாக ஈடுபட்டார். தம் வாழ்நாள் முழுவதிலும் அவ்வியக்கத்திலே உழைத்தார். 1910 - ஆம் ஆண்டு அலகாபாத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் முதன் முதலாகக் கலந்து கொண்டார் வ.ரா. அது முதல் ஆண்டுதோறும் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டதுடன் தாம் பணியாற்றிய பத்திரிகைகளில் அதைப்பற்றி விரிவாக எழுதினார். இந்த அனுபவ அறிவே காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஆண்டு நிறைவு ஆகிய நூல்களை எழுத அவருக்கு உதவியது. காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபோதெல்லாம் வ.ரா. அவருடன் இருந்து பல்வேறு உதவிகளைச் செய்தார். 1930 - ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும், விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டமாக உப்புசத்தியாக்கிரகம் நடைபெற்றது. தமிழ் நாட்டில் வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் வ.ரா. பங்கு பெற்றார். இதற்காகச் சிறைத் தண்டனை பெற்று அலிப்பூர் சிறையில் ஆறு மாத காலம் தண்டனையை அனுபவித்தார். சிறையிலிருந்து வெளிவந்த பின் தீவிரவாத அரசியலை விட்டுவிட்டு, மிதவாத அரசியலுக்குத் திரும்பினார். சிறையிலிருக்கும் போதே, அவர் நிறைய எழுதத்தொடங்கினார். அவற்றுள் What is poetry என்ற நீண்ட ஆங்கிலக் கட்டுரையும், (இது அவர் மறைந்து நீண்ட காலத்திற்குப்பின் 1982, ஆகஸ்ட், செப்டம்பர் இதழ்களில், திரு

சிட்டியின் முயற்சியால் Indian Review என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது.) வேறு சில கதைகளும், இலக்கியக் கட்டுரைகளும் எழுதி ஜெயில் டைரி என்ற பெயரில் அவர் தொகுத்து வைத்திருந்தார். சிறை செல்வதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரும் அவர் நிறைய எழுதிவந்தார். 1914–இல் அவர் தமது முதல் படைப்பான ஜோடி மோதிரம் என்ற மொழிபெயர்ப்பை வெளியிட்டார். ஞானபானு உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் எழுதி வந்த வ.ரா. பல்வேறு பத்திரிகைகளில் ஆசிரியர், உதவி ஆசிரியர் நிலைகளில் பணியாற்றினார். இலங்கை சென்று வீரகேசரி இதழில் பணியாற்றிய அனுபவமும் உண்டு.

## எழுத்தாளர்களின் வழிகாட்டி

மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு வ.ரா.தான் முன்னோடி. 'சிந்தனையை மதிப்பவர்களுக்கெல்லாம்' வ.ரா.விடம் மதிப்புண்டு என்று வ.ரா. வாசகம் நூலில் (ப. XIX) மணிக்கொடி சீனிவாசன் கூறுகிறார். வ.ரா.வினுடைய சமூகச் சீர்திருத்த ஈடுபாடு, தமிழ்ப்பற்றுக் காரணமாகப் பகுத்தறிவுவாத அரசியலாளர்களிடமும் நாட்டுப்பற்றுக் காரணமாக காங்கிரஸ் தலைவர்களிடமும் ஒரே சமயத்தில் அவர் பாராட்டுப் பெற்றிருந்தார். 'இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவது வ.ரா.விற்கு இயற்கையான குணம். புதுமைப்பித்தனுக்கு உற்சாகம் கொடுத்து, மேலும் மேலும் தூண்டி விட்டவர் அவர்தான். அவரைச் சுற்றி எப்பொழுதும் எழுத்தாளர் கூட்டம் ஒன்று இருந்து கொண்டே இருக்கும். அவருடைய ஆதரவான மொழிகளைக் கேட்கும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தாங்கள் பெரிய எழுத்தாளர் என்று நினைக்கும்படி தன்னம்பிக்கை ஏற்படும்' என்று டி.எஸ். சொக்கலிங்கம் கூறுவது நினைக்கத்தக்கது. ('வ.ரா'., டி.எஸ். சொக்கலிங்கம், குமரிமலர், ப.19).

## மணவாழ்க்கை

வீரகேசரி என்னும் பத்திரிகையில் பணியாற்றுவதற்காக வ.ரா. இலங்கை சென்றார். அங்கிருந்தபோது, தம்முடைய நாற்பதாவது வயதில் புவனேசுவரி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். பஞ்சாபியைத் தாய்மொழியாகக் கொண்ட வேற்று இனத்தவரான அந்த அம்மையாரை வ.ரா.

மனம் விரும்பிக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். தம்முடைய இளம் வயதில் தம் ஊரில், தாழ்ந்த இனத்தைச் சார்ந்த இறந்துபோன ஒருவரின் இறுதி ஊர்வலம், அந்தணர்கள் மிகுதியாக வாழ்ந்த தெருக்களின் வழியாக செல்வதைப் பிறர் தடுத்தபோது, வ.ரா. தம் இன மக்கள் செயலை எதிர்த்து அவ்வூர்வலத்துக்கு ஆதரவுக்குரல் கொடுத்தார்; அதன் பயனாகத் தமது சொந்த இனத்து மக்களாலே துன்புறுத்தப்பட்டார். இளம் வயதில் அவருக்குள் ஏற்பட்ட சமூக அநீதிகளுக்கு எதிரான இந்தக் கனல் அவருடைய இறுதி மூச்சுவரை கனன்று கொண்டே இருந்தது; அவருடைய எழுத்து, சொல், செயல் அனைத்திலுமே வெளிப்பட்டது. மிக இளம் வயதிலே சாதி வேறுபாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி பிடித்த அவர், சாதியின் அடையாளமான பூணூலைக் கழற்றி எறிந்தவர். பாரதியார் பாண்டிச்சேரியில் வாழ்ந்தபோது, அவருடன் இருந்த காலத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது. 'எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குச் சில மாதங்களுக்கு முன்புதான், என் பூணூலை எடுத்துவிடும்படி பாரதியார் எனக்குச் சொன்னார். அவரோ வெகு காலத்திற்கு முன்னமேயே பூணூலை எடுத்துவிட்டார்" என்று மகாகவி பாரதியார் நூலில் (ப. 138) வ.ரா. கூறுகிறார். இவ்வாறு சாதிச்சின்னங்கள், பழைய சம்பிரதாயங்கள் இவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்துச் சமூக மாற்றத்திற்காக உழைத்து, சொன்னபடியே தம்முடைய வாழ்க்கையில் சாதி, மொழி வேறுபாடுகள் கடந்த நிலையில் அவர் மணம் புரிந்து கொண்டது, அவருடைய கொள்கைப் பிடிப்பைக் காட்டும்.

இந்தத் திருமணத்தை அந்த நாட்களில் அவருடைய நெருங்கிய நண்பர்களும், உறவினர்களும் மனமார ஏற்றுப் பாராட்டினார்கள். ஒரு சிலர் முகஞ்சுளித்திருக்கலாம். இது பற்றிய முழு விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் தமிழறிஞரும், தேசபக்தருமான வ.உ.சிதம்பரம் பிள்ளை, வ.ரா.வினுடைய திருமணத்தைக் கேலி செய்வதுபோலப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளார். அதனை மறுத்து, வ.ரா.வினுடைய சீர்திருத்தத் திருமணச் செயலை ஆதரித்து மற்றொரு தமிழறிஞரும், தேசபக்தருமான ராய.சொக்கலிங்கம் தாம் நடத்திய ஊழியன் பத்திரிகையில் (ஊழியன் 15.5.36, ப. 8, காரைக்குடி) செய்தி வெளியிட்டுள்ளார். 'வ.ரா. தம் நாற்பது வயதில் பஞ்சாபி சிறுமி ஒருத்தியை மணந்து கொண்டார்

என்பதைக் கூறி, 'அய்யங்காருக்கும் அவருடைய பஞ்சாபி மனைவியாருக்கும் பிறக்கும் ஆண் மக்களை நான் இன்ன அய்யங்கார் என்று கூப்பிடுவதா, அல்லது சுயமரியாதைத் தோழர்களைக் கூப்பிடுவது போல வெறும் பெயர்களை மட்டும் சொல்லிக் கூப்பிடுவதா' என்று கவலைப்படுகிறார் வ.உ.சி. அவர்கள். கலியாணம் இருவர் தனியுரிமை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் சாதிப்பட்டத்திற்காகக் கவலைப்படுகிறார் வ.உ.சி. சாதிச்சனியனே வேண்டாமென்றுதானே பஞ்சாபிப் பெண்ணை மணந்திருக்கிறார், வ.ரா. திரு. சிதம்பரம் பிள்ளை போன்ற பெரிய தேசாபிமானிகள், தலைவர்கள், தியாகிகள் கூடச் சாதியைப் பிடித்துக் கொண்டிருப்பார்களேயானால், தேசத்தின் தலைவிதியையும், சாதிப்பேயின் நற்காலத்தையும் என்னவென்பது?' என்று ஊழியணில் 'துண்டுபட்ட நினைவுகள்' என்னும் தலைப்பில் கமலம் என்ற பெயரில் துணைத் தலையங்கமாக, இது வெளியிடப்பட்டுள்ளது. இப்புனை பெயரில் எழுதியவர் ராய.சொ.வா அல்லது வேறு ஒருவரா என்பது இப்பொழுது தெரியவில்லை. ஆயினும் தம் வாழ்நாள் முழுவதிலும் சொன்ன வண்ணம் செய்துகாட்டி வாழ்ந்த வ.ரா.விற்கு அக்காலத்தில், அறிஞர்கள் மத்தியில் அவருடைய இந்தச் செயலுக்காக ஆதரவும் எதிர்ப்பும் இருந்ததை இந்த வரலாற்றுக் குறிப்பு காட்டும்.

## குடும்ப வாழ்க்கையும் மறைவும்

வ.ரா.வின் இல்லற வாழ்க்கை அமைதியாகவும், இனிமையாகவும் கழிந்தது. இரு குழந்தைகள் பிறந்து, முதல் மகன் இரண்டரை வயதிலும், இரண்டாவது மகன் பிறந்த சில நாட்களுக்குள்ளும் இறந்து போயினர். இலங்கையிலிருந்து திரும்பியபின் சென்னையிலே தமது குடியிருப்பை வைத்துக் கொண்டார். அவருடைய மணிவிழாவின் போது தமிழ்நாட்டு மக்களால் வழங்கப்பெற்ற பணமுடிப்பைக் கொண்டு, சொந்தமாக வாங்கிய வீட்டில் தம் இறுதிநாட்களைக் கழித்தார். இறுதிக்காலத்தில் ஆஸ்துமாவுடன் போராடிய அவருக்கு சாலை விபத்து ஒன்றினால் இடுப்பெலும்பு முறிந்தது. இந்தத் துன்பங்களைப் பொருட்படுத்தாது உற்சாகமாக அவர் வாழ்ந்தார். வ.ரா.வின் இல்லற வாழ்க்கை மிகவும் மனமொத்த நெருக்கமுடையதாக இருந்தது என்று மணிக்கொடி சீனிவாசன் வ.ரா. வாசகம் நூலில் (ப. XXV) கூறுவார். ஆனால் சிறிது

காலத்திற்குப்பிறகு 29.8.1951 அன்று பகல் உணவிற்குப் பிறகு வழக்கம் போலக் கண்ணயர்ந்த வ.ரா. கண்விழிக்கவே இல்லை. பிற்பகல் காபிக்கென்று எழுப்பப்போன மனைவியார் ஆவிபிரிந்த உடலைத்தான் கண்டார். இதனை "அந்தக் குடும்பத்தில் சூரியன் அஸ்தமித்து விட்டது. வ.ரா. இருந்த இடத்தில் இரா (இரவு) வந்து கவ்விக்கொண்டது. அகால மரணம் என்று வ.ரா. வாசகம் நூலில் (ப. XXVI) ஆசிரியர் உருக்கமாக வருணிக்கிறார். வாழ்நாள் முழுவதும் வறுமையிலும், வியாதியிலும் கழிந்தது. தம் சொந்த இன மக்களால் புறக்கணிப்பும், முன்னால் முகத்துதியும் பின்னால் கேலிப்பேச்சும் என அவர்பட்ட சங்கடங்கள் பல. இவ்வாறு சமூக மாற்றங்களுக்கான போராட்டத்திற்காகவே அவருடைய வாழ்க்கை கழிந்தது. மனிதனுடைய மனச்சாட்சியை உலுக்கி, அறிவுச்சுடரை ஏற்றிச் சிந்தனையை வளர்த்து, போலித் தனமான சமூக சமய சாதி மொழிக் கட்டுப்பாடுகளை எதிர்த்துப் புரட்சிக்கு அவர் வித்திட்டார். 20-ஆம் நூற்றாண்டில் பாரதியார் கவிதை மூலமாகச் செய்த சமூகப்புரட்சியை அவருடைய சீடரான வ.ரா. உரைநடையின் மூலம் சாதித்துக் காட்டினார்.

# இயல் 2

## வ.ரா. படைத்த நூல்கள்

பல்வேறு பத்திரிகைகளில் ஆசிரியப் பொறுப்பில் பணியாற்றிய வ.ரா. நிறைய எழுதினார். சுதந்திரன் என்ற இதழிலிருந்து அவர் தம் எழுத்துப் பணியைத் தொடங்கினார். சமூகச் சீர்திருத்தம், நாட்டு விடுதலை, பெண் முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி என்ற பலவற்றைத் தம் எழுத்துக்களில் அவர் வெளிப்படுத்தினார். பாரதியிடம் கொண்ட ஈடுபாடு, அவரைச் சிந்தனையிலும், செயலிலும் புரட்சி மிக்கவராக ஆக்கியது. 'வ.ரா. தமிழ் நாட்டுக்குச் செய்த தொண்டு களிலெல்லாம் சிறந்த தொண்டு பாரதியாரின் பெருமையை உலகறியும்படி செய்ததாகும். பாரதியாரின் பெயர் உள்ள வரையில் வ.ரா.வின் நினைவும் தமிழர் உள்ளத்தைவிட்டு அகலாது' என்று கூறுவார் கல்கி (2.9.1951 - கல்கி). தொடக்க காலத்தில் வ.ரா. படைத்தது பங்கிம் சந்திரரின் குறுநாவலை ஜோடி மோதிரம் என்ற பெயரில் மொழி பெயர்த்ததாகும். இது 1914 பிப்ரவரியில் பரலி சு.நெல்லைப்பரால் நூலாக வெளிப் பட்டது. முதலில் ஞானபாநு இதழில் வெளிவந்தது. வ.ரா.வின் இந்த மொழி பெயர்ப்பைக்கண்ணுற்ற பாரதியார் 'வசனத்திற்கு வ.ரா. போதும். கவிதைகளை மட்டும் நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று வ.ரா.விடம் கூறி உற்சாகப் படுத்தியதாகவும், அரவிந்தரிடமும் கூறியதாகவும் மணிக்கொடி ஸ்ரீனிவாசன் வ.ரா. வாசகம் நூலில் (ப. VI) கூறுவார்.

### நாவல் - சிறுகதை

வ.ரா. நான்கு நாவல்களையும், பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அவருடைய சிறுகதைகள் கற்றது குற்றமா? என்ற பெயரில் தொகுப்பாக (1944) வந்துள்ளது. இன்னும் நூலாகாத சிறுகதைகள் உள்ளன. 1933இல் அவர் எழுதிய கோகிலத்தின் குதர்க்கம் என்ற சிறுகதை 1984இல் சென்னை இலக்கியச் சிந்தனையால் வெளியிடப்பட்டது. வ.ரா. 1913இல் எழுதிய சுந்தரி என்ற நாவல் (அந்தக்கால வழக்கத்தின்படி இந்த நாவலுக்குச் சுந்தரி அல்லது அந்தரப்பிழைப்பு என்ற இரட்டைப் பெயர் வைக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு முதல் சுந்தரி என்ற பெயர் மட்டுமே காணப்படுகிறது). 1917-இல்

வெளியானது. இந்த நாவல் இளம் விதவையின் வாழ்க்கைச் சிக்கலை முன்வைத்து அவளுக்கு மறுமணம் வேண்டுமென்ற சீர்திருத்தக் கருத்தை எடுத்துரைத்தது. விஜயம் என்ற நாவல் 1944இல் வெளியானது. இந்த நாவலிலும் விதவைச் சிக்கலே கதையின் மையப்பொருள். இதற்குச்சற்று முன்னர் 1942இல் வெளியான சின்னச் சாம்பு நாவலிலும் விதவை மறுமணத்தை வலியுறுத்துகிறார். 1945இல் கோதைத்தீவு என்ற நாவலைப் படைத்தார். உயர் கற்பனை நாவல் (Utopian) என்ற வகையில் இது அமைந்தது. பாரதியாரின் ஞானரதம் இதற்கு முன்னோடி. பெண் விடுதலை, பெண் உரிமைச் சிந்தனைகளை மிகுந்த தீவிரத்துடன் வ.ரா. இந்த நாவலில் படைத்துள்ளார். இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் நிலைத்து நிற்கும் கற்பனையாக இந்த நாவல் அமைந்துள்ளது. தமிழின் பழைய இலக்கியங்கள் பெண் முன்னேற்றத்திற்குப் பாதகமாக அமையின், அவை தடை செய்யப்படவேண்டும் என்ற அளவிற்கு அவரின் புரட்சிச் சிந்தனை செல்வதை இந்த நாவல் காட்டும்.

## கட்டுரை

பத்திரிகைகளிலும், வானொலி உரையாகவும் வ.ரா. எழுதிய கட்டுரைகள் நூல்களாக வெளிவந்துள்ளன. மழையும் புயலும், கலையும் கலைவளர்ச்சியும், புண்ணியமும் பலவீனமும், வசந்த காலம், சுவர்க்கத்தில் சம்பாஷணைகள், வ.ரா. வாசகம் என்பன அவை. அவற்றுள் இறுதி மூன்றும் வ.ரா.வின் மறைவிற்குப் பின் வெளிவந்தவை. இவை அனைத்திலும் வ.ரா.வின் புரட்சிகரமான சமூகச் சீர்திருத்தக் கருத்துகளும், நடையின் வேகமும் சேர்ந்து காணப்படும். இந்நூற்றாண்டு மறுமலர்ச்சி உரைநடை முன்னோடியாக அவரை இவை இனங்காட்டுகின்றன. தினமணி, ஊழியன் போன்ற இதழ்களில் வெளிவந்து, இன்னும் நூலாகாமல் உள்ள கட்டுரைகள் ஏராளம்.

## வாழ்க்கை வரலாறு

மகாகவி பாரதியார் என்ற பெயரில் வ.ரா. எழுதிய பாரதியின் வரலாறு, அவர் படைத்த நூல்களிலெல்லாம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பாரதியாரை மகாகவி என்று நிறுவியதில் வரலாற்று முக்கியத்துவம் உள்ளது. 1933–34ஆம் ஆண்டுகளில் வ.ரா. மணிக்கொடியில் ஆசிரியராக இருந்த

பொழுது. ஆனந்தவிகடன் ஆசிரியர் கல்கியுடன், பாரதியின் இலக்கிய ஸ்தானம் குறித்து, ஏற்பட்ட கருத்து மோதலால் இது உருவானது. தினமணி, சுதேசமித்திரன் இதழ்களின் வாயிலாகவும், பின்னர் காந்தி இதழிலும் வ.ரா. எழுதிய கட்டுரைகள் பின்னர் நூலாக உருப்பெற்றன. வாழ்க்கை வரலாறு எழுதுவதற்கு வ.ரா. பயன்படுத்தியுள்ள முறை புதுமையானது. இன்றளவும் பாரதியார் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்களில் வ.ரா.வின் மகாகவி பாரதியார் நூலுக்குத் தனியிடம் உண்டு.

## நடைச்சித்திரம்

நடைச்சித்திரம் என்ற பெயரில் புதிய இலக்கிய வகையை வ.ரா. மணிக்கொடி மூலம் உருவாக்கினார். பலதரப்பட்ட மனிதர்களைப் பற்றிய சித்திரங்கள் அவை. தாம் வாழ்க்கையில் சந்தித்த சாதாரண, பொதுமக்களைப் பற்றி அவர் உருவாக்கிய கோட்டுச் சித்திரங்கள் அவை. உரையாடலும், எடுத்துரைத்தலுமாக, படிப்பவனை முன்னிலைப்படுத்தி அவனிடம் சித்திரங்கள் அறிமுகப்படுத்தும் தொனியில் எழுதப்பட்ட, படைப்பிலக்கியம் அல்லாத இந்தப்புதிய வகை எழுத்திற்குப் பெரும் வரவேற்பு இருந்தது. இன்று வரை வ.ரா.வின் இந்த நடைச்சித்திரத்திற்கு இணையாக மற்றொன்று தோன்றவில்லை. நடைச்சித்திரம், வாழ்க்கை விநோதங்கள் என்பன இவ்வகையின.

இதே வகையில் தம்முடைய உழைப்பால் முன்னேறி, முன்மாதிரிகளாக விளங்கும் சமூகப் பெரியார்களைப் பற்றி, தமிழ்ப் பெரியார்கள் என்ற நூலை அவர் எழுதினார்.

## மொழிபெயர்ப்பு

விடுதலைப் போராட்ட காலத்தில் தேசப்பற்று, நாட்டு விடுதலை, சமூக மேம்பாடு என்ற கருத்துகளை மையமிட்ட, சில நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார், வ.ரா. பர்டோலிக் கதை, ஜப்பான் வருவானா?, ஜவஹர்லால் வாழ்க்கை வரலாறு, நமது இந்தியா என்பன இவ்வகையின. தமிழ் நாட்டுச் சூழலுக்கும், பண்பாட்டு மரபுகளுக்கும் ஏற்ப, தீவிரமான நடையில் இந்த மொழி பெயர்ப்புகளை அவர் செய்தார்.

## கொள்கை விளக்க நூல்

அடிமைப்பட்டிருந்த இந்திய நாட்டையும் அதன் பழைய பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றையும் கேலி செய்து, வெளிநாட்டவர் மத்தியில் இந்தியாவைப் பற்றி மிக மோசமான எண்ணத்தை உருவாக்கும் நோக்கில் 1928இல் காதரைன் மேயோவால் எழுதப்பட்ட இந்திய மாதா என்ற நூலுக்கு மறுப்புரை போல - இந்தியாவைப் பற்றிய சரியான கொள்கை விளக்க நூலாக - மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி என்ற பெயரில் 1928இல் வ.ரா. ஒரு நூலை எழுதினார். வ.ரா.வின் நூல்களிலேயே மிகவும் குறிப்பிடத்தக்க நூல் இது. பின்னாளில் அவருடைய நூல்களில் வெளிப்பட்ட சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகள் பலவற்றிற்கும் இந்த நூல் நிலைக்களனாகும். பெண்ணுக்குச் சொத்தில் உரிமையும், சமபங்கும் உண்டு என்று இந்த நூலின் மூலம் வ.ரா. எழுப்பிய புரட்சிகரமான சமூகச்சிந்தனை, பின்னர் தமிழகச் சமூக, அரசியல்வாதிகள் பலராலும் போற்றப்பட்டு வலியுறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஆண்டு நிறைவு என்ற இரு நூல்களிலும் அன்றைய காங்கிரஸ் கட்சியின் செயல்களை, கொள்கை விளக்கங்களை வ.ரா. பாராட்டி எழுதியுள்ளார்.

வ.ரா.வின் படைப்புக்கள் பலதரப்பட்டவையாக இவ்வாறு அமைந்துள்ளன. இலக்கிய வகைகள் மாறினாலும், அவர் தேர்ந்தெடுத்த அடிப்படை வெளியீட்டு வடிவம் உரைநடையாகும். தீவிரமான அவருடைய சிந்தனை வேகத்திற்கு ஈடு கொடுத்தது அவருடைய நடை. தமிழின் நவீனத்துவம், கவிதையில் பாரதியுடனும், உரைநடையில் வ.ரா.வுடனும் தொடங்கியது. தேசப்பற்று, சமூகச் சீர்திருத்தம், பெண்ணுரிமை, தமிழ்ப்பற்று, ஜன சமூக மேம்பாடு என்ற கருத்தாக்கங்கள் அடிப்படை உள்ளீடுகளாக அமைந்து வெவ்வேறு இலக்கிய வகைகளில் வ.ரா.வின் தனித்த உரைநடையில் வெளிப்பட்டன.

# இயல் 3

## வ.ரா. எழுதிய மகாகவி பாரதியார்

இந்த நூற்றாண்டின் தமிழ்மொழியின் நவீனத்தன்மை (Modernity) கவிதைகளில் மகாகவி பாரதியாருடன் தொடங்குகிறது. பாரதியின் எழுத்துக்கள் இன்னும் பல காலத்துக்குப் பலருக்கும் ஆதர்சமாக விளங்கவல்லன. நாட்டு விடுதலை, பெண் விடுதலை, தமிழ்ச் சமூக முன்னேற்றம், தமிழ்மொழியின் ஏற்றம் என்று பல்வேறு பரிமாணங்களை அவருடைய எழுத்தின் வீச்சு காட்டும். இத்தகைய சிறப்பு வாய்ந்த — வாராது போல் வந்த — மாமணியை நேரில்கண்டு, பழகி, அவரையே தம்முடைய இலக்கிய வழிகாட்டியாக வரித்துக்கொண்டு அவருடன் 'சுற்றம் நீ, பிரானும் நீ' என்னும்படியாகப் பழகக் கொடுத்து வைத்திருந்தது வ.ரா.வுக்கு. பாரதியார் கவிதையில் சாதித்த சாதனையை, அவருடைய சீடரான வ.ரா. உரைநடையில் சாதித்தார் என்று இன்று நாம் மதிப்பிடமுடிகிறது. இதற்கு நாம் அறியவேண்டிய வரலாற்றுப் பின்புலம் ஒன்று உண்டு. அதுதான் மகாகவி பாரதியார் என்று, பாரதியார் பெருமையை வ.ரா. நிலைநாட்டியதாகும்.

### வ.ரா. காட்டும் பாரதி அறிமுகம்

அந்நாட்களில், பாரதியாரைப் பற்றி அவருடன் பழகி எழுதப்பட்ட ஆதாரபூர்வமான நூல் என்ற பெருமைக்குரியது, வ.ரா. எழுதிய மகாகவி பாரதியார் என்ற நூலாகும். இந்த நூல் 1944-இல் நூல் வடிவில் வெளிவந்தது. 1933-34 ஆம் ஆண்டுகளில் காந்தி இதழ் வாயிலாக சுப்பிரமணிய பாரதியார் என்ற தலைப்பில் வ.ரா. முதலில் கட்டுரைகளாக எழுதினார். இந்த நூலில் பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கை மிக விரிவாகக் கூறப்படுகிறது. பாரதியாரை எதார்த்த மனிதராகச் சித்திரிப்பதில் வ.ரா. வெற்றி பெற்றுள்ளார். தம் நண்பர் ஒருவருக்கு - கேசவன் என்ற பெயருடைய நண்பருக்கு - பாரதியின் வரலாற்றை ஆசிரியர் சொல்லுவதைப் போல இந்த நூல் தொடங்குகிறது. புதுச்சேரியில் பாரதியார், அரவிந்தருடனும், வ.வே.சு. ஐயருடனும் சேர்ந்து இலக்கிய வாழ்க்கை நடத்திய காலகட்டத்தில், தம்முடைய 22-ஆம் வயதில் வ.ரா. மகாகவியைச் சந்திக்கிறார். பாரதியாரைப்

பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்களில் வ.ரா.வின் நூல் தனித்துவம் மிக்கது. பாரதியுடன் கொண்டிருந்த அணுக்க உறவு காரணமாக, அவரைப் படிப்பவர் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் வ.ரா.

'பாரதியார் வீடு தெரியுமா?' என்றேன்.
'பட்டணத்து எஜமான், பாட்டு பாடுகிற
எஜமான், மீசை வச்சிருக்காங்களே,
அவங்கதானே? அவுங்க இருக்கிற
வீடு நல்லாத் தெரியுமே' என்றான்.
'மீசை வச்சிருக்காங்களே அவுங்களைக்' கண்டேன்.
சட்டை, அங்கவஸ்திரம் முதலியன இருப்பதாகவே
நினைவில்லை. சாஷ்டாங்கமாய் நமஸ்காரம்
செய்தேன். புலி பாய்வதைப் போலப்பாய்ந்து
என்னைத்தூக்கி நிறுத்தி, 'நமஸ்காரம் வேண்டாம்.
நீர் யார்? வந்த காரியத்தைச் சொல்லும்' என்றார்.

சிறிது நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்தேன். அவரது பொலிவு நிறைந்த முகத்தை அப்படியே கண்ணால் விழுங்கிக் கொண்டிருந்தேன்'. (மகாகவி பாரதியார். பக்.5,6).

இந்த வரிகளில் முதன்முதலாகத் தாம் பாரதியாரைச் சந்தித்த நிகழ்ச்சியை நண்பர் கேசவனுக்கும், படிக்கும் வாசகர்களுக்கும் அறிமுகப்படுத்துவதுடன், பாரதியாரைப் பற்றிக்கோட்டுச் சித்திரம் ஒன்றைப் படிப்பவர் மனத்தில் வ.ரா. உருவாக்கி விடுகிறார்.

'பாரதியாருக்கு மீசை உண்டு. அது பார்க்க. ரொம்ப நேர்த்தியாகவிருக்கும். கண்ணைக் குத்தும் கெய்ஸர் மீசையல்ல; கத்தரிக்கோல்பட்ட 'தருக்கு' மீசையல்ல. தானாக வளர்ந்து பக்குவப்பட்டு, அழகும் அட்டஹாசமும் செய்யும் மீசை. அவரது வலது கை எழுதாத நேரங்களிலெல்லாம் அநேகமாய் மீசையிலிருக்கும். மீசையை முறுக்குவதாகத் தோன்றாது; மீசைக்கு 'டிரில்' பழக்கிக் கொடுப்பது போலத் தோன்றும்.'

'பாரதியார் இருக்கிற இடத்தில், கூட்டத்துக்கு ஒரு நாளும் குறையிருக்காது. கந்துவட்டிக் கடையில் கூட அவ்வளவு கூட்டம் இருக்காது. குறைந்தது நாலைந்து பேர்களாவது இருப்பார்கள்'.

'புதுச்சேரி வீதியில் பாரதியார் நடக்கும்பொழுது திண்ணையில் உட்கார்ந்திருப்பவர்கள் அநேகமாய் எழுந்து நிற்பார்கள்; கும்பிடு போடுவார்கள். நின்று பதில் கும்பிடு போட்டுவிட்டு, சிறிதளவு க்ஷேம சமாசாரம் விசாரித்த பின்னர் தான், அந்த இடத்தை விட்டுப் பாரதியார் நகர்வார்'. (மகாகவி பாரதியார். பக்.62,65).

தொடக்கத்தில் பாரதியாரை நம் கண்முன் நிறுத்துவதற்காக, தாம் முதலில் பார்த்த அனுபவ வெளிப்பாடாகக் கொடுத்த வருணனையிலிருந்து அடுத்து பின்வரும் வருணனை மாறுபடுகிறது. வாழ்க்கை வரலாற்றாசிரியரின் ஆளுமை வளர்ச்சியையும், பாரதியிடம் அவருக்குள்ள ஈடுபாட்டையும் இவை ஒருங்கே புலப்படுத்துகின்றன. 'பாரதியாரை நேரில் பார்த்துப் பழகக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறை நம்மில் பலருக்கு உண்டு. இந்தப் புத்தகத்தைப் படித்தால் அந்தக் குறை தீர்ந்துவிடும்' என்று வ.ரா.வின் மகாகவி பாரதியார் நூல் வெளி வந்தபோது கல்கி பாராட்டி எழுதியது இங்கு நினைவு கூரத்தக்கது.

## மகாகவி பாரதியார் நூல் உருவான வரலாற்றுப் பின்னணி

இந்த வாழ்க்கை வரலாற்று நூலை நிகழ்ச்சிகளின் கோவையாக அமைக்காமல், சுவையான விளக்கங்களுடனும் கேள்வி-பதில் மூலமான காரணங்களின் மூலமும் வ.ரா. எழுதியுள்ளார். 1934-ஆம் ஆண்டு கூட்டம் ஒன்றில் வ.ரா., பாரதியாரை ஷேக்ஸ்பியர், ஷெல்லி, தாகூர் போன்ற கவிஞர்களுடன் ஒப்பிட்டு அவர்களைவிடவும் பாரதி உயர்ந்தவர்; பாரதி மகாகவி என்று கூறினார். இந்தப்பேச்சு 1934 மணிக்கொடி இதழில், வ.ரா.வுடன் மூன்று நாட்கள் என்ற தலைப்பில் ந. ராமரத்தினம் என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்தது. இதனையடுத்து தினமணி வெளியிட்ட பாரதி மலரில், நெல்லை நேசன் என்ற பெயரில் பி.ஸ்ரீ. 'வீரமுரசு', என்ற கட்டுரையில் 'பாரதி, மகாகவி அல்லர். அவரை நல்ல கவி என்று வேண்டுமானால் சொல்லலாம்' என்று குறிப்பிட்டு இருந்தார். இது அந்த நாளில் பாரதியாரின் இலக்கிய இடம் குறித்த விவாதம் என்பதோடு முதன் முதலில் தமிழில் தொடங்கிய இலக்கிய சர்ச்சையும் ஆகும். பாரதியாரின் கவிதைச்சிறப்பு

நன்கு அறியப்படாமல் இருந்த காலகட்டத்தில், வ.ரா. மிகுந்த துணிச்சலுடன், பாரதியாரின் கவிதைகளை மதிப்பிட்டு அவருடைய இலக்கிய இடத்தை உலகக்கவிஞர்களுடன் ஒப்பிட்டு நிறுவினார். அத்துடன் ஆழமான இலக்கிய விவாதத்தைத் தொடங்கி வைத்து ஆக்கபூர்வமான விமர்சனத்தை முன்வைத்தார். இதற்கு முன்னதாகவே 1930இல் வ.ரா. சிறையிலிருந்தபோது எழுதிய 'What is Poetry' என்ற நீண்ட ஆங்கிலக் கட்டுரையில், கவிதையைப் பற்றிய தம்முடைய உலகளாவிய விமர்சனக் கண்ணோட்டத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார். தமிழனுக்குத் தன் மொழியில், இலக்கிய வளத்தின் பெருமையையும், சிறப்பினையும் உணர்த்த வேண்டிய, அரசியல் ரீதியாக மட்டுமின்றி, பண்பாட்டு நிலையிலும் அடிமை நிலையிலிருந்த இந்தியனுக்கு - தமிழனுக்கு - உணர்த்த வேண்டிய கடமை அன்றைய தேசபக்தனுக்கு, பத்திகையாளனுக்கு, இலக்கிய ஆசிரியனுக்கு இருந்தது. மகாகவி பாரதியார், 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' என்று கூறித் தமிழனுக்கு, அவன் பெருமையை உணர்த்திய அதே வழியில், பாரதியாரையே உணராத தமிழனுக்கு, அவரை மகாகவியாக இனங்கண்டு வெளிப்படுத்த வேண்டிய இலக்கியப் பணியை வ.ரா. செய்தார்.

## வ.ரா. - கல்கி இருவருக்கிடையிலான பாரதி விவாதம்

மணிக்கொடி, தினமணி இவற்றில் பாரதியார் பற்றி வந்த செய்திகளை முன்வைத்து, இவற்றில் எது சரியான கருத்து என்ற வினாவை இலக்கிய மாணாக்கன் என்பவர் ஆனந்த விகடனில் கேள்வி கேட்டிருந்தார். பாரதியாரையும், வ.வே.சு. அய்யரையும் தம் முன்னோடிகளாகக் கொண்டு சிறுகதை, புதுக்கவிதை ஆகிய இலக்கிய வகைகளில் சோதனை முயற்சியை மேற்கொண்டிருந்த ந. பிச்சமூர்த்தியும், கு.ப. ராஜகோபாலனும், பி.ஸ்ரீ.யின் கருத்தை மறுத்து தினமணி இதழில் ஒரு கடிதம் எழுதினார்கள். இலக்கிய மாணாக்கனின் கேள்விக்குப் பதில் சொல்லும் வண்ணம் கல்கி, ஆனந்த விகடனில் பின்வருமாறு எழுதினார்: (3.11.1935, சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 439).

'ஷேக்ஸ்பியரையும், ஷெல்லியையும், தாகூரையும் காட்டிலும் பாரதியார் உயர்ந்தவர். அவர்களது கவிதைகள் எல்லாம் சேர்ந்து பாரதியாரின் ஒரு வரிக்கு ஈடாகாது' என்று

யாராவது வெளியிட்டிருந்தால் அவருக்கு இலக்கியம், கவிதை இவைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்பது வெளிப்படை. அவர் நிரக்ஷரகுக்ஷி (எழுத்து வாசனை இல்லாதவர்) என்று சந்தேகிப்பதற்கு இடம் உண்டு. அவர் ஷெல்லியையும், தாகூரையும் படித்திருப்பார் என்பது நம்பத்தக்கதல்ல. ஒருவேளை படித்திருந்தாலும் ஒரு வரிகூட அர்த்தமாகாமலே படித்திருக்கவேண்டும். அவர் பாரதியின் கவிதையைப் படித்து ரசித்தார் என்பதும் சந்தேகத்துக்கு இடமாகும். தேசாபிமானமும், பாஷாபிமானமும் பகுத்தறிவை மறைத்துவிட இடம் கொடுக்கலாகாது. பாரதியை ஷெல்லியுடன் ஒப்பிடலாம். ஆனால் ஷேக்ஸ்பியருடனும், தாகூருடனும் ஒப்பிடுதல் கூடச்சரியல்ல. வால்மீகி, திருவள்ளுவர், காளிதாசர், கம்பர், ஷேக்ஸ்பியர், தாகூர் ஆகியவர்கள் நீண்டகாலத்துக்கு ஒரு முறையே தோன்றி உலகத்துக்கே பொதுவாய் விளங்கும் கவிகள். ஷெல்லி, பாரதி போன்றவர்கள் அந்தந்த தேசத்திற்கே சிறப்பாக உரியவர்கள். இலக்கிய ஆராய்ச்சியும் கவிதை உணர்வும் சொற்ப அளவில் உள்ளவர்களுக்குக்கூட இவ்விஷயத்தில் சந்தேகம் ஏற்படக்காரணம் இல்லை".

கல்கியின் இந்தச் சொற்களால் மனம் பாதிக்கப்பட்டாலும், ஆக்கபூர்வமான விமர்சனமாக வ.ரா. சுதேசமித்திரன் இதழில் 'பாரதியும் இலக்கிய மதிப்புரையும்' (சுதேசமித்திரன் 30.11.1935) என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். இந்தக் கட்டுரை வ.ரா.வினுடைய எழுத்து வன்மையையும், திறனாய்வுப் பாங்கையும் ஒருங்கே எடுத்துக்காட்டுவதாகும். தமிழ் இலக்கிய உலகில் நடைபெற்ற செழுமையான பாரதி பற்றிய முதல் இலக்கிய விவாதமும் இதுவேயாகும். வ.ரா. தாமும் எழுதியதுடன், தம் சீடர்களையும் இந்த விவாதத்தில் பங்குபெறச் செய்தார். தீவிரமான இலக்கியநாட்டம், தேசப்பற்று, சமூகச் சீர்திருத்தம், இலக்கியத்தில் சோதனை முயற்சிகளைத் துணிந்து செய்யும் மனோபாவம் ஆகியவற்றோடு செயற்பட்ட வ.ரா.வுக்கும் அவருடைய சீடர்களுக்கும் மணிக்கொடி, காந்தி, தினமணி போன்ற பத்திரிகைகள் களமாக அமைந்தன. இலக்கியத்தின் நோக்கம், சமூகத் தீமைகளை இனங்கண்டு, அவற்றை எதிர்த்துப் போராடி, வாழ்க்கையைப் பொருளுடையதாக ஆக்குவதாகும் என்று வ.ரா.வும், அவருடைய சீடர்களும் உண்மையாக நம்பினர். இந்தத் தீவிர நாட்டத்தை இலக்கியத்தின் மையமாக வைத்து

அதன் வடிவத்தில் பற்பல சோதனைகளைச் செய்து பார்க்க அந்த நாளில் மணிக்கொடி, களமாக அமைந்தது. அதற்கு வ.ரா. வழிகாட்டி, தலைமை தாங்கினார். தங்களுடைய இலக்கியப் பணிகளுக்கெல்லாம் பாரதியாரே முன் மாதிரி என்று வ.ரா.வும், அவரால் உருவாக்கப்பட்ட மணிக்கொடிக்காரர்களும் பூரணமாக நம்பினர். இந்த அடிப்படையிலேயே பொழுதுபோக்கையும், மகிழ்வூட்டலையும் தலைமை நோக்கமாகக் கொண்டு, வணிக நோக்குடன் செயற்பட்ட அனைத்துத் தரப்பு முயற்சிகளையும் வ.ரா.வும், அவருடைய சகாக்களும் எதிர்த்துப் போராடி வந்தனர். இந்தக் கருத்து மோதலின் ஓர் அங்கமாகவே, மகாகவி பாரதியார் சர்ச்சையை உணரவேண்டும். கல்கி (ரா. கிருஷ்ணமூர்த்தி) ஆசிரியர் பொறுப்பிலிருந்த ஆனந்த விகடனின் மனோபாவம் பொழுதுபோக்கை முதன்மைப்படுத்தி வந்ததுடன், பாரதியாரின் இலக்கிய இடத்தையே கேள்விக் குறியாக்க முயன்றபோது, வ.ரா. தீவிரமாக எதிர்த்துப் போராடினார். பாரதியாரை, மகாகவி பாரதியார் என்று நிலைநாட்டிய பெருமை வ.ரா.வையே சாரும்.

## வ.ரா.வின் விமர்சனப்பணி

கல்கியின் நிலைப்பாட்டிற்கு ராஜாஜியுடனான தொடர்பும், டி.கே.சி.யுடனான இலக்கியப் பிணைப்பும் காரணமாகும். 'எழுத்து வாசனையே அற்றவர்' என்று கல்கி எழுதியவுடன் வ.ரா.வினுடைய தீவிர எழுத்து கட்டுரையாகச் சுதேசமித்திரனில் வெளிப்பட்டது. இதற்கு மறுப்பாகக் கல்கி, சுதேசமித்திரன் இதழில் (7.12.1935) 'பாரதியும் இலக்கிய விமர்சனமும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதித் தம் கருத்தை முன் வைத்தார். வ.ரா. இலங்கையிலிருந்து (வீரகேசரி இதழுக்கு ஆசிரியராகச் சென்றபோது- 3.12.1935) கு.ப. ராஜ கோபாலனுக்கு எழுதிய கடிதத்தில், பாரதியார் விவகாரத்தில், தம்முடைய சீடர்களும் பங்கு பெற வேண்டும் என்ற தம் விருப்பத்தை எழுதியிருந்தார். 'பாரதியார் அபூர்வமான மேதாவி ஆனதாலும், உலகக்கவி ஆனதாலும் அவருடைய மகிமையை எல்லோருக்கும் விளக்கிக் காண்பிப்பது கொஞ்சம் கஷ்டமானது; ரா.கியின் வேலை எளிது. நம்முடைய வேலை கொஞ்சம் கஷ்டமானது' என்று வ.ரா. எழுதியதால் தூண்டுதல் பெற்று, சிட்டி, பி.எஸ். ராமையா, ந. சிதம்பர சுப்ரமணியன், இளங்கோவன் ஆகியோர் தினமணியிலும், சுதேசமித்திரனிலும்

பாரதியாரை மகாகவி என்று நிறுவுவதற்கு ஏராளமாக எழுதினார்கள். இக்கட்டுரைகளில் முதலில் வ.ரா.வும், பின்னர் சிட்டி போன்றவர்களும் கவிதைத் திறனாய்விற்கு வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளை முன் வைத்தே விவாதித்துள்ளமை அறியத்தக்கது. கவிதைத் திறனாய்வில் உலகெங்கிலும் பின்பற்றப்படும், அளவுகோல்களை வைத்தே வ.ரா. இப்பிரச்சினையை அணுகினார். இதற்கு முன்னர் வ.வே.சு. ஐயர் கம்பனை மகாகவியாக நிறுவ, முன் வைத்து விவாதித்த கவிதைக் கோட்பாடுகளும், சிறையிலிருந்தபோது வ.ரா. தாமே எழுதிய 'What is pootry' என்ற கட்டுரையில் முன்வைத்த அளவுகோல்களும், பாரதி விவகாரத்தில் வ.ரா.விற்குத் துணைபுரிந்தன. வ.ரா.வின் விவாதத்தில் காணப்பட்ட வலிமையும், நேர்மையும், முறையான விமர்சனமும், கல்கியைப் பின்வாங்கச் செய்தன. வ.ரா. சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரைக்குப் பதில் சொல்வது போல, கல்கி எழுதிய கட்டுரையில் (7.12.1935) இந்தத் தொனி வெளிப்பட்டது. 'தாங்களும் நெல்லை நேசனும் விவாதித்து முடிவு செய்து கொள்ளுங்கள்' என்று வ.ரா.விற்குக் கல்கி அக்கட்டுரையில் பதில் கூறினார். இதன் பின்னர் பாரதியார் மகாகவியா, இல்லையா என்ற விவாதத்தில் கல்கி பங்கேற்கவில்லை. கல்கி பின்னர் பாரதிக்கு மணிமண்டபம் கட்ட நிதி திரட்டியது, விழா எடுத்தது, வ.ரா.வுக்கு மணிவிழா நடத்த முற்பட்டது என்பன யாவும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஆனபோதிலும் முதலில் அவர் பாரதி விவாதத்தில் எதிர்வாதம் செய்ததும் உண்மை.

கல்கியின் இந்த விவாதத்தால் வ.ரா.வின் விமர்சனப் பணி மிகுதியாக வெளிப்பட்டது. பின்னர் மீண்டும் கல்கியின் கட்டுரைக்கு மறுமொழி உரைப்பது போல, சுதேசமித்திரன் இதழில் (15.12.1935) 'பாரதியும் இலக்கிய மதிப்புரையும்' என்ற தலைப்பில் எழுதினார். வ.ரா.வின் இக்கட்டுரை சுவையாகவும் அவரின் வாதத்திறமையை எடுத்துரைப்பதாகவும் அமைந்து, அவருடைய எழுத்துத் திறமையை நிலைநாட்டியது. தொடர்ந்து காந்தி இதழிலும் இதே காலகட்டத்தில் வ.ரா. பாரதியார் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை எழுதினார். காந்தி இதழ்களில் எழுதிய கட்டுரைகளே 1944 ஆம் ஆண்டில் மகாகவி பாரதியார் என்ற பெயரில் நூலாக வெளிவந்தன. வ.ரா.வின் ஆக்கபூர்வமான விமர்சனக் கட்டுரைகளாக சுதேசமித்திரன்

இதழ்களில் வெளிவந்தவை, இன்றும் நூலாக வெளிவராதது பெருங்குறையே.

## பாரதியின் மறுமலர்ச்சி நோக்கம்

'தமிழ்ப் பண்டிதர்களாலும், ஏனையோர்களாலும் பாயாய்ச் சுருட்டி வைக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் இருக்கையில் தமது தனித்த கவிதை ஆற்றலைக் கொண்டு, தமிழிற்கு உயிர் கொடுத்து, தமிழர்களை மரண மயக்கத்திலிருந்தும், பயத்திலிருந்தும் தட்டி எழுப்பியவருக்கு மகாகவி என்ற பட்டம் தரலாகாதா!' என்று வ.ரா. வினவுகிறார். தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்; புதிய சமுதாய வாழ்விற்கு முன்னோடி; இலக்கியத்தின் உயிர்நாடியைக் கண்டு, காட்டும் திறமை பெற்றவர்; இலக்கியவாதிகள் பலரிடமும், தனித்தனியே காணப்படும் சிறப்புக்கூறுகள் அப்படியே முழுவதுமாக ஒருசேர அமையப்பெற்றவர் என்று வ.ரா. விவாதிக்கிறார். இலக்கியவாதி தன்னுடைய மொழியின் மறுமலர்ச்சிக்கும், சமூகத்தின் மேன்மைக்கும் உழைக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் பாரதியைப் போற்றும் வ.ரா., தம் படைப்புக்கள் முழுவதிலும் தமிழ் மொழியின் மறுமலர்ச்சி, சமுதாய முன்னேற்றம் என்ற இரு கருத்துக்களையே ஊடும் பாவுமாக இணைத்துள்ளமை அறியத்தக்கது.

## பாரதியின் சமுதாயநோக்கு

மகாகவி பாரதியார் விவாதத்தின்போது அவருடைய நண்பர்கள் பாரதியின் ஆளுமையை, தேசபக்தியை முதன்மைப்படுத்தி விவாதித்தனர். வ.ரா. மட்டுமே, பாரதியின் சமுதாய உணர்வை அழுத்தமாக முன்வைத்து விவாதித்தார் என்பதும் அறியத்தக்கது. 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம் என்ற மகாகவியின் பாடலை இந்த விவாதத்தின்போது வ.ரா. மட்டுமே மேற்கோள் காட்டி வாதிட்டது இதனை வலியுறுத்தும். அதனைப் போலவே பாரதியை வேதாந்தக் கவியாக ராஜாஜி காட்ட முயன்ற போது வ.ரா. அதை எதிர்த்து வாதிட்டு, உலகக் கவி என்று நிலைநாட்டினார். 'பாரதி தேசபக்தராக வாழ்க்கையைத் துவங்கி, கவியாக மலர்ந்து, இறுதியில் பக்குவமான வேதாந்தியாகப் பழுத்திருக்கிறார். இந்த மாறுதல் இந்த

நாட்டின் பண்பாட்டைத் தழுவியதே ஆகும்" என்று ராஜாஜி எழுதியதற்கு மறுப்புரை போல 1934ல் வ.ரா. காந்தி இதழில் 'வேதாந்தச் சிமிழில் அடைக்க வேண்டாம்' என்று எழுதினார். 'பாரதியார் வேதாந்தியே அல்ல. அவர் மகாகவி. உலகத்தை ஆண்டு அனுபவிக்க வந்த இணையற்ற கலைஞன். எனவே ராஜாஜி போன்றவர்கள் செப்பிடு வித்தை செய்து பாரதியாரை வேதாந்தச் சிமிழிலே போட்டு அடைக்க வேண்டாம்" என்ற வரிகளில் பாரதியாரைச் சமூக மறுமலர்ச்சிக் கவிஞன், மனித மேன்மையைப் பாடும் கவிஞன் என்று வ.ரா. காட்டும் பரந்த நோக்கை அறிய முடிகிறது. இவையெல்லாம், பாரதியாரை மகாகவியாக நிறுவுவது, அவன் கவிதைகளை ஆக்கபூர்வமாகத் திறனாய்வது, சமூகக் கண்ணோட்டத்தில் மதிப்பிடுவது என்ற வ.ரா.வின் ஆக்கபூர்வமான விமர்சன முயற்சிகளை வெளிப்படுத்தும். அத்துடன் கவிதைத் திறனாய்வில் அவர் பின்பற்றிய ஒப்பீட்டு அணுகுமுறை, சமுதாய அணுகுமுறை என்ற நெறிகளையும் ஒருங்கே காட்டும்.

மகாகவி பாரதி நூலின் இறுதிப்பகுதியில், ராஜாஜி, திரு.வி.க. போன்ற பெரியார்கள் 1943ஆம் ஆண்டு அளவில் பாரதியாரைப் பாராட்டிய கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறார். 'இது பாரதி சகாப்தம். தமிழர்களின் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் பாரதி, உன்னதமான புரட்சியை உண்டாக்கிவிட்டார். பாரதியாரின் கவிதை, தாகூரின் கீதாஞ்சலியைக் காட்டிலும் உயர்ந்தது. பாரதி உலக மகாகவி" என்று திரு.வி.க. சொல்லுவதை எடுத்துக்காட்டி, பாரதியார் உலக மகாகவி என்று சொல்ல இந்தப்' பெரியார்களுக்கு இருபது வருஷம் பிடித்தது (மகாகவி பாரதியார், பக்.173-174) என்று கூறுவது பாரதியின் இலக்கிய பீடம் குறித்து முன்பு நடந்த விவாதத்தை நினைவூட்டுவதாகும்.

## பாரதியாரின் கவிதை மதிப்பீடு

'மகாகவி பாரதியார்' நூலைப் பாரதியாரின் வாழ்க்கையில் சில குறிப்புகளைத் தந்து, அவரைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் வ.ரா. எழுதினார். ஆகவே பாரதியாரின் கவிதைகளை இது மதிப்பிடும் போக்கில் அமையவில்லை என்றாலும் இறுதி மூன்று இயல்களில் பாரதியின் எழுத்துக்களை மதிப்பீடு செய்கிறார். 'பாரதியார் பிறந்த காலத்தில் தமிழ் மொழியும்

ஜனசமூகமும் அவ்வளவாக நல்ல நிலையில் இல்லை. ஏங்கிக் கிடந்த தமிழர்கள், தூங்கிக் கிடந்த தமிழ்மொழி - இதுதான் பாரதியார் கண்டது. இந்த நிலையிலிருந்த தமிழர்களை மாற்றி, ஊக்கமும் உள்வலியும் ஏற்படும்படியாகச் செய்வது மிகவும் அசாத்தியமான வேலையாகும். ஆனால், இந்த வேலையைப் பாரதியார் வெற்றிகரமாகச் செய்து முடித்தார். தமிழன் தலைநிமிர்ந்து நடக்கும்படியாக, அவனை ஆண்மகனாக ஆக்கிய பெருமை, பெரும்பான்மை பாரதியாரைச் சேர்ந்ததாகும். தமிழன் என்பதற்குப் பதிலாக, எந்த நாட்டினுடைய பெயரைக் கொடுத்தாலும், பாரதியாரின் கவிதை, அந்த நாட்டுக்குப் பொருத்தமுள்ளதாக இருக்கும். எனவே அவர் சர்வதேசக் கவி; அதாவது உலகமகாகவி (மகாகவி பாரதியார், பக். 186-187). மேலே கண்டவரிகளில், பாரதியைப் பல்வேறு கோணங்களில் வ.ரா. காட்டுவது பாரதியின் எழுத்துக்களை மதிப்பீடு செய்வதாகும்.

## பாரதியின் தமிழ் மொழி, தமிழன் ஈடுபாடு

புதுச்சேரிக்குச் சென்றபோது, வ.ரா. அரவிந்தரைப் பார்க்க விரும்பினார். அரவிந்தரைப் பார்க்கப்போன அனுபவத்தை மகாகவி பாரதியார் நூலின் தொடக்கத்தில் வ.ரா. விளக்குகிறார். வங்காளிகளுக்கு எப்பொழுதுமே தன்னைப்பற்றிய கர்வமும் இந்தியாவின் பிற மாநில மக்களைப் பற்றிக் குறைவான மதிப்பீடும் உண்டு. இதை வலியுறுத்துவது போல அரவிந்தரின் முன்னிலையில் நடந்த நிகழ்ச்சியை வ.ரா. விளக்குகிறார். 'ஒரு மூலையில், ஒதுக்குப்புறத்தில், அரவிந்தர் தன்னந்தனியே உட்கார்ந்து கொண்டிருந்தார். அரவிந்தரை நமஸ்கரித்துவிட்டு நாங்களும் உட்கார்ந்தோம். பேச்சை யாரும் துவங்கவில்லை. பாரதியார் சட்டென்று எனக்குத் துணைபுரிந்தார்.

'தமிழ்நாட்டு தேசபக்தன்" என்று என்னைப் பாரதியார், அரவிந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தார். 'சர்க்காருக்கு மனுப்பண்ணிக்கொள்ள அவருக்குத் தெரியுமல்லவா?' என்று அங்கிருந்த வங்காளி இளைஞர்களில் ஒருவன் சொல்லிவிட்டுச் சிரித்தான். பாரதியாரைத் தவிர மற்றெல்லாரும் சிரித்தார்கள். நான் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். பாரதியாரின் முகத்தில் ஈ ஆடவில்லை. 'அடிமைகளிலே, வங்காளி உயர்த்தி தமிழன் தாழ்த்தியா?' என்று அவர் படீரென்று போட்டார்

தலைநிமிர்ந்து கொள்வதற்கு எனக்குத் தைரியம் உண்டாயிற்று. (மகாகவி பாரதியார், பக்-11) மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சியில், 'அடிமைகளுக்குள் வேறுபாடில்லை; அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கு அனைவரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்' என்ற பாரதியின் கருத்து வெளிப்படுவதை வ.ரா. வலியுறுத்துகிறார். அதே நேரத்தில், தமிழர்களுக்குத் தலைக்குனிவு, பழி வருமாயின் எதிர்த்துக் குரல் கொடுக்கும் பாரதியாரின் தமிழ்ப்பற்றையும் வ.ரா. எடுத்துரைக்கிறார். தமிழர்களைத் தமிழ் மொழி மூலமாகத்தான் உயர்த்தமுடியும் என்று உணர்ந்து, அதற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் பாரதியார். பாரதியாரின் இந்தக்கோட்பாடு - வாழ்க்கை நோக்கம் - வ.ரா.வை வெகுவாகப் பாதித்தது. தம் எழுத்துக்கள் பலவற்றிலும் பாரதியாரின் இந்தக் கோட்பாட்டை வ.ரா. எதிரொலிக்கிறார். வ.ரா.வும் தம் வாழ்நாள் முழுவதையும், தமிழ், தமிழன் நலன் என்பவற்றிற்காகவே செலவிட்டார். 'பாரதி கிறுக்கு' என்று வ.ரா.வை பெ.தூரன் மதிப்பிட்டது பொருத்தமானது.

## பாரதி - மகாத்மா காந்தி சந்திப்பு - வ.ரா. உடனிருத்தல்

1919ஆம் ஆண்டு காந்தியடிகள் சென்னைக்கு வந்தபோது, பாரதியார் அவரைச் சந்தித்தார். இந்தச் செய்தியைத் தமிழர்களுக்கு முதன்முதலாகச் சொன்னவர் வ.ரா. இந்த நிகழ்ச்சியின்போது வ.ரா. உடனிருந்தார். 'காவலாக நிறுத்தப்பட்டிருந்த வ.ரா.வைத் தாண்டிக் கொண்டு பாரதியார் உள்ளே சென்று காந்தியடிகளைச் சந்தித்தார்'. இந்த நிகழ்ச்சியின்போது ராஜாஜி சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்ற தம்முடைய கண்டனத்தையும் வ.ரா. தம் நூலில் கூறுகிறார். பாரதியாரைத் தமிழ்நாட்டுக் கவிஞர் என்று முறையாகக் காந்தியடிகளுக்கு ராஜாஜி அறிமுகம் செய்து வைத்திருக்கவேண்டும்; பாரதி அமர்வதற்கு ஆசனம் கொடுத்திருக்க வேண்டும்; இந்த இரு செயல்களையும் ராஜாஜி செய்திருக்கவேண்டும். ஆனால் செய்யவில்லை என்று வ.ரா. சாடுகிறார். அதே நேரத்தில் பாரதியின் மேன்மையைக் காந்தியடிகள் இனங்கண்டு கொண்டார் என்பதையும் வ.ரா. விளக்குகிறார்; 'பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும், என்பார்கள். மேதாவியான காந்தி, மேதாவி பாரதியாரை, அவரது முகப்பொலிவிலிருந்தே தெரிந்து கொள்ள முடியாதா?

மேலும் தங்கள் இயக்கத்தை ஆசிர்வதிக்கிறேன்' என்று உள்ளன்போடு பாரதியார் சொன்னபொழுது தமது இயக்கத்தை ஆசிர்வதிப்பதாகச் சொல்லக்கூடிய ஒருவர் பெரிய மனிதனாகத் தான் இருக்க வேண்டும் என்று காந்தி முடிவு செய்து கொள்ளமுடியாதா?' (மகாகவி பாரதியார், ப.163). வாழ்க்கை வரலாற்று நூலுக்கு வேண்டிய அடிப்படைக் கூறுகளுள் ஒன்றான மனிதர்களின் ஆளுமையை நுணுக்கமாகக் கண்டறிவது, வ.ரா.விற்குக் கைவந்த கலையாக உள்ளது. மேலே குறிப்பிட்ட காந்தி - பாரதியார் சந்திப்பில், அவர்களையும் ராஜாஜியையும் வ.ரா. சரியாகக் கணித்திருப்பதே இதற்கு நல்ல சான்று. நடைச்சித்திரம், தமிழ் நாட்டுப் பெரியார்கள். போன்ற நூல்களை முன்னமே எழுதித் தம்முடைய இந்த ஆற்றலை வ.ரா. அழுத்தமாக வளர்த்துக் கொண்டார். அந்தப்பண்பு மகாகவி பாரதியார் நூலில் முழுமை பெற்றிருக்கிறது.

வ.ரா. எழுதிய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய படைப்புக்கள் பற்றிய திறனாய்வையும் கொண்டதான மகாகவி பாரதியார் நூல் இன்றுவரை வித்தியாசமான வாழ்க்கை வரலாற்று நூலாக விளங்குகின்றது. வாழ்க்கையைக் கூர்ந்து பார்த்து நுட்பமாக மனிதச் சித்திரங்களை உருவாக்கக்கூடிய வ.ரா.வின் எழுத்தாற்றலுக்கு இந்த நூல் நல்ல சான்று.

# இயல் 4

# வ.ரா.வின் படைப்பிலக்கியம்

## முன்னுரை

வ.ரா. நாவல், சிறுகதை ஆகிய படைப்பிலக்கியங்களைத் தந்துள்ளார். அவருடைய சிறுகதைகள் கற்றது குற்றமா? என்ற பெயரில் (1944) நூலாக வெளிவந்துள்ளன. இன்னும் நூல் வடிவம் பெறாத சிறுகதைகளும் உள்ளன. அவர் படைத்த நாவல்கள் சுந்தரி (1917), விஜயம் (1944), சின்னச்சாம்பு (1942), கோதைத்தீவு (1945) ஆகியன. இந்த நாவல்களில் பெண்களின் சமூகப் பிரச்சினைகள் மிகத் தீவிரமாகப் பேசப்படுகின்றன. இளம் வயதில் மணமாகி, விவரம் அறியுமுன் கணவனை இழந்து விதவையாகிப் போன பெண்ணுக்கு மறுமணம் வேண்டும் என்பதைச் சுந்தரியிலும், சின்னச்சாம்புவிலும் வலியுறுத்துகிறார். மறுமணம் நடைபெற்று, மணமக்கள் நலமாக வாழ்வதை இரண்டு நாவல்களும் காட்டுகின்றன. மறுமணம் நடக்காத போது, சந்தர்ப்பச் சூழ்நிலையால் இளம் விதவை நெறிபிறழ்வதை விஜயம் நாவலில் காட்டுகிறார். பெண்களுக்குச் சொத்துரிமையும், நாட்டை ஆளும் உரிமையும் கிடைத்தால், நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதைக் கோதைத்தீவு நாவலில் உயர் கற்பனை வகையில் படைத்துள்ளார். கோதைத் தீவு தவிர ஏனைய நாவல்கள் விடுதலைக்கு முற்பட்ட தமிழ் நாட்டின் கிராம, நகர வாழ்க்கையை, அதன் குறை நிறைகளுடன் மிக நுட்பமாகக் காட்டுகின்றன. சாதி வேறுபாடு, வர்க்க வேறுபாடு, உழைப்பின் பெருமை, போலி ஆசாரம் பேசும் அந்தணர்களின் வாழ்க்கை முறை, அடிமைப்பட்ட இந்திய வாழ்க்கை என்று பல்வேறு நிலைகளில் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை காட்டப்படுகிறது. கோதைத்தீவு நாவலில் குறிக்கோள் நெறி காட்டப்பட்டாலும், பெண்ணுக்கு ஏற்றமும், மதிப்பும் தராத சமூகத்தின் சீர்கேடுகளை அந்த நாளில் மிகுந்த துணிச்சலுடன் விமர்சன நடப்பியல் முறையில் (Critical realism) வ.ரா. படைத்திருப்பது பெரும் சாதனையாகும். தம் வாழ்நாள் முழுவதும் சமூகத்தளைகளை எதிர்த்துப் போராடி, தமிழின் மேன்மை, சமூக மேம்பாடு, பெண் விடுதலை ஆகிய நோக்கங்களுக்காகவே வாழ்ந்த வ.ரா. தம்முடைய படைப்பிலக்கியங்களிலும் அதே கருத்துக்களை மையமாக வைக்கின்றார்.

விதவைக்கு மறுமணம் நிகழ்த்திக் கதைபடைத்துக் காட்டிய தமிழ் நாவலாசிரியர்கள் அ. மாதவய்யாவும், வ.ரா.வுமே. பெண் விடுதலையின் மிக உயர்ந்த வெளிப்பாடாகக் கோதைத்தீவு அமைந்துள்ளது. பெண்ணுக்குச் சமஉரிமை என்பதுடன், பெண்ணை நுகர் பொருளாக ஆக்கிக் கீழ்மைப்படுத்தும் - பெண்ணைப் பாதம் முதல் கேசம் வரை வருணிக்கும் - பழைய புராண, இதிகாச, இலக்கியப் படைப்புக்களை மறுபரிசீலனை செய்து, தேவையானால் தடையும் செய்து வாழும் சமூகமே சிறந்த சமூகம் என்னும் கருத்தைக் கோதைத் தீவு நாவலில் வ.ரா. முன் வைக்கிறார். பெண்ணைக் கேவலமான நிலையில் விற்பனைப் பொருளாக்கும் முயற்சிகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற வ.ரா.வின் புரட்சிச் சிந்தனை இன்றைய பெண்ணியவாதிகளால் (feminist) மிகவும் கொண்டாடப் படுவதாகும். பெண்ணுக்குச் சொத்தில் சமபங்கு என்ற புரட்சிகரமான கருத்தையும், கோதைத்தீவில் வ.ரா. வலியுறுத்துகிறார். இதற்கு முன்னரே 1928 இல் வெளியான மாயாமேயோ என்னும் நூலிலேயே வ.ரா. இதே கருத்தை வலியுறுத்தியுள்ளது, அவருடை சிந்தனையில் இது ஆழமாகப் பதிந்த ஒன்று என்பதை உணர்த்தும்.

## நாவல்கள் தோன்றிய பின்னணி

வ.ரா. நாவல்கள் எழுதத் தொடங்கிய காலம் 19 -ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும். இந்தக் கால கட்டத்தில் நம்நாடு ஐரோப்பியர்களுக்கு அடிப்பட்டிருந்தது. நம்முடைய மக்கள் கிராமமாயினும், நகரமாயினும் ஒரே மனநிலையில் அடிமை நிலையை மனமார ஏற்றுக்கொண்டு, தேசப்பற்று என்பதே இல்லாமல் இருந்தனர், பழைய உளுத்துப்போன சமூகப் பழக்க வழங்கங்களுடன், சாதிமதச் சண்டைகளோடு இருந்தனர். அத்தனைக்கும் மேலோகப் பெண்களை மிகவும் இழிந்த அடிமை நிலையில் வைத்துத் துன்புறுத்தி வந்தனர். சகோதரி நிவேதிதையின் சந்திப்பிற்குப்பிறகு பாரதியார் பெண் விடுதலைச் சிந்தனையில் தீவிரநாட்டம் கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில், பாரதியாரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்புப் பெற்ற வ.ரா.விற்குப் பெண்விடுதலை உள்ளிட்ட சமூகச் சீர்திருத்தங்களில் தீவிரமான பிடிப்பு ஏற்பட்டது. மேலும் வங்க இலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவரான பங்கிம் சந்திரசட்டர்ஜியின் ஜோடி மோதிரம் கதையை 1914-

இல் மொழி பெயர்த்த வ.ரா.வுக்கு அக்கதையில் வரும் உறிரண்மயி என்னும் பெண் மாந்தர் கல்வி கற்று நாட்டின் அரசனையே தன்னுடைய வாதத்தினால் வெல்லுவது என்பது போன்ற கருத்து, முன்மாதிரியாயிற்று. மேலும் சகோதரி சுப்புலட்சுமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்களின் சமூகச் சீர்திருத்த, பெண் விடுதலை முயற்சிகளும் வ.ரா.வுக்குத் தூண்டுதலாக அமைந்தன. அந்த நாளைய இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும் நாட்டு விடுதலையுடன், பெண் கல்வி, பெண் விடுதலை என்பவற்றையும் ஒரு சேர வலியுறுத்தினர். தம்முடைய இளம் வயதில் படிப்பை விடுத்துத் தேசப்போராட்டத்திற்காகச் சிறை சென்ற வ.ரா.வுக்குத் தலைவர்களில் சமூகச் சீர்திருத்தக் கோட்பாடுகள் வழிகாட்டி யாயின.

அந்த நாளில் நம்முடைய நாடும், மக்களும் 'நெஞ்சில் உரமின்றி,' அஞ்சி அஞ்சிப் பழம்பெருமை பேசி வாழ்ந்த அவலத்தை வ.ரா. ஐம்பது வருஷங்களுக்கு முன் என்ற தலைப்பில் ஆறு பகுதிகளாக 1943–இல் ஆனந்தவிகடனில் எழுதினார். மிகவும் வலிமை வாய்ந்த அந்நாளைய சமூகப் படப்பிடிப்பான இந்தக் கட்டுரைகள் இன்றுவரை நூலாக வெளிவராதது பெருங்குறையே. சுந்தரி, சின்னச்சாம்பு, மழையும் புயலும், புண்ணியமும் பலவீனமும், வ.ரா. வாசகம், மாயாமேயோ ஆகிய நூல்களிலும் இதே போல நம்முடைய நாட்டின், சமூகத்தின் பிற்போக்கான நிலையை விமர்சிக்கின்றார். அந்த நாட்களில் பெண் குழந்தைகள் பிறந்தால், பெற்றோர்கள் மிகவும் மனவேதனைப்பட்டதையும், ஆண் குழந்தை பிறந்தால் கொண்டாடியதையும் வ.ரா. எழுதுகிறார். 'பெண் பிறந்தால், அவ்வளவு மனவேதனை. இது பிராமணத் தெருவுக்கு மட்டும் சிறப்பானது என்று நினைக்க வேண்டாம். குடியானவத் தெருவிலும் இப்படித்தான். பொட்டை (பெண்) வேணும்னு எந்தக் கோயிலுக்கு மாவிளக்குப் போட்டோம்' என்று குடியானவத் தெருவில் சொல்லுவார்கள். சேரியிலும் (தீண்டாதார் வசிக்கும் இடம்) இதே பேச்சை வேறு விதமாகக் கேட்கலாம்.' (ஐம்பது வருஷங்களுக்கு முன், ஆனந்த விகடன், 1943, பகுதி 3, ப. 30). வாழ்க்கைக்கு அவசியமில்லாத பிரச்சினைகளில் நமது மூதாதையர்கள் ஈடுபட்டுக்கிடந்ததால், நாடு அடிமைப்பட்டுப் போக யாரைப் போய் கேட்கவேண்டும்' என்பதும், 'எந்த

நாட்டிலும் முற்போக்கிற்காகவும், தேச விடுதலைக்காகவும், உழைப்பவர்கள் சிறுபா ைமையோர். அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்களோ அதைப் பொறுத்து நிற்கிறது நாட்டின் ஒற்றுமை' (மழையும் புயலும், ப. 105) என்பதும் அறியத்தக்கன. 'ஆத்துமா துல்யம்' 'தேகம் அநித்தியம்' என்ற அபிப்பிராயங்களைப் பாரமாக வகித்த உபந்நியாசங்கள் இவ்வூரார் கேட்டுமிருக்கின்றனர், செய்து மிருக்கின்றனர். ஆனால் அவைகளினாலெல்லாம் பைசாவுக்குப் பிரயோசனமுண்டா என்பது இவர்கள் முடிவு. வாதுக்கும், வம்புக்கும் தத்துவமேயொழிய, அவைகளைத் தங்களுக்குத் தக்க வழிகாட்டி என்று நம்பிக்கை வைப்பதில்லை. ஆகவே, ஆண்மை குறைந்தது. பயம்மிகுந்தது. (சுந்தரி, ப. 39) என்பதில் அந்நாளைய சமூகத்தைப் படம்பிடிக்கிறார். மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் தமக்கு முந்திய காலத்தையும் தம் காலத்தையும் வ.ரா. படம்பிடித்துக் காட்டுகிறார். அந்த நாளில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய சமுகத்தையும், சாதி, பொருளாதார வேறுபாடுகள், அறியாமை மிகுந்த நிலை, பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்ற பல்வேறு பரிமாணங்களை வ.ரா. காட்டுகின்றார். சமூகச் சிக்கல்களையும் அவற்றின் காரணங்களையும் காட்டுவதுடன், சிக்கல்களுக்குரிய தீர்வுகளையும் அவர் கூறுகிறார்.

எழுத்து, பேச்சு, நேரடிச்செயல் ஆகிய நிலைகளில் தேச விடுதலைப் போராட்டத்தில் அவர் பங்கு பெற்றார். அவருடைய பத்திரிகை ஆசிரியப் பணியும், எழுத்துப்பணியும் இதற்குப் பெரிதும் துணை புரிந்தன. பொருளாதார வேறுபாடுகளை முன்வைக்கும் வ.ரா., 'சமுதாயச் செல்வத்தை ஆக்கும் பொறுப்பு அரசிடம் இருக்கவேண்டும் என்று சொல்வதைப் போல அதைச் சரியான முறையில், நேர்மையான அளவில் பொது ஜனங்களுக்கு விநியோகம் செய்து ஏழ்மை என்பது நாட்டில் இல்லாமல் செய்ய வேண்டுவது அரசாங்கத்தின் கடமையாகும்' என்று கூறுவது பொதுவுடைமைச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் தீர்வாகும். இவ்வாறு தம்முடைய படைப்பிலக்கியங்களில் சமூகச் சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் முன் வைக்கிறார்.

## நாவல்களில் இடம் பெறும் சாதிவேறுபாடு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டுக் கிராம வாழ்க்கையை வ.ரா. தம்படைப்புக்களில் முன் வைக்கின்றார். அந்நாளைய கிராம வாழ்க்கையில் சாதி வேறுபாடு மிகுதியாகவே காணப்பட்டது. சுந்தரி நாவலில் அந்தணருக்கும், அந்தணரல்லாதார்க்கும் இடையில் ஏற்பட்ட சாதி அடிப்படையிலான சிக்கலை முன்வைக்கின்றார். 'ஊர் வழக்கம் தெரியாது. பெரிய பட்டணங்களில் வளர்ந்தவன் போலிருக்கிறது. வேண்டுமென்றா செய்திருப்பான். இனிமேல் அப்படிச் செய்யாதே, வடிவேலு போய்வா" (சுந்தரி, ப.54) என்று அந்நாவலில் வரும் உரையாடல் சாதி வேறுபாடு காரணமாக எழுந்த சிக்கலைக் காட்டும். காலம் காலமாகப் பழகி வந்த சாதிக்கட்டுப்பாட்டை விடுவதற்குச் சென்ற தலைமுறையினர் துணியாததையும் இது காட்டும். ஆனால் அவர்களைத் தட்டிக் கேட்க - சாதியின் பெயரால் மற்றவரைத் துன்புறுத்தாமல் சகிப்புத் தன்மையுடன் சக மனிதனை மதிக்கும் மனித நேயமே வேண்டும் என்பதைப் பெரியவர்களுக்கு உணர்த்த - படித்த இளைஞர்கள் முன்வரவேண்டும் என்று வ.ரா. காட்டுகின்றார். இதனை 'வடிவேலு, நல்ல காரியம் செய்தாய். பிராமணர்கள் கொட்டம் அடங்கிற்று. சபாஷ் இன்னும் எத்தனை வடிவேலு வேண்டுமோ காரியம் முடிவு பெற '(சுந்தரி, ப. 54) என்று சுந்தரி நாவலில் வரும் வரிகள் இதனை வலியுறுத்தும். சாதி வேறுபாடுகள் மறைய இளைஞர்கள் கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதைச் சின்னச்சாம்பு நாவலில் வலியுறுத்துகிறார். இவ்வாறு சாதி வேறுபாடுகளைக் களைவதற்கு அவர் ஆக்கபூர்வமான வழிகளைச் சொல்லுகிறார்.

தம் வாழ்நாள் முழுவதிலும் தீண்டாமைக்கும், வருணாசிரம அமைப்புக்கும் எதிராக அவர் குரல் கொடுத்து வந்தார். சாதி வேறுபாடுகளை வலியுறுத்தும் மரபுத் தத்துவங்களை உடைத்து அனைவரும் ஒன்றே என்று நிலைநாட்டிய ராமானுஜர் வரலாற்றை 1950இல் சென்னை வானொலி நிலையத்திற்கு நாடகமாக ஆக்கித் தந்தார். திரைப்படமாக அது உருவான போதும் அவர் அதில் பணியாற்றினார். பழமையான, ஆசாரமிக்க வைணவக் குடும்பத்தில் பிறந்த வ.ரா., சாதி வேறுபாடுகளையும், மதச் சடங்குகளையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் போக்கினை

எதிர்த்தார்; சமய ஆசாரங்களிலிருந்து விடுபட்டு, அன்பையும், மனித நேயத்தையும், சகோதரப் பண்பையும் வலியுறுத்தி வந்த வ.ரா., ராமானுஜர் நாடகத்திலும் அதையே மைய இழையாக்கினார். 'வைஷ்ணவ தர்மம் அன்பையும், அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டது. அனுஷ்டானம், சம்பிரதாயம் என்ற மாயையின் மயக்கத்தில் நாம் நமது கடமையை மறந்துவிடக்கூடாது. மனித சிருஷ்டியில், பிறவியால் உயர்ந்தவனோ, தாழ்ந்தவனோ இல்லை. பிறர் துன்பத்தை அறிந்து, அதை நிவர்த்தி செய்ய முன் வருகிறவன் தான் வைஷ்ணவன்' (வ.ரா. வாசகம் ப.101) என்று ராமானுஜர் இறுதியாகத் தம் சீடர்களிடம் உபதேசிப்பதாக நாடகத்தை முடிப்பது இதை வலியுறுத்தும்.

## சுந்தரி

இந்த நாவலில் இளம் வயதில் விதவையான சுந்தரியின் வாழ்க்கைச் சிக்கல் கதையின் மையப் பொருளாகிறது. அந்த நாளைய கிராம வாழ்க்கைப் பின்னணியில், பழமைப்பிடிப்பு மிக்க அந்தணக் குடும்பத்தில் இளம் வயதில் விதவையான பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், 'விதவை சகுனத்தடை' என்பன போன்ற மூட நம்பிக்கைகள், பெண்ணுக்குக் கல்வி அளிக்காத நிலை, கிராம வாழ்க்கையில் காணப்படும் தீண்டாமைக் கொடுமை என்பன இக்கதையின் சிக்கல்களாகும். விதவை சுந்தரிக்குக் கல்வியும், மறுமணமும் வலியுறுத்தப்படுகின்றன. சுந்தரியின் மறுமணத்திற்கு அவளுடைய அண்ணன் முகுந்தன், வேதாந்தம் போன்ற இளைய தலைமுறையினர் முழு ஆதரவு தருகின்றனர்; வயதான மூத்த தலைமுறையினர் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். சமூக மதிப்பு மாற்றங்களும், சீர்திருத்தமும் எப்போதும், மூத்த தலைமுறையினரால் எதிர்க்கப்படுவதையும், சமூக மாற்றத்திற்குத் துணை நிற்கும் இளைய தலைமுறையினரால் ஆதரிக்கப்படுவதையும், சமூக இயக்க விதிகளுக்கேற்ப வ.ரா. படைத்துள்ளார். இந்த நாவலில் பாத்திரப் படைப்பு, நிகழ்ச்சி வைப்பு முறை, கதைப் பின்னல், சமூகச் சீர்திருத்த நோக்கம், கதை கூறும் திறன் என்பன அற்புதமாகப் படைக்கப்பட்டுள்ளன. கவிதைப் பாங்கு நிறைந்த நடையும் உணர்ச்சிகரமான உரையாடலும் ஆசிரியரின் வலுவான சமூகக் கண்ணோட்டமும் ஒன்றிணைந்து, சுந்தரி நாவலைச் சிறந்த

நாவலாக ஆக்கியுள்ளன. இந்த நாவலில் வரும் வடிவேலு என்னும் யாதவர் குல இளைஞன், வருணாசிரம தருமத்தின் வழி வந்த தீண்டாமைக் கொடுமையையும், மேல் சாதியினரின் ஆதிக்கத்தையும் கடுமையாக எதிர்த்துப் புரட்சிக் குரல் எழுப்புகிறான். (சுந்தரி, ப.85). தமிழ் நாட்டில், பார்ப்பனரல்லாதார் இயக்கம், பிற்காலத்தில் தோன்று வதற்கான சமூகத் தேவையைக் கூறும் வ.ரா.வின் தொலைநோக்கு அறியத்தக்கது.

## சின்னச்சாம்பு

இந்த நாவலிலும் இளம் வயது விதவை நாகம்மாவின் வாழ்க்கைச் சிக்கலும், சூரியை அவள் மறுமணம் செய்து கொள்வதும் மைய இழைகளாகும். அத்துடன் கலப்புத் திருமணம், பழைய மூடப்பழக்க வழக்கங்கள் எதிர்ப்பு, ஆங்கிலக் கல்வியின் தேவை, சமூக மதிப்பு மாற்றங்கள் என்பன நாவலில் இடம் பெறுகின்றன. 'நமது வாழ்க்கை முறையை நம்மவர்கள் அடியோடு மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் இப்பொழுது இரண்டாட்டிலே ஊட்டின குட்டியைப் போல வாழ்கிறோம். நம்முடைய புராதன வாழ்க்கையும் நாம் வாழவில்லை; நம்மை ஆளுபவர்களின் வாழ்க்கைமுறையையும் ஏற்க நாம் மறுக்கிறோம். இதைப் போல அவலமான நிலைமை வேறு எதுவும் இருக்க முடியாது. நமது தற்போதைய வாழ்க்கை முறையைப் பரிசோதனை செய்து, பூராவும் பழுது பார்த்துச் செப்பனிட வேண்டும். ஆற்றிலே ஒரு காலும் சேற்றிலே ஒரு காலும் இனியும் நம்மவர்கள் வைத்துக் கொண்டிருந்தால், குடிகெட்டுப் போகும். இதை நம்மவர்கள், கெட்டியாக மனசில் வைத்துக் கொள்ள வேண்டும்" (சின்னச்சாம்பு, பக். 228 - 229) என்ற கூற்று நாவலின் மையக் கருத்தை விளக்கும். சாம்புவையர், சின்னச் சாம்பு, சூரி, நாகம்மாள், முதலியார் ஆகிய கதை மாந்தர்கள் அழுத்தமாகவும், முழுமையாகவும் படைக்கப்பட்டுள்ளனர். வ.ரா.வின் நாவல்களில் கட்டுக்கோப்பும், செறிவும் மிக்க நாவல் இது. கிராம வாழ்க்கை, மெல்ல மெல்ல கிராமத்தில் நகர நாகரிகம் படியும் தன்மை, பெரு நகர வாழ்க்கை என்பவை மிக நுட்பமாகவும், நாவலுக்கு ஏற்ற சூழலை உண்டாக்குமாறும் இந்த நாவலில் படைக்கப்பட்டுள்ளன.

### விஜயம்

இந்த நாவலிலும் இளம் வயதிலேயே விதவையாகிப் போன விஜயத்தின் வாழ்க்கைச் சிக்கலே கதையின் மையமாகும். இளம் விதவைப் பெண்ணுக்கு மறுமணம் நிகழ்வதற்கு எதிர்ப்பு இருக்கும் பொழுது, இயற்கையான பாலுணர்வு வேட்கை காரணமாகத் தவறு நிகழ்வதற்கு வாய்ப்புள்ளது என்று இந்த நாவல் கூறுகிறது. விதவைக்கு மறுமணம் வேண்டும் என்பதை எதிர்மறையாக இந்த நாவல் வலியுறுத்துகிறது. விஜயம், சானுப்பாட்டி ஆகியோர் படைப்பு அழுத்தமாகவும், முழுமையாகவும் உள்ளது. விஜயத்தின் தன்மைக் கூற்றில் நாவல் சொல்லப்படுகிறது. விதவைப் பெண்ணின் தலைமுடி நீக்கப்படும் கொடுமை மிக உருக்கமாக இந்த நாவலில் எடுத்துக் காட்டப்படுகிறது. 'விதவை பழுதாயப்போன சொத்து; அவள் மூலையில் பதுங்கி கிடப்பதுதான் உசிதம்! அதுவும் முக்காடிட்டு, மூலையில் இருப்பது இன்னும் விசேஷந்தானே? என்ன நாகரிகம்! என்ன நியாயம்! இத்தகைய நாகரிகத்தைக் கொண்ட நாட்டு ஆண்பிள்ளைகள், சுயராஜ்ய அதிகாரம் வேண்டுகிறார்கள்!. இந்த விரோதம் என் துக்கத்தை மறக்கடித்து, எனக்குச் சிரிப்பை உண்டாக்குகிறது' (விஜயம், பக். 87 - 88) என்ற வரிகள் வ.ரா.வினுடைய ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும். மற்ற நாவல்களை விட, இந்த நாவலின் நெகிழ்ச்சித் தன்மைக்கு, கதைமாந்தர் தன்மைக் கூற்றில், உணர்ச்சி மயமாகப் பேசுவதே காரணமாகும்.

### கோதைத் தீவு

உயர் கற்பனை நாவல் வகையைச் சார்ந்த இந்த நாவலுக்கு, ஓரளவில் பாரதியாரின் 'ஞானரதம்' தூண்டுகோலாக அமைந்திருக்கக் கூடும் என்றாலும் தமிழில் முதலாவது உயர் கற்பனை நாவல் இதுவே. கணபதிராயன், அவன் நண்பன் ஆகிய இரு கதை மாந்தர்கள், தமக்குள் உரையாடுவதும், நாடு சுற்றி வருவதும், பெண்களே ஆட்சி செய்யும் கோதைத் தீவிற்குச் சென்று பார்த்து, பெண்ணரசின் சிறப்பை உணருவதுமாக இந்த நாவல் அமைந்துள்ளது. நாட்டையாளும் ஆட்சிப் பொறுப்பும், நிர்வாகத்திறனும், பெண்கள் கைகளில் வந்தால், எவ்வளவு சிறப்புடையதாக இருக்கும் என்ற கருத்தே இந்த நாவலின் மையமாகும். அளவில்

மிகச் சுருங்கிய இந்த நாவல், செறிவான கட்டுக்கோப்பினை உடையது. பெண்ணுரிமைச் சிந்தனைகளை மிக அழுத்தமாக இந்த நாவலில் வ.ரா. வெளியிடுகிறார். தமிழ் நாவல் வரலாற்றில் வ.ரா.வின் கோதைத்தீவு மிகுதியும் கொண்டாடப் படுவதற்கு, மிகுந்த புரட்சிகரமான வ.ரா.வின் பெண்ணியச் சிந்தனைகள் காரணமாகும். இந்த நாவலில், பெண்ணை இழிவுபடுத்தும் புராணம், இலக்கியம் தடைசெய்யப்பட வேண்டும் என்ற வ.ரா.வின் சிந்தனை அழுத்தமாக வெளிப்படுகிறது.

## வ.ரா.வின் சிறுகதைகள்

வ.ரா. எழுதிய சிறுகதைகள் 'கற்றது குற்றமா' என்ற தொகுப்பாக வந்துள்ளன. இவை தவிர, கதைக்கோவை-2 நூலில் 'கோட்டை வீடு' என்ற சிறுகதை உள்ளது. 'மணிக்கொடி' (1993) இதழில் வெளியான 'விதவை யமுனாபாய்', 'கட்டை வண்டி அல்லது பரதர அரசர்', ஊழியன் (1927) இதழில் வெளியான 'காளிதாசன்' ஆகிய சிறுகதைகளும் சென்னை, இலக்கியச் சிந்தனை 1984இல் வெளியிட்ட 'கோகிலத்தின் குதர்க்கம்' (இக்கதையை வ.ரா., மணிக்கொடி இதழ் வெளியிடுவதற்கு ஆறுமாதங்களுக்கு முன் 25.03.1933 அன்று எழுதினார்) ஆகிய சிறுகதைகளும் இன்னும் நூலாக வெளிவரவில்லை. மணிக்கொடிக்காலம் (ப. 13) நூலில், 'நொண்டி ராஜா வேண்டாம்' என்ற தலைப்பில் வ.ரா. எழுதிய சிறுகதையைப் பற்றிக் கூறப்படுகிறது. 'கற்றது குற்றமா?' தொகுப்பில் உள்ள 'அமலநாதன்' சிறுகதையில் சிறுவன் தன்னிடமுள்ள ராஜா பொம்மையின் கால் ஒடிநதுவிடவே 'நொண்டிராஜா வேண்டாம்' என்கிறான். இக் கதையைத்தான் பி.எஸ்.ராமையா குறிப்பிட்டிருக்க வேண்டும். கதையின் பெயர்மாற்றம் வ.ரா. அவர்களால் செய்யப்பட்டிருக்கக்கூடும்.

'கற்றது குற்றமா?' தொகுப்பில் நான்கு சிறுகதைகள் உள்ளன. 'கற்றது குற்றமா' என்ற முதல் சிறுகதையில் ஆங்கிலம் கற்றது குற்றமில்லை; தமிழை மறந்ததே குற்றம் என்று வ.ரா. கூறுகிறார். 'அமலநாதன்' சிறுகதை சாதி உணர்ச்சி பாராத காதலைக் கூறுகிறது. 'வண்ணார வீரம்மாள்' சிறுகதையில் மிகச் செறிவான சொற்களில் அவள் முடிவைக் கூறுகிறார். 'கமலி-விமலி' சிறுகதையில் சமுதாயத்தின் புதிய நிகழ்வுகளில் சிக்கி, தன்னை இழக்கும் ஒரு மனிதனை வ.ரா. காட்டுகிறார்.

நாட்டுப்பற்று, பொருளாதார நிலை, காதல், சாதிகளின் செல்வாக்கு என்பனவற்றை அன்றைய பின்னணியில் சமூகக் கண்ணோட்டத்துடன் அவர் படைத்துள்ளார். இக்கதைகளின் முடிவில் காணப்படும் சொற்செட்டு, கதைகளின் தொடக்கத்தில் இல்லை. 'கோட்டை வீடு' மிக நல்ல சிறுகதை. வடிவச் செறிவு இன்றி இக்கதைகள் உள்ளன என்றபோதிலும் வ.ரா.வினுடைய சிறுகதைகள் தீவிரமான உள்ளடக்க வலிமை வாய்ந்தவை ஆகும். வ.ரா. சிறுகதையின் செறிவான கட்டுக்கோப்பு மிக்க தன்மையை உணர்ந்து எழுதியவர் என்று சி.சு. செல்லப்பா பாராட்டுவார். (மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள், ப.21).

கருத்து விளக்கம் முதன்மையாக இருந்தாலும், நாவல், சிறுகதை என்ற படைப்பிலக்கியக் கலைவடிவம் வ.ரா.விடம் அந்தநாளில் நன்றாக வெளிப்பட்டுள்ளது. சுந்தரி நாவலில் காணப்படும் கவிதைப்பாங்கான நடையும், சின்னச்சாம்பு, கோதைத்தீவு நாவல்களில் காணப்படும் செறிவான வடிவமும், கோட்டை வீடு போன்ற சிறுகதைகளின் செய்நேர்த்தியும் அவருடைய படைப்பிலக்கியச் சிறப்பையும் கலைக் கோட்பாட்டையும் ஒருங்கே காட்டும்.

# இயல் 5

## வ.ரா.வின் கட்டுரைகள்

மறுமலர்ச்சித் தமிழ் உரைநடையின் முதல்வரான வ.ரா. ஏராளமான கட்டுரைகளை எழுதினார். அவை: மழையும், புயலும், கலையும் கலைவளர்ச்சியும், புண்ணியமும் பலவீனமும், வசந்த காலம், சுவர்க்கத்தில் சம்பாஷணை, வ.ரா. வாசகம், நடைச்சித்திரம், வாழ்க்கை விநோதங்கள், தமிழ்ப் பெரியார்கள் என்பனவாகும். இவற்றுள் இறுதி மூன்றும் நடைச்சித்திரம் என்ற வகையைச் சார்ந்தவை. இந்நடைச்சித்திரம் பற்றி அடுத்த இயலில் விரிவாகக் காணலாம். 1913 ஆம் ஆண்டு முதல் வ.ரா. எழுதிய கட்டுரைகளுள் நூலாக வந்தவை தவிர இன்னும் நூல் வடிவம் பெறாத கட்டுரைகள் நிறைய உள்ளன. இக்கட்டுரைகள் கதைப்போக்கிலும், தன் வரலாற்றுப் போக்கிலும், விவாதப் போக்கிலும் அமைந்துள்ளன. நமது தமிழ்நாடு' (வ.ரா.வாசகம் நூலில் உள்ளது), 'ஐம்பது வருஷங்களுக்கு முன்' ஆகியவை ஆசிரியருடைய இளமைக் காலத்தில் இருந்த தஞ்சை மாவட்டத்துக் கிராமப் பின்னணியில் தமிழ்ச் சமூகத்தைக் கூறுவதாகும். தன் வரலாற்றுப் போக்கில் அமைந்தவை இவை. வ.ரா.வின் கட்டுரைகள் யாவும் சமூகச்சீர்திருத்தம், பெண் விடுதலை, தமிழ்ச் சமூக முன்னேற்றம், தமிழ் மொழியின் மேம்பாடு, கலைவளர்ச்சி ஆகிய பொருள்களில் அமைந்துள்ளன. எளிய, உயிரோட்டமிக்க நடையில் அழுத்தமாக அவர், தம் கருத்துக்களை வெளியிடுகிறார். எடுத்துரைக்கும் உத்திகள், கட்டுரைப் பொருளுக்கேற்ப மாறுபட்டாலும், தீவிரத் தன்மை, படிப்பவரைச் சிந்திக்கத் தூண்டும் செறிவு, கட்டுரைப் பொருளின் சாதக, பாதகமான இயல்புகளைக் கொண்ட விவாதப் பாங்கு ஆகியன யாவும் சரிவர அமைந்த தன்மையில் இக்கட்டுரைகள் உள்ளன. அந்த நாளைய பத்திரிகை படிக்கும் வாசகர்களை முன்நிறுத்தி, அவர்களுக்கு மிகுந்த கவனத்துடன் எடுத்துச் சொல்லுவதாக இவை அமைந்துள்ளன.

### மழையும் புயலும்

முதல் பதிப்பில் (மழையும் புயலும் நூலில்) 44 கட்டுரைகள் இடம் பெற்றன. 1990 இல் வெளியான நூலில் 44 கட்டுரைகளுடன், புண்ணியமும் பலவீனமும் என்ற சிறு

கட்டுரை நூலும் (3 கட்டுரைப் பகுதிகள்) சேர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. அந்த நாளைய அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியச் சமூகத்தின் தனிமனிதனுக்கு, குறிப்பாகத் தமிழனுக்கு, அவன் அடிமை நிலையை எடுத்துச் சொல்லி, விடுதலைக்கும், சமூக மேன்மைக்கும் உழைக்கும் வண்ணம் உரமூட்டுவதாக அமைந்த வ.ரா.வின் குரலை இவற்றில் காணலாம். பெரும்பாலும் மனிதன் சிந்திப்பதே இல்லை. இதுவே வ.ரா.வின் வருத்தம். மனிதனைச் சிந்திக்கத் தூண்டி சமூகத்திற்கும் மொழிக்கும் அவர் வைத்தியம் செய்து உள்ளார். சிந்திப்பதற்கு முதலிடம் தருவதால், நடை எளிமையானது. இயல்பாக நாம் பேசும் மொழியிலே அவர் எழுதுகிறார். படிப்பவனுக்கும் எழுத்தாளனுக்கும் இடையில் 'இலக்கணம் உள்ளிட்ட எந்த பூசாரிக்கும் இடமில்லை' என்ற கொள்கையுடையவர் வ.ரா. 'எதற்கெடுத்தாலும், இரண்டாயிர வருஷத்துக்கு முன்னேயிருந்த பெரியவர்கள்' என்ற பல்லவி பாடுவது எவ்வளவு காலத்துக்கு இனிப்பாயிருக்கும்? காலத்தோடு பேச்சும், பழக்கமும் மாறினாலன்றி, ஜன சமூக உயிர், தரித்து நிலைத்து நிற்காது — பழையது புதுமைக்குத் தாய். தாய் மரித்து மகள் வளர்வதும், அந்த மகள் இறந்து புதுமகள் தோன்றி மகிழ்வதும் இயற்கையல்லவா?' (மழையும் புயலும், ப.31) என்ற கருத்து சிந்தித்தற்குரியது.

தமிழ் மொழியைப் பற்றி, 'தமிழில் சொல்ல வரவில்லையே! என்கிறார்கள் பலர். தமிழ் தானாகப் பேசுமா? நாம் பேசிப் பார்த்திருக்கிறோமா? தமிழில் சொல்லுவது கஷ்டமாகவே இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது யாருடைய தவறு? தமிழ், குழந்தையைப் போல வளர்த்தால் வளரும்; அலட்சியமாக விட்டுவிட்டால் வளராது' (மழையும் புயலும், ப.45) எனவும், 'நம்முடையது என்று பாஷை கூட இருக்கக் கூடாதா? தமிழ் மொழியைக் கொண்டுதான் நாம் உயர முடியும். ஒற்றுமையாக வாழ முடியும். அந்த ஒரு சாதனந்தான் நமக்கு மிஞ்சியிருக்கிறது. அதையும் கை விட்டுவிட்டுக் கையை விரிக்க வேண்டாம்' (மழையும் புயலும், ப.46) என்றும் கூறுவது தமிழ் மொழிச் சிறப்பை அவர் எடுத்துக்காட்டுவதாகும். பெண் விடுதலை பற்றி 'பொறுப்புத்தான், மனிதர்களின் மேலோட்டமான தன்மையை மாற்றி, அவர்களைச் சக்தி படைத்தவர்களாகச் செய்வதாகும். இந்தப் பொறுப்பை, நாம் பெண்களிடமிருந்து பறிமுதல்

செய்தது தவறு. இந்தத் தவறுதலுக்குத் தவறாய், இங்கிலீஷ்காரர்கள் நமக்குப் பொறுப்பில்லாமல் அடித்துவிட்டார்கள்' (மழையும் புயலும், ப.101). இச்சொற்கள், பெண்ணடிமைத்தனத்தை வரலாற்றுப் பூர்வமாக அவர் சிந்தித்துள்ள பாங்கினைக் காட்டும்.

நம் அனைவருக்கும் புரியக்கூடிய எளிய தமிழில், பேச்சு மொழி நடையில் இக்கட்டுரை நடை அமைந்துள்ளது. சிறுசிறு தொடர்கள், எளிய வாக்கிய அமைப்பு, கருத்தை முதன்மைப்படுத்தும் கட்டுரைத் தலைப்பு, சிந்தனையின் வெளிப்பாடாக அமையும் உணர்ச்சி மிக்க நடைப்பாங்கு ஆகிய நடைக்கூறுகளை இத்தொகுப்பில் காணலாம். 'சிருங்கார ரஸம் ததும்பும் பரத நாட்டிய அபிநயம் இப்பொழுது நாட்டுக்குத் தேவையில்லை; கூடாது என்பது என் தாழ்மையான கருத்து' (மழையும் புயலும், ப. 134) என்று பரதநாட்டியம் குறித்து, நாற்பதுகளில் வ.ரா. எழுதினார். அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமூகத்திற்கு நம்பிக்கையும், உயர்வதற்கு வழியும், விடுதலை உணர்வும் கொடுக்கவல்ல வீரமிக்க பாட்டும், ஆடலுமே தேவை என்று அவர் அழுத்தமாக வெளியிடுகிறார். யாருக்காகவும் தம் கருத்தைச் சமரசம் செய்து கொள்ளாத, துணிவு மிக்க மனித ஆளுமையை இந்த நடையில் காண்கிறோம். இதுவே வ.ரா.வின் தனிச்சிறப்பு.

## கலையும் கலை வளர்ச்சியும்

12 கட்டுரைகள் உள்ளன; அனைத்துமே கலை பற்றியன. 'இன்பத்தை அநுபவிப்பதோடு கூட, மனிதன் நாகரிகப் பண்பிலும் நடை அழகிலும் அறிவுத் தெளிவிலும் உணர்ச்சித் தூய்மையிலும் உயர்வதற்கான வழிகளையும் கலைகள் சில முக்கியமான முறையில் காண்பிக்க வேண்டும்.' (கலையும் கலை வளர்ச்சியும், ப. 20) என்று கலையின் நோக்கத்தைக் கூறுவதோடு, காலத்திற்கேற்ப கலைமாற்றம் பெறவும் வேண்டும் என்று அழுத்தமாகக் கூறுகிறார். 'கலை என்பது அசையாக் கல் அல்ல. அதற்கும் வைதிகத்துக்கும் வெகு தூரம். கலைக்கும் வாழ்க்கைக்கும், நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் வாழ்க்கை மாறினால் கலை மாறும்; கலையில் மாறுதல் ஏற்படின், வாழ்க்கையிலும் மாறுதல் உண்டாகும். எனவே கலையில் நவீனம் உண்டு என்று சொல்லவும் வேண்டுமா?' (கலையும் கலை

வளர்ச்சியும், ப. 32). தமிழ் மொழியைப் பண்டிதர்கள் தங்கள் கையிலும், இசையைக் கர்நாடக சங்கீத வித்துவான்கள் தங்கள் கையிலும் வைத்திருந்தனர். இரண்டையும் பொதுமக்கள் சொத்தாக மாற்றியவர்கள் முறையே பாரதியாரும், நாடக மேடை நடிகர் எஸ்.ஜி. கிட்டப்பாவும் ஆவர். இதனைத் "தமிழ் மொழியைச் சாகாமல் காப்பாற்றின தனிப்பெருமை பாரதியாரைச் சேர்ந்ததாகும். பாமரர்களுக்கும் சங்கீத ரசிகத் தன்மை உண்டு என்ற நிரந்தர உண்மையை நிலைநாட்டிய பெருமை கிட்டப்பாவைச் சேர்ந்ததாகும்" (கலையும் கலை வளர்ச்சியும், ப. 56) என்று கூறுவதால் அறியலாம். இதைப்போலவே மிகுந்த துணிவுடன், ஜாதி வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமையுடன் இந்திய சுதந்திரத்துக்குப் பாடுபடுங்கள் என்று கூறுமிடத்தில் (ப. 84) வ.ரா. ராஜாஜி கூறிய கருத்துக்களை மறுத்து இதை வலியுறுத்துகிறார். 'பயப்படுவது எப்படி இயற்கை என்றுதான் எனக்கு விளங்கவில்லை. தைரியமாக இருப்பது ஏன் இயற்கையாக இருக்கக் கூடாது. தைரியமாக ஆயிரத்தில் ஒருவர் கூட இருப்பதில்லை என்ற காரணத்தினாலே, தைரியமாக இருப்பது இயற்கை அல்ல என்று எப்படிச் சொல்லலாம்!' (கலையும் கலை வளர்ச்சியும், ப. 101) என்று வ.ரா. கூறுவது அஞ்சி, அஞ்சி அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த தமிழனுக்கு கொடுத்த ஊக்கமொழியாகும். இதைத்தான் தம்முடைய படைப்புக்களில் அவர் சாதித்தார்.

## புண்ணியமும் பலவீனமும்

இந்த நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றபோது, சிறைப் பின்னணியில், ஆசிரியருக்கும், கணபதிராயன் என்ற கற்பனை மாந்தருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் அடிப்படையில் அமைந்த நூல் இது. வரலாற்றுப் பூர்வமாக, இந்திய மக்கள் எவ்வாறு பிறருக்கு அடிமைப்பட்டுப் போனார்கள் என்று இந்த நூல் ஆராய்கிறது. 'நம்முடைய மூதாதைகள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் சாதுக்கள்; நாகரிகப் பண்பில் மிக உயர்ந்தவர்கள். ஆனால் அவர்கள் ஏமாந்து போனார்கள். தங்கள் பகுத்தறிவையும், சிந்தனா சக்தியையும் உபயோகப்படுத்தி நல்ல தன்மைகளை வாழ்க்கையில் பூட்டி அமைத்திருப்பார்களேயானால் அவர்களை யாரும் அடிமைப்படுத்தியிருக்க முடியாது' (புண்ணியமும் பலவீனமும்,

ப.42). நம்முடைய முன்னோர்களின் புண்ணியச் செயல்கள், பலவீனச் செயல்களாக மாறாமல் தடுப்பதற்குத் திலகர், காந்தியடிகள் போன்ற பெரியோர்கள் வழிகாட்டுகிறார்கள் என்று வ.ரா. காட்டுவது அவருடைய நாட்டுப்பற்றை மட்டுமின்றி, சமூகமேன்மை, நாட்டு விடுதலை ஆகிய நிலைகளில் வழிகாட்டும் தலைவர்களை இனங்காட்டிப் பாராட்டும் பண்பையும் ஒருங்கே காட்டும். விவாதப்பாங்கும், வரலாற்றுக் கண்ணோட்டமும் இந்த நூலின் சிறப்பு அம்சங்களாகும்.

### வசந்தகாலம்

இந்த நூலில் 16 கட்டுரைகள் உள்ளன. வ.ரா.வின் மறைவிற்குப் பிறகு, 1964-இல் சி.சு. செல்லப்பாவினால் வெளியிடப்பட்டது. வசந்த காலமாக இருக்க வேண்டிய வாழ்க்கையை மனிதன் விபரீத காலமாக ஆக்கி விடுகிறான். அடிமை இந்தியாவில் மனிதன் பழம்பெருமை பேசி, முன்னோர்களின் நிழலில் வாழ்ந்து, வாழத் தெரியாமல் திண்டாடித் தன்னையும், சமூகத்தையும், நாட்டையும் இழிநிலைக்குக் கொண்டு செல்லுகிறான் என்ற சீறிப்பாயும் ஆவேசம் இந்த கட்டுரைகள் முழுவதிலும் எதிரொலிக்கக் காணலாம். 'நம்மவர்களின் வாழ்க்கையை, பல வகைகளிலும் உருப்படி இல்லாமல் நம் முன்னோர்கள் செய்துவிட்டார்கள் என்று நான் ஏன் சொல்லக்கூடாது' (வசந்த காலம், ப.16) என்று கூறும் வ.ரா., இந்த நிலையை மாற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து மேன்மையுறலாம் என்றும் காட்டுகிறார். 'வாழ்க்கையின் மாண்பை, நம்மில் ஒவ்வொருவரும் உணரவேண்டும். எல்லோரும் அதை உணரும்படியாகச் செய்யவேண்டும்' (வசந்த காலம், ப.64) என்று வாழ்க்கையின் மேன்மையைக் காட்டுகின்றார்.

தாம் நீண்டகாலமாகப் பல்வேறு நிலைகளில் பணியாற்றிய பத்திரிகைத் தொழில் பற்றி வ.ரா. எழுதிய கட்டுரை ஒன்று இந்த நூலில் உள்ளது. பத்திரிகையின் நோக்கம், பயன்பாடு, அதிலுள்ள இடர்ப்பாடு, பத்திரிகைத் தமிழ் நடை என்பன பற்றி இந்தக் கட்டுரை ஆழமாகப் பேசுகிறது.

'இன்னும் சிறிது காலத்துக்கு, நம் நாடு இருக்கப் போகும் நிலைமை மிகவும் சிக்கலானது. மிக்க அபாயம்

கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஓர் எழுத்துக் கூடினாலும் ஆபத்து; குறைந்தாலும் ஆபத்து. ஆத்திரப் பட்டாலும் ஆபத்து; பொறுமையுடன் இருந்தாலும் ஆபத்து.

மக்களை ஒன்றுபடுத்தி உயர்த்தக் கூடியவைகளைத் தான் பத்திரிகைகளில் எழுதலாம். சந்தேகத்துக்கும் பேராசைக்கும் இடங்கொடுத்து அவைகளைப் பெரிய தத்துவத்தின் கீழ் மறைத்து, விருத்தி செய்யப்பார்ப்பது படுகுழி தோண்டிக் கொள்ளுவதாகும்.

மரியாதை எல்லையைக் கடந்து எழுதும் எழுத்து, எழுத்து இனத்தைச் சேர்ந்ததல்ல. அது கயவர்கள் செய்யும் அற்பத்தனமாகும்.

பத்திரிகைத் தொழில் கடினமானது; ஆனால் ரசமானது" (வசந்த காலம், பக். 53,54). 'மூடநம்பிக்கைகள்' என்ற கட்டுரை, முன்னே வாசகனை அமர்த்திக் கொண்டு அவனிடம் பேசுவது போல இருக்கிறது. கட்டுரைக்குள் ஒரு சிறிய வானொலி உரையும் இடம் பெற்றுள்ளது. 'மூடநம்பிக்கைகளும், திமிரும் ஒழிந்தால் தான் நம்மவர்களுக்கு விமோசனம்' என்று வ.ரா. கூறுவது அழுத்தமான ஒரு கருத்தாகும். ஒவ்வொரு கட்டுரையிலும் உட்தலைப்புக்களும், உரையாடல் முறையும், அழுத்தமான முடிப்பும், கட்டுரையின் மையக்கருத்தை எடுத்துக்கூறும் கட்டுரைத் தலைப்பும் இக்கட்டுரைகளின் தனித்தன்மைகளாகும்.

## சுவர்க்கத்தில் சம்பாஷணை

இதில் 9 சந்திப்புகள் இடம் பெற்றுள்ளன. நாற்பதுகளில் சென்னை வானொலி நிலையத்தில் 'சொர்க்கத்தில் சந்திப்புகள்' என்ற பெயரில் ஒலிபரப்பான அவருடைய ஒன்பது உரைகள், வ.ரா.வின் மறைவிற்குப் பிறகு 1964-இல் சி.சு.செல்லப்பா அவர்களால், முதன் முதலாகச் 'சொர்க்கத்தில் சம்பாஷணை' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவ்வுலகில், ஒத்த சிந்தனை அல்லது ஒரு துறை ஈடுபாடு கொண்டிருந்த அல்லது ஒரு துறை வாழ்வு வாழ்ந்த பெருமக்கள் இருவர் தம் மறைவிற்குப் பின் சொர்க்கத்தில் சந்தித்த போது, தம் காலப் பிரச்சினைகளுக்குத் தாங்கள் அன்று பூவுலகில் வாழ்ந்த போது எதிர்கொண்ட பிரச்சினைக்குத் தாங்கள் ஈடுகொடுத்த நிலையையும், அதன் பின் இன்று வரை தமக்கு ஏற்பட்ட

வளர்ச்சி காரணமாக விளைந்த உணர்ச்சிவேகம், சிந்தனைத் தெளிவு இவற்றால் ஏற்பட்ட மாற்றங்களையும் முன்வைத்து உரையாடிக் கொள்வதாக இந்த உரையாடல்கள் உருவாக்கப்பட்டன. இது தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவம். தம் பக்கத்து நியாய, அநியாயங்களை, காவியம் புராணம், இலக்கியம் இவற்றில் மூலப்படைப்பாளி காட்டாத புதிய கோணத்தில் வ.ரா. இவற்றைப் படைத்துள்ளார். (எண்பதுகளில் சென்னைத் தொலைக்காட்சி நிலையம் 'இவர்கள் சந்தித்தால்' என்ற பெயரில் தந்த கற்பனைச் சந்திப்புகளுக்கு வ.ரா.வின் இந்த வானொலி உரைகளே முன்னோடிகளாகும்). இவற்றில் பச்சையப்பர் - பட்டினத்தார், கண்ணகி - ஆண்டாள், மாதவி - தமயந்தி ஆகியன வ.ரா.வின் பெண்ணுரிமைச் சிந்தனைகளை மிகவும் வலிமையுடன் வெளியிடுகின்றன.

பச்சையப்பர் : 'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு', என்று ஒரு பாட்டு தாங்கள் பாடியிருப்பது உங்களுக்கு நினைவு வருகிறதா?

பட்டினத்தார் : நன்றாக நினைவு இருக்கிறது.

பச்சையப்பர் : 'பெண், யாரோ ஒருவள் என்று எண்ணிவிட்டீர்களே - அந்தப் பெண் உங்கள் தாயல்லவா? உங்களை முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாட்சுமந்து அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்து, தொந்தி சரிய பெற்றெடுத்த உங்கள் தாய் பிசாசா?' (சுவர்க்கத்தில் சம்பாஷணை, ப.12) என்ற பகுதியும், கோவலன் ஒரு நெறி பற்றி ஒழுகாதது அவனுடைய முன்வினைப்பயன் என்று சமாதானமாகச் சொன்ன கண்ணகியிடம், முன்வினைப் பயன் என்று வேறு சங்கதிகளில் சொல்லுங்கள். நான் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக் கொள்ளுவேன். இந்த விஷயத்தில் மட்டும், அதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. கெஞ்சுவதும், பின்னர் கைவிடுவதும், கைவிட்ட பின்னர், இரக்கமின்றி, பெண் பேரில் பழி சுமத்துவதும் ஆண் பிள்ளைகளின் இயல்பு.' (சுவர்க்கத்தில் சம்பாஷணை, ப.20) என்ற பகுதியும் பெண் விடுதலைச் சிந்தனையை எடுத்துக் காட்டும். பாரதி-கம்பன் சந்திப்பில், அம்பிகாபதியைக் கொண்டு, பாரதியின் பெருமையைப் பேசச் சொல்லுவதும், கம்பன் அதை ஆமோதித்து "பாட்டுத் திறத்தாலே, இவ்வையத்தைப் பாலித்திட வேணும். பாரதி! நீர் தான் உண்மையான கவி. புவிக்கு அரசன் கவி தான் என்று

அழுத்தமாகச் சொல்லக் கூடியவர் நீர்தான். ஒவ்வொருவருக்கும் காணிநிலம் வேண்டும் என்றும் தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றும் அகலாத அன்புடனும் அஞ்சாத நெஞ்சத்தோடும் சொல்லக்கூடியவர் நீர் ஒருவர் தான்" (சுவர்க்கத்தில் சம்பாஷணை, ப.32) என்று பாராட்டுவதும் காணலாம். பாரதியின் பெருமையைக் கம்பனைக் கொண்டு புகழச் செய்வதை வ.ரா. ஒரு நோக்கத்துடனே செய்துள்ளார். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்' என்று பாரதி பாராட்டிய கம்பன் மூலம், இப்போது பாரதியை, 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்' என்றும், 'காணி நிலம் வேண்டும்' என்றும் பாடியதன் மூலம் மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பாடிய புரட்சிக் கவிஞன் என்று பாராட்டவைக்கிறார். அத்துடன், இத்தனைத் தொலைநோக்குடன் பாடிய பாரதி 'உலகமகா கவி' என்பதையும் வ.ரா. இதில் தெளிவுபடுத்துகிறார்.

## வ.ரா. வாசகம்

இந்த நூல் வ.ரா.வின் மறைவிற்குப் பின் வெளிவந்தது. பதினெட்டுக் கட்டுரைகளும் 1950இல் சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பான 'ராமாநுஜர்' நாடகமும் இதிலுள்ளன. அத்துடன் மணிக்கொடி ஸ்ரீனிவாசன் எழுதிய 'சொல்வேர் உழவன் வ.ரா.' என்ற பகுதியும், தி.ஜ.ரங்கநாதன் எழுதிய 'நடையிலே புதுமை தந்தவர்' என்ற கட்டுரையும் இதில் அடங்கியுள்ளன. சந்தைப்பேட்டை செல்லாயி என்ற சித்திரம் 'வாழ்க்கை விநோதங்கள்' என்ற நூலிலும் இடம் பெற்றுள்ளது. வண்டிக்கார செல்லமுத்து, 'நடைச்சித்திரம்' நூலிலும் இடம் பெற்றுள்ளது. 'நமது தமிழ் நாடு' என்ற நீண்ட கட்டுரை ஆனந்த விகடனில் வ.ரா. எழுதிய 'ஐம்பது வருஷங்களுக்கு முன்' என்ற கட்டுரையோடு இணைத்துப் பார்க்கத்தக்கது. 'உண்மையான பெரியார்கள்' என்ற கட்டுரை தினமணியில் வெளியாகியது. 'எப்பொழுது இந்த தேசத்தை இங்கிலீஷ்காரர்கள் ஆளுவது என்ற பிடிவாதம் கொண்டார்களோ, பின்னர் எதற்காக உயர்கணிதம் போன்றவைகளைப் பற்றித் தமிழர்கள் கவலைப்பட வேண்டும்? ஆளுகிறவனுக்குத் தெரிய வேண்டிய சாஸ்திரப் பயிற்சிகள் அடிமைகளுக்கு எதற்காக என்று அக்காலத்துப் பெரியவர்கள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்" (வ.ரா. வாசகம், ப.11) என்ற

வரிகள் அவருடைய காலத் தமிழ்நாட்டு மக்களின் படிப்பார்வத்தையும் தம்முடைய கையாலாகாத்தனத்திற்குப் பெரியவர்கள் சமாதானம் செய்து தப்பித்துக் கொண்டதையும் ஒருங்கே காட்டும். அவரின் எழுத்தின் வலிமையும் உணரத்தக்கது. புத்தக விமர்சனம் பற்றி எழுதும்போது, 'கட்டுகிற வேலை எப்போதும் கஷ்டம். இடிக்கிற வேலை மிகவும் எளிது. கட்டுவதற்கு எவ்வளவோ புத்தியும் சிரத்தையும் வேண்டும். இடிப்பதற்கு ஆத்திரமும் பொறாமையும் இருந்தால் போதுமானது. நூலின் கெடுதலைப் பார்க்க, பலர் கண்கொட்டாமல் காத்துக் கொண்டு இருப்பார்கள். நூலின் நயத்தை அறிவதும் விளக்குவதும்தான் கஷ்டம்" (வ.ரா. வாசகம், ப. 67) என்று கூறுவது நூல் மதிப்புரை செய்வோருக்கு என்றைக்கும் பொருந்துவதாகும். பாமர மக்களை எப்படியாவது முன்னேறும்படி செய்ய வேண்டும் என்று எண்ணங் கொள்ளுபவர்கள், கலைகள், அற்புதமாகச் செய்யக்கூடிய தொண்டை மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டு, அந்தத் துறையில் பாடுபட, பல வேறு பேர்வழிகளைத் தூண்டி, தாங்களும் தக்கன செய்ய வேண்டும். நமது தமிழ் நாட்டின் உண்மைப் பெரியார்களில் தலைசிறந்து விளங்குபவர் பாரதியார்" (வ.ரா. வாசகம், ப. 151) என்று வ.ரா. கூறுவது உண்மைப் பெரியார்கள் யார் என்பதைச் சரியாக எடுத்துக்காட்டும்.

## வ.ரா.வின் இலக்கியக் கோட்பாடு

வ.ரா.வின் இலக்கியக் கோட்பாட்டில் சமூகச் சீர்திருத்தம், நாட்டு விடுதலை, பெண் விடுதலை, தமிழ் மொழியின் மேன்மை, தமிழனின் உயர்வு, விடுதலை பெற்ற பிறகு மலரப் போகும் புது வாழ்க்கைக்குரிய மேம்பாட்டுத் திட்டங்கள் என்பன இலக்கியத்தின் - கலையின்-உள்ளடக்கமாக அமைய வேண்டுமென்றார். புதிய புதிய இலக்கிய வகைகளை, வடிவச் சோதனை முறையில் படைத்த போதிலும், வலிமை வாய்ந்த உள்ளடக்கச் சிறப்பு மிக்க இலக்கியத்தையே அவர் தொடர்ந்து படைத்தார். இலக்கியத்தின் பயன் மனித வாழ்க்கையை மேம்படுத்துவது ஆகும். 1933-க்கும் 51-க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் வ.ரா.வின் மிகுதியான படைப்புகள் வெளியாயின. எனவே அன்றைய சமூகச் சூழலின் பின்னணி அவர் எழுத்தை உருவாக்கியது. மனித வாழ்க்கையை

மேம்படுத்தக் கூடிய தீவிர எழுத்தையே வ.ரா. தலைமைதாங்கிய மணிக்கொடி தொடர்ந்து எழுதியது. எனவே, மிகுதியான அளவில் விற்பனையாகும் பத்திரிகை எழுத்து, படிப்பவனுக்கு மகிழ்வூட்டி, பொழுது போக்குவதை மட்டும் கொண்டிருந்தால் போதுமானது என்பதை வ.ரா. கடுமையாக வெறுத்தார். அந்த நாளில் ஆனந்தவிகடன் போன்ற பத்திரிகைகள் இந்த நோக்கில் செயற்பட்டன. இதற்கு எதிரான நிலையை மேற்கொண்டு சீர்திருத்த நோக்கில் எழுதுவதே எழுத்து என்பது வ.ரா.வின் கலைக் கோட்பாடாகும். இதனை, 'உண்மையான வாழ்வைக் கண்டு அதை வெளிப்படுத்த வேண்டுமென்பது உனது ஆவலாக இல்லையாயின், நீ உனது எழுதுகோலைக் கீழே எறிந்து விடு' (புண்ணியமும் பலவீனமும், ப.28) என்று வலியுறுத்திக் கூறுவதன் மூலம் அறியலாம். மக்கட் சமுதாயத்துன்பங்களை நீக்கும் தன்மையில் இலக்கியங்கள் தோன்ற வேண்டுமென்று வ.ரா. வலியுறுத்துகிறார். மூட நம்பிக்கைகளை அழித்தொழித்து, சோம்பலை நீக்கி, உழைப்பில் ஆர்வமுண்டாக்குகிற வகையில் அமையும் எழுத்துக்களே உள்ளடக்கங்களாக அமைய வேண்டும் (மழையும் புயலும், ப.6) என்பது அவருடைய இலக்கியக் கோட்பாடாகும். இத்தகைய வலிமை வாய்ந்த கருத்துக்களை மிக எளிமையாகத் தெளிந்த நடையில், எல்லாத் தரப்பு மக்களுக்கும் புரியும்படியாக (ரிக்ஷாக்காரனுக்கும் புரியும்படியாக எழுத வேண்டும் என்று வ.ரா. அடிக்கடி கூறுவார்) எழுத வேண்டும் என்பது வ.ரா.வின் கோட்பாடு. எளிய தமிழ் நடையில், பேச்சு வழக்குச் சொற்களில், சிறு சிறு வாக்கியங்களில் அவருடைய நடை அமைந்தது என்பதற்கு வ.ரா.வின் இந்த இலக்கியக் கோட்பாடே அடிப்படைக் காரணமாகும். வாழ்க்கை உண்மைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கட்டுரை வடிவமே மிகுதியும் பயன்படும் என்பது வ.ரா.வின் கோட்பாடு. தமிழில் கட்டுரை என்று பேச்சு வந்தால் வ.ரா.விற்கு முன்னணியில் இடம் கொடுத்தே தீர வேண்டும்; வ.ரா. தான் நம்முடைய பெர்னார்ட்ஷா (மழையும் புயலும், முன்னுரை ப.6) என்று ந. பிச்சமூர்த்தி மிகச் சரியாக அவரை மதிப்பிடுகிறார். கருத்தில் தீவிரம் இருந்தபோதிலும், சொற்களை வீணாகப் பயன்படுத்தமாட்டார், வ.ரா. சொற்செட்டு வேண்டுமென்பது வ.ரா. கடைப்பிடித்த தீவிரமான இலக்கியக் கொள்கை. சொற்களுக்கு உயிருண்டு. ஏற்ற இடத்தில், ஏற்ற சொற்களை அவர் கையாண்டிருக்கிறார்.

புதுமை நாட்டம், விறுவிறுப்பான கருத்தோட்டம், படித்தவுடன் சராசரி வாசகனுக்கும் எளிதில் புரியும் தெளிவு, சரள நடை, உள்ளடக்க வலிமை காரணமாகப் படித்து நீண்ட நாளாகியும் நம் மனத்தைப் பாதித்து நிற்கும் வலிமை, மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற பதைபதைப்பு இத்தனையும் சேர்ந்ததுதான் வ.ரா.வின் நடை. இன்று எண்ணற்ற தமிழ் எழுத்தாளர்கள் வ.ரா.வைத்தான் பின்பற்றுகிறார்கள். சிந்தனையை வலுவாக்கிச் சொல்லும் நடையை எளிதாக்கியதன் மூலம் தமிழ் உரைநடைக்கு வ.ரா. புதுமை சேர்த்தார்.

# இயல் 6

## வ.ரா. எழுதிய 'வாழ்க்கைச் சித்திரம்'

நடைச்சித்திரம் என்பது தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவம். 1933-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மணிக்கொடி இதழை ஆரம்பித்தபோது, வாழ்க்கையின் பலதரப்பட்ட மனிதர்களின் பொது விஷயங்களைப் பற்றியோ, அல்லது தனி விஷயங்களைப் பற்றியோ ஒவ்வோர் இதழிலும் ஒரு பகுதி என்ற முறையில் 'ரயில் பெட்டி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரைப் பகுதியை ஆரம்பித்தார்கள். நாளடைவில் இப்பகுதியை வ.ரா.எழுதத் தொடங்கியவுடன் இதற்கு நடைச்சித்திரம் என்று பெயரிட்டார். ஒவ்வோர் இதழிலும் ஒரு சித்திரமாக 37 சித்திரங்களை எழுதினார். இவற்றில் தாம் கண்ட, கேள்விப்பட்ட மனிதர்களின் வாழ்க்கைப் பிரச்சினை, அவற்றிற்கான காரணம், மனிதர்களின் பண்புநலன், அவர்களின் தொழில், பழக்கவழக்கங்கள், பண்பாட்டு-மரபுகள் என்பனவற்றை உள்ளடக்கி ஒவ்வொரு சித்திரத்தையும் படைத்தார். கட்டுரையாக இருந்த போதிலும், மனிதர்களின் பண்போவியத்தை, ஆளுமையை வாசகனின் கண்முன்னால் இவை கொண்டு வந்தன. எனவே இவற்றைப் புதிய இலக்கிய வடிவமாக நாம் கருதவேண்டும். அதனால்தான் இந்த இலக்கிய வகைக்கு நடைச்சித்திரம் (வாழ்க்கைச் சித்திரம்) என்று பெயர் ஆயிற்று. இத்தகைய புதியதோர் இலக்கிய வகையை முதன்முதலாக எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது ஏ.ஜி.கார்டினர் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய வாழ்க்கைச் சித்திர நூல்களே ஆகும். இதனை நடைச்சித்திரம் தமிழில் எழுத வேண்டும் என்று எனக்கு ஆவல் உண்டானது, ஏ.ஜி.கார்டினர் அவர்களாலே. இங்கிலீஷில் நடைச்சித்திரம் எழுதுவதில் அவர் நிபுணர். இந்தச் சரக்கைத் தமிழிலும் ஏன் கொண்டு வரக்கூடாது என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். கண்டிப்பாய் செய்யவேண்டிய காரியம் என்று என் மனதிலிருந்து எனக்குப் பதில் கிடைத்தது" (நடைச்சித்திரம், ப.V) என்று வ.ரா. முதற்பதிப்பின் முகவுரையில் கூறுவதால் அறியலாம். ஆனால் ஏ.ஜி.கார்டினர், சமூகத்தின் மேல் தட்டு மனிதர்களையே - மன்னர்கள், துறவிகள், மார்க்கதரிசிகள் போன்றோரையே - தம்முடைய சித்திரங்களில் படைத்தார்.

இவர்களையே சமுதாயத்தின் தூண்கள் எனவும், அவர் வருணித்தார். ஆனால் வ.ரா. அவர்களோ பொதுமக்களை - அடிமட்டத்தில் வாழும் மக்களை - மையமாக வைத்து இந்தச் சித்திரங்களை உருவாக்கினார். 'மைக் குறத்தி, வண்டிக்காரச் செல்லமுத்து, சமையல் சாமா, பூசாரி சரவணை' போன்ற எளிய மக்களே அவரின் சமுதாயத்தூண்கள் ஆவர். இது அந்த நாளில் பெரும் புரட்சியாகும். தமிழ் வாசகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை நடைச்சித்திரம் பெற்றது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று சூத்திரத்தை மாற்றி, உலகம் என்பது உழைப்போர் மாட்டே என்று சூத்திரத்திற்குப் புதுவிளக்கம் கொடுத்தார்" (வ.ரா.வாசகம், ப. 16) என்று மணிக்கொடி ஸ்ரீனிவாசன் இந்த முயற்சியைப் பாராட்டுவார். நடைச்சித்திரம் என்ற வகையில் வ.ரா. படைத்தவை மூன்று நூல்கள். அவை: 1. நடைச்சித்திரம், 2. வாழ்க்கை விநோதங்கள், 3. தமிழ்ப்பெரியோர்கள்.

## நடைச்சித்திரம்

முதலில் மணிக்கொடி இதழில் எழுதப்பட்டு, 1940-ஆம் ஆண்டு நடைச்சித்திரம் என்ற பெயரில் நூலாக வந்தது. இந்த நூலில் வ.ரா.வின் முகவுரை இடம்பெற்று இருந்தது. பின் வந்த பதிப்புகளில் இந்த முகவுரை இல்லை. மணிக்கொடியின் ஆசிரியர் கு. ஸ்ரீனிவாசனுக்கு இந்த நூல் காணிக்கையாக்கப் பட்டது. 1947-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாக வந்தபோது வாழ்க்கைச் சித்திரம் என்று பெயரிடப்பட்டது. பின் 1990-ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பில் நடைச்சித்திரம் என்றே பெயர் இடப்பட்டது. இந்த நூலில் 37 சித்திரங்கள் உள்ளன. குழந்தை ராமுவைப் பற்றி "குழந்தை ராமு தங்கத்தை உருக்கி வார்த்த விக்கிரகத்தைப் போல இருப்பான். அகன்ற நெற்றி, செந்தாமரைக் கண்கள், சுவாமி விவேகானந்தரைப் போன்ற தலை, பூமியில் ஒரு நிமிஷமும் தரிக்காமல், எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் கால்கள், ஓயாத நாக்கு, ஸயன்ஸ்காரர்கள் கூட விளக்கத்தோடு பதில் சொல்லமுடியாத கேள்விகள், பம்பரம் போல் வினாடியில் தூங்கும் குணம், சொன்னதை வேதமாக நம்பும் தன்மை - இவைகள் எல்லாம் சேர்ந்ததுதான் ராமு. (நடைச்சித்திரம், ப.9) என்று குழந்தை ராமுவை அறிமுகப்படுத்துகிறார். வீட்டில் தன் தாத்தா, பாட்டி, தோழன் சோமு, தன் தந்தை என வரிசையாக அவன் ஒவ்வொருவரிடமும்

வானாக்களை எழுப்புகிறான். அவனுடைய சுட்டித்தனமும் காட்டப்படுகிறது. இறுதியில், குழந்தைகளின் வளர்ப்பில் பெரியவர்கள் பின்பற்ற வேண்டிய உளவியல் பூர்வமானதும், பொறுப்புமிக்கதுமான கருத்தை வ.ரா. முன்வைக்கிறார். 'குழந்தை ராமுவைப் போல விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகள் நம் நாட்டின் வருங்காலத் தலைவர்கள். அவர்களுடைய இன்றைய நடத்தையைப் பொருத்தது, அவர்கள் வாழப் போகிற வாழ்வு. அவர்களை மண்டையிலடித்து, அவர்களின் மூளையைக் குழம்பவைப்பது வயது மூத்தவர்களுக்கு அழகல்ல. அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு வாய்ப் பதட்டத்துடன் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்த நாட்டுக்கு அவர்களால் நலம் உண்டாகும்' (நடைச்சித்திரம், ப.14).

பியூன் சின்னக் கண்ணுவின் மனநிலையைப்பற்றி, 'பள்ளிக்கூடத்தை, தான் ஸ்தாபித்து, அதை நடத்தும் பொறுப்பு தன்னிடம் தான் இருப்பது போல் சின்னக்கண்ணு இப்பொழுதும் எண்ணிக்கொண்டிருக்கிறான். மாதக் கூலிக்கு உழைக்கிற ஆள் என்ற அற்ப எண்ணமே அவன் மனசில் ஒரு நிமிஷமாயினும் உதயமானது கிடையாது. பள்ளிக்கூடத்துத் தரையை அவன் அங்குல அங்குலமாக மிதித்துப் பார்த்திருக்கிறான். எத்தனை தடவைகள்! கணக்கு எடுப்பதற்கு சர்க்கார் கணக்குப் பரிசோதகரால்தான் முடியும்" (நடைச் சித்திரம், ப.138) என்ற வரிகள் பள்ளியில் கடைநிலை ஊழியனாகப் பணி செய்யும் சின்னக்கண்ணுவை அறிமுகப்படுத்துவதுடன், தான் செய்யும் தொழிலை ஈடுபாட்டுடன் செய்யக்கூடிய அவனுடைய ஆளுமையையும் நமக்கு காட்டுகிறது. வேலைக்காரி அம்மாக்கண்ணுவைப் பற்றி, 'தனக்கு ஒன்றும் இல்லையே என்ற சிந்தனையாவது, விசாரமாவது அவளுக்கு இருந்ததில்லை. வெளியூர்களுக்குப் போய், நாங்கள் ஊருக்குத் திரும்பி வந்தால், வீட்டுக்கு என்னா கொணாந்திருக்கே?' என்று கூசாமல் கேட்பாள். எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்? என்று அவள் கேட்டதே கிடையாது. வீட்டுப்பக்தி அபரிமிதமாகக் கொண்ட அம்மாக்கண்ணு விடமிருந்து நம்மவர்கள் தேசபக்தியை ஏன் கற்றுக் கொள்ளக்கூடாது?' (நடைச்சித்திரம், பக். 198, 199) என்ற வரிகளில் அம்மாக்கண்ணுவின், தான் வேலை பார்க்கும் வீட்டு

மனிதர்களோடு தன்னைக் கரைத்துக் கொண்டு வாழும் பண்பு வெளிப்படுவதுடன், அவனுடைய வீட்டுப்பற்றுப்போல நமக்கு நாட்டுப்பற்று வேண்டும் என்பதையும் வ.ரா. வலியுறுத்துகிறார்.

இந்தச் சித்திரங்கள், ஆசிரியர் எடுத்துரைக்கும் நடையில் அமைந்துள்ளன. சிலவற்றில் இடையே நாடகத்தில் வருவதுபோல உரையாடல் பகுதியும் உண்டு. நகைச்சுவை கலந்த நடையும், நடைச்சித்திரத்தில் வரும், பாத்திரங்களுடன் தாமும் பழகி, அவர்களைப் பற்றி எடுத்துரைப்பதற்கான திறனும் இவற்றில் குறிப்பிடத்தக்க பண்புகளாகும். சில சமயங்களில் பிற மாந்தர்கள் எடுத்துச் சொல்லுவதாகவும் கருத்துக்களை முன் வைக்கிறார். படிக்கும் வாசகனை முன்நிறுத்தி, அவனிடம் உரையாடுவது போன்று இச்சித்திரங்களை வ.ரா. படைத்துள்ளார். பத்திரிகையின் வாயிலாக இவை எழுதப் பட்டதால், படிக்கும் வாசகனுக்கு, அவனுடைய சிந்தனைப் போக்கிற்கு ஏற்பக் கதை சொ. ுவது போலத் தொடங்கி, கருத்துக்களை முறையாக எடுத்துச் சொல்லும் உத்தி ஆசிரியர் நடையில் இந்த நூலில் மிகுதியும் காணப்படுகிறது. இடையிடையே பழமொழிகள், தொடர்கள் மிகுந்து வருகின்றன. ஒவ்வொரு நடைச்சித்திரத்தின் தலைப்பு, தொடக்கம், முடிவு இவை யாவும் ஒன்று சேர்ந்து முழுமையைத் தருமாறு வ.ரா. படைத்துள்ளார்.

## வாழ்க்கை விநோதங்கள்

இதில் 20 சித்திரங்கள் உள்ளன. சுதேசமித்திரன் வாரப்பதிப்பில் வெளியாகி, 1947-இல் நூலாக வெளிவந்தது. வேலைக்காரக் குப்பனைப் பற்றி, 'கண்ணன் பாட்டிலே பாரதியார் வேலைக்காரக் கண்ணனை வெகு நேர்த்தியாக வர்ணிக்கிறார். 'எங்கிருந்தோ வந்தான்; இடைச்சாதி என்று உரைத்தான்' என்று வேலைக்கார கண்ணனைப் பற்றி ஆரம்பித்து, பின்னர் அவன் செய்யும் சூதுகளையெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறார்" (வாழ்க்கை விநோதங்கள், ப.93) என்று கூறி, 'நாம் சொன்ன வேலையை, நாம் குறிப்பிடும் காலத்தில் குப்பன் செய்யவே மாட்டான். 'தோட்டத்துக்குத் தண்ணீர் கொட்டு எனறால் தொட்டிக்குத் தண்ணீர் நிரப்புவான். மார்க்கெட்டுக்குப் போ என்றால் சரோஜாவைத் தூக்கிவைத்துக்கொண்டு நம் எதிரிலேயே நின்று கொண்டு

நமக்குக் காட்சி அளித்துக் கொண்டே இருப்பான்" (வாழ்க்கை விநோதங்கள், ப.97) என்று பொருத்திக் காட்டுகின்றார். 'குப்பண்ணாவை நீங்கள் பார்த்தால் அவர் என்ன தொழில் செய்கிறார் என்று உங்களாலே சொல்ல முடியாது. ரொம்பவும் 'டாப்பு சிறப்பாக' இருப்பார். உயர்ந்த ரகமான துணியைத் தான் அவர் உடுத்துவார். தேகத்தில் சட்டை இராது. தெருவழியாக அவர் சமஸ்கிருத சுலோகம் சொல்லிக் கொண்டு போகும்பொழுது, அவர் எதையோ பாராயணம் செய்து கொண்டு, அலுவலகத்துக்குப் போவதாகத் தோன்றும். தெருப்பிச்சை எடுப்பவர் குப்பண்ணா என்று நீங்கள் சந்தேகிக்கவே முடியாது!' (வாழ்க்கை விநோதங்கள், ப. 25) என்ற பகுதியில் தெருப்பிச்சை எடுக்கும் குப்பண்ணாவை அறிமுகப்படுத்துவதோடு அவருடைய கல்வி, பழக்கம் ஆகியவற்றையும் படிக்கும் வாசகனுக்கு எடுத்துரைக்கும் முறையில் வ.ரா. படைத்துள்ளார். வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலுள்ள மனிதர்களைப் பற்றி எடுத்துரைக்கும் பாங்கில் இவை அமைந்துள்ளன.

கோவிலில் மெய்க்காவல் வேலை செய்யும் சிங்காரத்திற்கும் வாழ்க்கையை வசதியாக வாழவேண்டும் என்ற இயல்பான எண்ணமுடைய அவனுடைய மனைவிக்கும் எப்போதும் மனத்தாங்கல். இதனை, 'மெய்க்காவல் வேலைக்குத் தினமும் மூன்று பட்டை சாதம் தான் சம்பளம். ஏறுபடி நாட்களில் கொஞ்சம் கூடக் கிடைக்கலாம். ஆனால் திட்டம் இவ்வளவு தான். எனவே, இன்பம் அநுபவிக்க எண்ணும் மனைவிக்கும் சாமிக்குச் சேவை செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் சிங்காரத்துக்கும் வீட்டில் எப்படி ஒற்றுமை இருக்க முடியும். கடவுள் விட்ட வழி என்று ஜபித்துக் கொண்டிருக்கும் சிங்காரத்துக்கு, யார் உபதேசம் செய்தாலும் காதில் ஏறாது. (வாழ்க்கை விநோதங்கள், ப.33) என்ற பகுதி இதனை உணர்த்தும்.

மக்களின் பேச்சு வழக்குச் சொற்களில் அவர்களுடைய நடை, உடை, பாவனை, பண்பாட்டு மரபுகள், தொழில் முறை என்பவற்றை வ.ரா. படைத்துள்ளார். சூழலுக்கு ஏற்ப நடை அமைந்துள்ளது. இடைஇடையே நகைச்சுவை கலந்த எளிமையான நடை. அதே நேரத்தில் சித்திரம், படிப்பவர் மனத்தில் ஆழமாகப்பதியுமாறு, வலிமையான கருத்துக்களுடன் வ.ரா. எடுத்துரைக்கிறார்.

**தமிழ்ப் பெரியார்கள்**

*1993-34ஆம் ஆண்டுகளில் திருவாளர் டி.எஸ்.சொக்க லிங்கம் நடத்திய காந்தி இதழில், தமிழ் நாட்டுப் பொது வாழ்க்கையில், தம் உழைப்பால் முன்னேறிய பெரியவர்கள் பன்னிருவர் பற்றிய சித்திரங்களைத் தொடர்ந்து எழுதினார். பின்னர் 1943-இல் தமிழ்ப் பெரியார்கள் என்ற பெயரில் அவை நூலாக வெளிவந்தன. 25.4.1943 தினமணி இதழில் உண்மையான பெரியார்கள் என்ற தலைப்பில் வ.ரா. ஒரு கட்டுரை எழுதினார். அதில் பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் வாழும் பொறுப்பற்ற தன்னலமிக்கவர்களின் செயல்களை வ.ரா. கடுமையாகச் சாடினார். மாறாக உண்மையான பெரியார்கள் யார் என்பதை "ஜனசமூகத்தைத் தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச் செய்பவர்கள் பெரியார்கள். இதை அவர்கள், தாங்கள் அறிந்தும் செய்யலாம்; தாங்கள் அறியாமலும் செய்யலாம் என்றாலும், அவர்களுடைய வாழ்க்கையினால், ஜனசமூகத்தில், கண்ணால் பார்க்கக்கூடிய மாறுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன. அடிமைத்தனத்திலும் பரம்பரை என்ற கொடுமையிலும் ஆழ்ந்து கிடக்கும் சமூகத்தில், இந்த எண்ணிக்கை இன்னும் குறைவாகவே இருக்கும். அடிமைத் தனமும் பரம்பரையும், யாரும் எளிதிலே தலை தூக்கும்படியாக, உதவிகளாக இருக்கமாட்டா; அவை தடைகளாகவே இருக்கும்" (தமிழ்ப்பெரியார்கள், பக்.11-12) என்று முதலில் விளக்கியுள்ளார். இந்த அடிப்படையில், தாமே உழைத்து முன்னேறிய மக்கள் சமூகத்திற்கு வழிகாட்டும் முறையில் அமைந்த அரசியல், கலை, இலக்கிய உலகைச் சார்ந்த பெரியவர்கள் பன்னிருவர் பற்றிய வாழ்க்கைச் சித்திரமாக இவை அமைந்துள்ளன. வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாக இவை அமையவில்லை. மாறாக அவர்களின் பண்பு நலன்களை, தாமே முயன்று மேன்மை யடைந்த நிலையை, பிறருக்கு உதவும், வழிகாட்டும் பண்பைச் சிறு சிறு நிகழ்ச்சிகள் மூலம் அழகாகவும், அழுத்தமாகவும் வ.ரா. விளக்குகிறார். இவர்கள் அனைவருடனும் நெருங்கிப் பழகி அவர்களை முழுமையாகப் பார்த்தவர் வ.ரா. புகழ் பாடுவதே - ஒளி நிறைந்த பகுதிகளைக் காட்டுவதே - வாழ்க்கை வரலாற்று நூலின் படைப்பு முறை என்ற தன்மையை மாற்றி, பெரியார் களின் உள்ளும் புறமுமான தன்மைகளை எடுத்துக் காட்டும் வ.ரா.வின் எழுத்து, துணிச்சல் மிக்க பத்திரிகையாளனை, சமூகச் சீர்திருத்தவாதியை நமக்குக் காட்டும்.*

ராஜாஜியைப் பற்றிக் கூறும்போது "ஆச்சாரியரைச் சின்னக்காந்தி என்கிறார்கள். இதைப்போல அநியாயம் வேறு எதுவுமே இல்லை. காந்தி மகா மேதாவி; ஆச்சாரியார் மகா புத்திசாலி. காந்தியில் மூளை வேறு ரகம்; ஆச்சாரியார் மூளை வேறு வகை. மேதை வேறு ; புத்தி வேறு. காந்திக்குத் தமது சொந்த சக்தியில் 'மலையை நகரச் செய்யும்' நம்பிக்கை உண்டு; பிறர் சக்தியிலும் காந்திக்கு அளவற்ற நம்பிக்கை. ஆச்சாரியாருக்கோ, தம்மிடத்தில் சிறிது சந்தேகம்; பிறரிடத்தில் எல்லையற்ற சந்தேகம்" (தமிழ்ப்பெரியார்கள், ப.21) என்று விளக்குகிறார். ராஜாஜியை மிகச் சரியாக இது இனங்காட்டுகிறது. 'தூய தமிழின் இன்னிசை ஒலியைக் கேட்டு அநுபவிக்க உளங்கொண்டவர்கள், முதலியார் நடத்தி வந்த 'தேசபக்தன்' என்ற பத்திரிகையின் பழைய பிரதிகளைக் கண்டெடுத்துப் படிப்பார்களானால், மனப்பூரிப்பு அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழிலும் ஒலியழகு, நடையழகு, பொருளழகு, வர்ணனை அழகு உண்டோ என்று சந்தேகப்படும் ஆத்மாக்கள் முதலியாரின் 'முருகன்' என்ற சிறுநூலைப் படித்து மனம் தேறலாம்" (தமிழ்ப் பெரியார்கள், ப.38) என்ற பகுதியில் திரு.வி.க.வின் இலக்கியப்பணி, பத்திரிகை எழுத்து, அவருடைய நடை என்பவற்றை நுட்பமாக வருணிப்பதைப் பார்க்கலாம். வ.உ.சி.யைப் பற்றிக் கூறும் போது, 'பிள்ளையவர்கள் உண்மையே பேசுவதில் ஆவல் கொண்டவர். குழந்தை உள்ளம் படைத்தவர். யாரையும் எளிதிலே நம்பிவிடும் சுபாவம் கொண்டவர். மேடையில் ஏறிவிட்டால், மழையைப் போல் பொழிவார். கேட்பவர்கள் ஒரு சமயம் சிரிப்பார்கள். திடீரென்று கண்ணைத் துடைத்துக் கொள்ளுவார்கள்; பின்னர் அப்படியே வாயைத் திறந்து கொண்டு கேட்டுக் கொண்டிருப்பார்கள். பிள்ளையின் பிரசங்கமே தனித்தன்மை கொண்டதாகும். தமிழ் நாட்டில், அக்காலத்தில், அதிகார வர்க்கத்தினர் யாரைக் கண்டு நடுங்கினர் என்று நினைக்கிறீர்கள்? சிதம்பரம் பிள்ளையைத் தான்" (தமிழ்ப் பெரியார்கள், ப.86) என்று படிப்பவர்கள் முன் அவர் இயல்பையும், பேச்சாற்றலையும் நேர்மை மிக்க செயல்திறனையும் விளக்குகிறார்.

ஆனந்தவிகடன் வாசனின் பண்பைப்பற்றி, 'சம்பாஷணைக் காலத்தில், தாம் கொண்டிருந்த கொள்கைக்கும், கட்சிக்கும் எதிரிடையாக இருந்தாலும் பிறர் சொல்லுவது

அநுபவத்துக்குப் பொருந்தின உண்மையாயின், அதை ஒப்புக்கொள்ள வாசன் தயங்கினதேயில்லை. அது மட்டுமல்ல; அந்த உண்மையை எடுத்துக் காண்பித்தவரை, அப்பொழுதே கருமித்தனம் இல்லாமல் பாராட்டுவார். தமக்குத் தெரியாததை மற்றவர் கண்டுபிடித்துவிட்டாரே என்று சிறிதும் பொறாமைப்படமாட்டார். உண்மையை ரசித்து, அநுபவத்தை ஏற்பவராதலால், வாசன் அவரைப் பாராட்டுவார். இது தான் பெரிய மனிதனுடைய பிரத்தியேகத் தன்மையாகும். இந்தத் தன்மை வாசனிடம் அபரிதமாக இருக்கிறது" (தமிழ்ப் பெரியார்கள், ப.100) என்று கூறுவது நாமும் அதைப் போன்ற இயல்பை பெறவேண்டும் என்று வ.ரா. எதிர்பார்ப்பதைக் காட்டும். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் நகைச்சுவை யாற்றலைப் பற்றி "கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே விநோதமாய் இருக்கிறது. யாரை அவர் கேலி செய்து, கிண்டல் பண்ணுகிறாரோ, அவரும் சேர்ந்து சிரிக்கும் படியான விதத்தில் கிருஷ்ணன் கேலி செய்கிறார். நான் சிரிக்கமாட்டேன் என்பது போல, வாயைக் கெட்டியாக மூடிக்கொண்டிருப்பவர்களையும் கோட்டை வாசல் திறந்தது போல வாயைத் திறந்து பார்த்துக் கொண்டே இருக்கும் படியாகக் கிருஷ்ணன் செய்து விடுகிறார்" (தமிழ்ப் பெரியார்கள், ப. 120) என்ற வ.ரா.வின் கணிப்பு பொருத்தமானதாக இருக்கிறது. நாமக்கல் கவிஞரைப் பற்றி, 'கிழவர்கள் கூடத் துள்ளி எழுவார்கள்; அப்படி ஊக்கம் தரக்கூடியது, பாரதியாரின் பாட்டு' என்று பொருள்படும் படியாக, பிள்ளையவர்கள் ஓரிடத்தில் பாடியிருக்கிறார். அரைக்கணமும் அடிமையாக இருக்கலாகாது என்ற சொல்வதில், பாரதியாருக்குச் சிறிதும் சளைத்தவரல்ல, ராமலிங்கம் பிள்ளை. பாரதியாரின் நாட்டுப்பற்று, பிள்ளையிடம் பரிபூரணமாக மலர்ச்சி பெற்றிருக்கிறது" (தமிழ்ப் பெரியார்கள், ப. 132) என்ற வரிகளில் பாரதியாரின் அடியொற்றி நாமக்கல்லார் வளர்ச்சி பெற்றதை வரா. ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

## வரா.வின் நடை

நடைச் சித்திரம், வாழ்க்கை விநோதங்கள் ஆகியவற்றில் 19 ஆம் நூற்றாண்டின் இந்திய கிராம வாழ்க்கை, ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் பிடியில் இருந்த அந்த நாளைய நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை மாற்றம் என்பவற்றை வெளிப்படுத்தினார் வ.ரா. தமிழ்ப் பெரியார்கள் நூலில் மக்கள் சமூகத்திற்கு

வழிகாட்டியாக விளங்கும் பெரியவர்களின் பண்புச்சிறப்புகளை அழுத்தமாகப் படைத்துள்ளார். இவற்றின் வழி சமூக, தனிமனித வாழ்க்கை பற்றி வ.ரா.வின் ஆழமும், அகலமுமான கண்ணோட்டம் புலனாகிறது. பாரதியாரால் ஊக்கம் பெற்ற வ.ரா. சின்னஞ்சிறு சொற்களாலான, செறிவான, தெளிவான, சொற்செட்டுமிக்க நடையில் இவற்றை எழுதினார். பத்திற்கும் மேற்பட்ட இதழ்களில் பணியாற்றிய அனுபவம் வ.ரா.வின் நடையில், சிக்கலற்ற, எளிமைத்தன்மைமிக்க 'ரிக்ஷாக்காரனுக்கும் புரியக்கூடிய' நடையைத் தந்தது. எதிரே உட்கார்ந்து கொண்டு வாசகனிடம் பேசுவது போன்ற உணர்வை வ.ரா.வின் நடை ஏற்படுத்தியது. நாட்டு விடுதலை இயக்கமும் தமிழ்ச் சமூகத்தை மேன்மையுறச் செய்ய வேண்டும் என்ற வேட்கையும் மிக்க வ.ா.வைச் சமூகச் சீர்திருத்தக் கருத்தாக்கங்கள் மக்களுக்குப் புரியும்படி எழுத வேண்டும் என்று தூண்டின. மறுமலர்ச்சி எழுத்தாளரான வ.ரா., மேடைப் பேச்சு, வானொலிப் பேச்சு, பத்திரிகைப் பணி என்ற நிலைகளில், தம் முன்னுள்ள சாதாரண, எளிய மக்களை நினைவில் கொண்டு, அவர்களுக்குப் புரியும்படியாக எழுதுவதற்கு நடையில் முதன்மை கொடுத்தார். பேச்சு வழக்குச் சொற்களை இதனால் வ.ரா. தம் நடையில் எடுத்தாண்டார். பழமொழி, இலக்கியத் தொடர்கள் என்பவற்றோடு, தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப வழக்குச் சொற்களையும் வ.ரா. கையாண்டார். சிறிய சொற்றொடர் அமைப்புக்களையே அவர் பயன்படுத்தினார். நீண்ட, கலவை வாக்கியங்களைத் தவிர்த்து, எளிய, நேரடி வாக்கியங்களையே அவர் எழுதினார். கருத்துக்கும், உணர்ச்சிக்குமே முதன்மை கொடுத்தார். வ.ரா.படைத்த வாழ்க்கைச் சித்திர அமைப்பிலான மூன்று நூல்களும் தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவமாகும். படிப்பவனைச் சிந்திக்கத் தூண்டும் இந்த எழுத்து, மக்கள் சமூகத்தை மேன்மையுறச் செய்யவேண்டும் என்ற நோக்கம் காரணமாகவும் தீவிர எழுத்தைப் போற்றும் அந்த நாளைய படிக்கும் தன்மை காரணமாகவும் பெரும் வரவேற்பைப் பெற்றது. உண்மையும், கலை அறிவும் இணைந்து தமிழகம் மேன்மையுற வேண்டும் என்ற வ.ரா.வின் பெருநோக்கு இவற்றில் புலனாகிறது.

# இயல் 7

# வ.ரா.வின் பிற நூல்கள்

சிறுகதை, நாவல்,கட்டுரை, வாழ்க்கை வரலாறு, வாழ்க்கைச் சித்திரம் ஆகியவை தவிர அரசியல் நூல்களையும், மொழி-பெயர்ப்பு நூல்களையும் வ.ரா.படைத்துள்ளார். அவ்வகையில் `நமது இந்தியா, `ஜவஉறர்லால் வாழ்க்கை வரலாறு, பர்டோலிக் கதை, ஜோடி மோதிரம் ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களையும், `ஜப்பான் வருவானா?' என்ற கொள்கை விளக்க நூலையும், `மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி என்ற மறுப்பு நூலையும், `காங்கிரஸ் ஆட்சி, `காங்கிரஸ் ஆண்டு நிறைவு' ஆகிய அரசியல் நூல்களையும் அவர் படைத்துள்ளார். இவற்றை இந்த இயலில் காண்போம். இவை தவிர தினமணி, ஊழியன், வீரகேசரி போன்ற வ.ரா.பணியாற்றிய பல்வேறு இதழ்களில் அவர் படைத்த நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், பிற சிறுகதைகளும், What is poetry என்ற ஆங்கிலக் கட்டுரையும் இன்னும் நூல் வடிவம் பெறாமல் உள்ளன. இவை இலக்கியம், அரசியல், சமூகச் சீர்திருத்தம், தமிழின் பெருமை என்ற பல்வேறு பொருளில் அமைந்தவை. நூலாக வெளிவராமையால் இவற்றைப் பற்றித் தனியாக இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

## ஜவஉறர்லால் வாழ்க்கை வரலாறு

இலங்கையில் வீரகேசரி இதழுக்கு உதவி ஆசிரியராக 1935-இல் சென்றபோது, நேரு ஆங்கிலத்தில் எழுதிய சுயசரிதையைத் தமிழில் வ.ரா.மொழிபெயர்த்தார். 1935-இல் இரண்டு பாகங்களாக இந்த நூல் வெளிவந்தது. அடிமைப்பட்டிருந்த இந்தியர்களுக்கு நேருவின் வாழ்க்கை வரலாறும்,அவருடைய பண்பு நலன்களும் வழிகாட்டியாக அமையும் என்ற நோக்கத்தில் வ.ரா.இதைத் தமிழில் தந்தார். மொழி பெயர்ப்பு என்ற எண்ணமே தோன்றாதபடி சுவையாகவும், சரளமாகவும் இந்த நூல் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் வ.ரா.வினுடைய எளிமையும், தெளிவுமிக்க உணர்ச்சிபூர்வமான நடையமாகும்.

## பர்டோலிக் கதை

மகாதேவ தேசாய் ஆங்கிலத்தில் எழுதிய பர்டோலிப் போராட்டம் பற்றிய நூலை வ.ரா. தமிழில் `பர்டோலிக் கதை' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இந்த நூல் 1932-இல் வெளிவந்தது. பர்டோலிப் போராட்டத்தில் விவசாயிகள் ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் பெற்ற வெற்றியை எடுத்துக் காட்டுகிறது இந்த நூல். 'வீரர்களும் சூரர்களும் பண்டைக் காலத்துச் சங்கதிகள்; இப்பொழுது நமது நாட்டில் காணக் கூடியதல்ல என்று பெருமூச்சுடன் பேசுபவர்கள் இந்தப் புஸ்தகத்தைப் படிக்கவேண்டும். வீரத்தனமும் சூரத்தனமும், அரசர்களின் உள்ளத்திலும், அரண்மனையிலும், போர்க்களத்திலும் கத்தி முனையிலும், பீரங்கி ஒலியிலும் தான் உண்டு என்று பிடிவாத முட்டாள்தனத்துடன் புலம்புகிறவர்கள், பர்டோலிக் குடியானவர்கள்-வெள்ளைத் தனமுள்ள குடியானவர்கள்-காட்டிய தீரத்தைப் படித்து, கண்விழிப்புக் கொள்ள வேண்டும். இந்தியர்கள் நெல்லிக்காய் மூட்டைகள் என்று சதா ஜபித்துச் சாபம் கொடுத்துக் கொண்டிருக்கும் திண்ணை வம்பர்கள் கூட `பர்டோலிக் கதை `யைப் படித்தால் பரவசமடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை' (பர்டோலிக் கதை முன்னுரை, ப.2) என்ற வரிகளில் ஒத்துழையாமை இயக்கத்தின் வலிமையை எடுத்துக் காட்டுகிறார். காந்தியடிகள் தலைமையிலான அறவழிப் போராட்டத்தை முழுவதுமாக ஆதரித்து அதையே பின்பற்றிய வ.ரா.வுக்குத் தம் கொள்கையை விளக்குவதற்கு இந்த நூல் வாய்ப்பாக அமைந்தது. தேசாயின் மூலநூலில் இல்லாத எதையும் வ.ரா.தமிழில் எழுதிவிடவில்லை. ஆனால் தமிழ் நாட்டு வாசகர்களுக்கான இந்த மொழி பெயர்ப்பு, அந்த நினைவுடன், குஜராத் மாநிலத்திற்கு மட்டும் உரிய தனிப்பட்ட சில புள்ளி விவரங்களை விடுத்து, பொதுவாக எழுதப்பட்டுள்ளது. வ.ரா.வின் நடை காரணமாக இந்த நூலும் இனிமையும் கவர்ச்சியுமிக்க மூலப்படைப்பு போன்றே உள்ளது.

## ஜோடி மோதிரம்

வங்க மறுமலர்ச்சிப் படைப்பாளர்களுள் ஒருவரான பங்கிம்சரத்சந்திர சட்டர்ஜியின் `யுகல் ஆங்ருவையா' என்ற குறுநாவலை `ஜோடி மோதிரம்' என்ற பெயரில் வ.ரா.மொழி பெயர்த்தார். புதுவையில், பாரதியார், அரவிந்தர் இவர்களுடன் வ.ரா. வாழ்ந்தபோது இதனை மொழி பெயர்த்தார். அந்த

நாளில் புதுச்சேரியில் தலைமைறவாக இருந்த தமிழ் தேச பக்தர்கள், வங்க இலக்கியப் படைப்புக்களைப் படித்து, அதில் திளைத்து அவற்றைத் தமிழுக்கு மொழி பெயர்த்தனர். பாரதியும், வ.வே.சு. அய்யரும் தாகூர் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தனர். வ.ரா. பங்கிம் சந்திரரை மொழி பெயர்த்தார். வ.ரா. மொழி பெயர்த்து வருவதைப் பார்த்த பாரதி, அரவிந்தரிடம் அதைக் காட்டி வ.ரா.வை ஊக்கப்படுத்தினர். வரா.வின் எழுத்தும் நடையும் பாரதியின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. உடனே அரவிந்தரைக் கூப்பிட்டார். குற்றவாளி போல் மனம் திக்குத்திக்கென்று அடித்துக் கொண்டிருந்த வ.ரா.வைக்காட்டி `பாபுஜி இந்த நோட் புஸ்தகத்தில் என்ன இருக்கிறது தெரியுமா? பங்கிம் பாபுவின் ஜோடி மோதிரங்களின் மொழிபெயர்ப்பு. நம்ம ராமஸ்வாமி அய்யங்கார் எழுதியிருக்கார் அற்புதமான தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் என்று பாராட்டினார். புதுச் சேரியிலிருந்து திரும்பிய பிறகு 1914-இல் இது வெளியானது. பரலி சு. நெல்லையப்பர் (பாரதியின் சீடர்) இதனை வெளியிட்டார். பெண் விடுதலைச் சிந்தனையை மையமாகக் கொண்டது இந்தக்கதை. இதில் வரும் உறிரண்மயி என்ற பெண்மாந்தர் கல்வி கற்று, பலராலும் பாராட்டப்படுகிறார். பெண்கல்வியும், பெண் விடுதலையும் வ.ரா. வை ஈர்த்தன. பின்னாளில் வ.ரா.தம் படைப்புக்களில் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தி எழுதுவதற்குப் பங்கிம் சந்திரரின் இப்படைப்பு தூண்டுதலாயிருந்தது.

## மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி

இந்த நூல் 1928 இல் வெளியானது. செல்வி(மிஸ்) காதரைன் மேயோ என்ற வெளிநாட்டுப் பெண்மணி, இந்திய மாதா என்ற பெயரில் ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதினார். அடிமைப்பட்டிருந்த இந்தியர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மரபுகள், வாழ்க்கைப் போக்குகள், மத நம்பிக்கைள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து வெளிநாட்டவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதாகக் கூறிக்கொண்டு இந்தியர்களை மிகக் கேவலமான முறையில் இழித்தும், பழித்தும் பேசி இந்த நூலை எழுதினார்.

உலகத்தார்களின்முன், `இந்தியர்கள் சுதந்திரத்திற்கு அருகதை அற்றவர்கள்' என்ற எண்ணம் ஏற்படும்படி,

திட்டமிட்டுத் தவறான செய்திகளைக் குறுகிய கண்ணோட்டத்தில் முன்வைத்துள்ளார். இந்த நூலுக்கு மறுப்புச் சொல்வதாக வ.ரா. 1938-இல் 'மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி' என்ற பெயரில் ஒரு நூலை எழுதினார். நாட்டைப்பற்றியும், நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் உண்மையானதும், நேர்மையானதுமான செய்திகளை எடுத்துக் கூற வேண்டியது தேசபக்தனின் கடமை என்று வெளிப்படுத்தவே வ.ரா.இந்த நூலை எழுதினார்.

சில பழக்கவழக்கங்கள் கால மாறுபாட்டால் மாறியுள்ளன என்பதை எடுத்துக்கூறி ஒவ்வொரு பகுதியிலும் மேயோவின் கருத்தை மறுத்து, தம் கருத்தை வ.ரா. நிறுவுகிறார். 30 இயல்களாக இந்த நூல் அமைந்துள்ளது. இலக்கியப் பாடல் அடிகளையும், பாரதியார் பாடல்களையும் மிகுதியும் வ.ரா. எடுத்துக்காட்டி தம் கருத்தை நிறுவுகிறார். 'பெண்கள் இந்தியாவில் ஆண்களுக்குப் பணிந்து நடப்பது பல நூற்றாண்டுகளாக' என்று மேயோ கூறுகின்றார். மேயோ கூறுவது இடைக்காலத்தில் தோன்றிய தீமையாகும். 'பெண் சுதந்திரம் பொய்மை கொண்டகலிக்கும் புதிதன்றிச் சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள், தன்னிலே பொதுவான வழக்கமாம்' என்று பாரதியார் கூறுகின்றார். மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே வாழ்ந்தனர் பெண்மணிகள் என்று கூறப்படுகின்றது. காலமாறுபாட்டால் வழக்கங்கள் மாறுவது இயல்பு' (மாயாமேயோ, பக்.122,123) என்ற பகுதி இதனைக் காட்டும். பெண்ணுக்குக் கல்வி இல்லை; உரிமை இல்லை என்றும் கூறும் மேயோவுக்குப் பதில் சொல்வது போல, குடும்பச் சொத்தில் பெண்ணுக்கும் சம பங்கு வேண்டும்; சொத்து வந்துவிட்டால் பெண்ணை ஆண் தன் அடிமையாக நடத்த மாட்டான் என்று வரா. இந்த நூலில் அந்த நாளில் கூறிய கருத்து, இந்தியச் சமுகச்சீர்திருத்தப் பெரியோர்கள் மத்தியில் முதலாவதாக எழுந்த புரட்சிகரமான பெண்ணுரிமைக் குரலாகும். அதேபோலத் தீண்டாமை என்னும் கொடுமையை அடியோடு களைய வேண்டும் என்றும் குரல் கொடுக்கிறார்.

வரலாற்றுப் பூர்வமாகவும், இலக்கியக் கருத்தாக்கங்களுடனும் வ.ரா.இந்த மறுப்பு நூலைப் படைத்துள்ளார். வ.ரா.வின் நடையிலுள்ள எளிமையும் செறிவும் இந்த நூலின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. தேசபக்தனுக்குரிய கடமைகளுள் ஒன்றாகத் தம் நாட்டை, மக்கட் சமுகத்தைப் பற்றி

வெளிநாட்டவர் குறை கூறும்போது பதில் சொல்ல வேண்டியது தம்முடைய தார்மீகப் பொறுப்பு என்ற வ.ரா. வின் உள்ளக் கிடக்கை இந்த நூல் முழுவதிலும் புலனாகிறது. தேசபக்தி யின்மை, தீண்டாமை, பெண்ணடிமை போன்ற மெய்யான, நம்முடைய சீர்கேடுகளை ஒளிவுமறைவின்றி வ.ரா. ஒத்துக் கொள்கின்றார்; அவற்றைப் போக்கப்பாடுபடுவது நம் அனைவரின் கடமை எனவும் வலியுறுத்துகிறார். அதில் அவருடைய நேர்மையும், துணிவும் பாராட்டத்தக்கன. அதே நேரத்தில், மேயோவின் பொய்யான, மிகைப்படுத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை வன்மையாக மறுக்கிறார். ஆனால் மறுக்குமிடங்களில் நாகரிகமாக மறுத்து எதிர்வாதம் செய்யும் வ.ரா.வின் நடைப்பண்பு நயத்தக்க நனி நாகரிகமிக்கது. அந்த நாளில் மேயோவின் நூலுக்கு மறுப்பு நூலுக்கு தமிழில் பலர் எழுதினர் என்ற போதிலும் மேற்கூறிய பண்புகளால் வரா.வின் இந்த நூல் தனிச்சிறப்பு மிக்கதாக விளங்கியது.

## காங்கிரஸ் ஆட்சி

இது 1938-இல் வெளிவந்தது. இந்த நூல் 14 பாகங் களைக் கொண்ட சிறிய நூல். 1937-ஆம் ஆண்டு ஜூலை 14இல் ராஜாஜி தலைமையில் தமிழ் நாட்டில் அமைந்த காங்கிரஸ் ஆட்சியின் சிறப்பை இந்த நூல் எடுத்துரைக்கிறது. காங்கிரஸ்காரராக இருந்த வ.ரா. இந்த அரசாட்சியை வரவேற்று இச்சிறு நூலை எழுதினார். ஒவ்வொரு பகுதியிலும் (பரிகாரம் என்ற ஏழாம் பகுதியில் மட்டும் கம்பனின் பாடல் அடி மேற்கோளாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் அது கம்பரின் பெயரால் வழங்கும் தனிப்பாடல் அடி. இந்த ஒன்றைத் தவிர ஏனைய பதின்மூன்று பகுதிகளிலும்) பாரதியார் பாடல் அடி மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது. 'மானத்தை இழந்தவர்கள் ஒரு நாளும் சுதந்திரம் பெறமுடியாது. சுதந்தரத்துக்கு ஊன்றுகோல் மானம் என்பதை நாம் இடைவிடாமல் உணர்ந்து கொண்டிருப்போமாக! ஆங்கில சாம்ராஜ்யக்காரர்களோடு சத்தியாக்கிரகப் போராட்டம் செய்ததில், நீல் சிலையை அப்புறப்படுத்தினதுதான் நம்மவர்களுக்கு ஒரு பூரணமான வெற்றி என்பது என் அபிப்பிராயம்' (காங்கிரஸ் ஆட்சி, ப.20) என்ற பகுதியில் அந்த நாளைய அரசியலாளர்களின் செயல்களைப் பாராட்டுவதுடன் தேசப்பற்றிற்கு அடிப்படை யானது மானவுணர்ச்சி என்பதையும் வ.ரா.அழுத்தமாக முன்

வைக்கின்றார். வ.ரா.வின் இனிய நடை, அரசியல் கொள்கை விளக்க நூலைக்கூட, சுவையாகக் கதைபோலக் கூற முடிந்துள்ளது.

## (ஒருவருஷ காங்கிரஸ் ஆட்சி) ஆண்டு நிறைவு

1939-இல் இந்த நூல் வெளிவந்தது. அந்த நாளைய சென்னை, காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் வெளியீடாக வெளிவந்தது. தமிழ்நாட்டில் அமைந்த ராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசாட்சியின் ஒரு வருட ஆண்டு நிறைவையொட்டி வ.ரா. இந்த நூலை எழுதினார். அடிமைப்பட்ட நாட்டின் நிலையைக் காங்கிரஸ் கட்சி எவ்வாறு, தொடர்ந்து பாடுபட்டுப் போக்கி விடுதலைக்கு நம் மக்களை ஆயத்தப்படுத்தியது என்பதை இந்த நூலில் விளக்குகிறார். 'ஒரு நாடு அடிமைப்பட்டு உழல நேர்ந்தால், அந்த நாட்டாரிடம், மனிதர்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய பல நல்ல குணங்கள் இல்லை என்று அர்த்தம். நல்ல குணங்களும் அவைகளுக்கு அஸ்திவாரமாயிருக்கும் இயற்கையான உணர்ச்சிகளும் ஒரு நாட்டில் இல்லாமல் போனால், அந்த நாட்டை, கொஞ்சம் நல்ல தன்மைகள் படைத்த எந்த அந்நியர்களும் இலகுவிலே அடக்கியாள முடியும். ஆகவே, அடிமைத் தளையைத் தெறித்து எறிய வேண்டுமானால், நல்ல தன்மைகளையும், நல்ல உணர்ச்சிகளையும் நாட்டாரிடம் பெருக்கி வளர்ப்பதுதான் முதல் வேலையாகும். இந்த உத்தமமான வேலையத்தான், காங்கிரஸ் சென்ற 50 வருஷங்களாக, ஓயாமல் சலிக்காமல் செய்து வந்தது' (ஆண்டு நிறைவு, ப.2) என்று கூறுவதால் உணரலாம். அடிமைத் தளையினின்று விடுபட்டு வலுவும், வீரமும் முழுமையாக என்று மனிதன் அடைகிறானோ, அந்த நிலை தான் சுதந்திரம் என்றும், கீழ்மையான குணங்களை விட்டொழித்து, மனிதன் மேம்பாடு அடைவதைச் சுயராஜ்யம் என்றும் வ.ரா.இந்த நூலில் விளக்குவது எக்காலத்திற்கும், எந்த நாட்டினருக்கும் பொருந்தக் கூடிய விளக்கமாகும். அரசியல் விடுதலை மட்டுமல்லாமல் சமூகவிடுதலையையும் வலியுறுத்திய வ.ரா.வின் வாழ்க்கைக் கண்ணோட்டம் இச்சிறு நூலில் அழுத்தமாக வெளிப்படுகிறடு. தம்முடைய எழுத்தின் நோக்கத்தைப்பற்றியும் புதிய சிந்தனைகளைத் தமிழுக்குத் தர வேண்டும் என்பதையும் இந்த நூலில் அவர் வெளிப்படுத்துகிறார். 'நான் ஒரு தமிழ் எழுத்தாளன். எனக்கு இங்கிலீஷூம்

தெரியும். இங்கிலீஷ் தெரிந்திருப்பதாலே தான், எனக்குத் தமிழில் பற்று பத்து மடங்கு அதிகரித்திருக்கிறது. இங்கிலீஷில் இருக்கிற அவ்வளவையும் தமிழில் சொல்லிவிட்டு, இங்கிலீஷில் இல்லாத புதிய சங்கதிகளையும் தமிழில் சொல்ல வேண்டும் என்ற ஆவல் என் ரத்தத்தில் துடித்துக் கொண்டேயிருக்கிறது" (ஆண்டு நிறைவு, பக். 55, 56) என்பதால் இதனை அறியலாம்.

இந்த நூல்களில் நாட்டுப்பற்று, அடிமை நிலையின் இழிநிலை, மொழிப்பற்று, விடுதலை என்பதன் முழுமையான பொருள் என்பவற்றை அடிநாதமாக விளக்கியுள்ளார். தேசிய உணர்வு, பெண் விடுதலை, தமிழ் மொழி ஈடுபாடு என்ற அடிப்படைக்கருத்தாக்கங்கள் இந்த நூல்களில் நிறைந்துள்ளன. வ.ரா.வின் எளிய நடையும் வாசகனை முன் நிறுத்தி எடுத்துரைக்கும் திறனும் அனைத்து நூல்களிலும் காணப்படுகின்றன. தம்முடைய எழுத்தின் நோக்கத்தை, மனித குல மேம்பாட்டை அவர் எடுத்துரைப்பது வ.ரா.என்ற மனிதநேயமிக்க சிந்தனைவாதியை நமக்குக் காட்டுகிறது. அரசியல், கொள்கை விளக்க நூல்களாயினும், வ.ரா.வினுடைய சிந்தனை ஓட்டம் எக்காலத்திற்கும் மனிதகுலம் முழுவதற்கும் பொருந்துமாறு அமைந்துள்ளது.

# இயல் 8

# வ.ரா.வின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

வ.ரா. தம்முடைய படைப்பிலக்கியம், கட்டுரை, மறுப்புநூல் என்ற பலவற்றிலும் பெண்ணுரிமைச் சிந்தனை களைக் கூறியுள்ளார். திருமணம், குடும்ப வாழ்க்கை, ஆண்-பெண் சமஉரிமை, விதவை நிலை, ஆணாதிக்க சமூகத்தில் அந்நாளைய அந்தணக் குடும்பத்தில் விதவை எதிர்கொள்ளும் சிக்கல்கள், விதவை மறுமணம், அதற்கு ஏற்படும் எதிர்ப்பு, சமூக அங்கிகார மறுப்பு, சாதியை விட்டுத் தள்ளி வைத்தல், இந்த அநீதிகளை எதிர்த்துப் போராடுதல் என்ற நிலைகளில் வ.ரா., பெண் விடுதலைக்கு உரிய தேவைகளைக் கூறுகிறார். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாகப் பெண் கல்வியை வலியுறுத்துகிறார். பெண்ணுக்குச் சொத்தில் சமபங்கு என்று வற்புறுத்துகிறார். அரசியலிலும் நாட்டை ஆளுவதிலும், நிர்வாகத்திலும் பெண் உரிமையை நிலைநாட்டுகிறார். அரசியலில் சம உரிமை பெறுவதே பெண் விடுதலையின் சரியான பொருள் என்று வ.ரா. கூறுகிறார். சமூக, பொருளா தார, அரசியல் நிலைகளில் ஆணுக்குச் சரிநிகர் சமானமாகப் பெண்ணை அவர் காட்டுவது அறியத்தக்கது.

சுந்தரி, விஜயம், சின்னச்சாம்பு ஆகிய மூன்று நாவல்களிலும் விதவைத் துயரைப் பேசும் வ.ரா., அச்சிக்கலுக்குத் தீர்வாக மறுமணத்தையே கூறுகிறார். கோதைத்தீவு நாவலில் அரசியல் விடுதலையையும் முன்வைத்துப் பெண் அரசின் சிறப்புகளைக் காட்டுகிறார். பொருளாதாரச் சுதந்திரம், சார்பின்மை, தனித்தியங்கும் பாங்கு என்பவற்றைப் பெண்ணியக் கூறுகளாக வ.ரா. படைப்பது அந்த நாளில் பெருஞ்சாதனையாகும். பெண்கல்வியை அனைத்திற்கும் அவர் ஆதார சுருதியாக்குகிறார். பாதாதிகேச, கேசாதி பாதமாக வருணித்துப் பெண்ணை இன்பநுகர்வுப் பொருளாகப் படைக்கும் படைப்பாளர் மத்தியில், உண்மையான பொருளில் பெண்ணை வ.ரா. தான் தமிழ் உரைநடையில் இனங் காட்டியவர். பெண்ணுரிமைச் சிந்தனை வ.ரா.விடம் பொருத்தமுற வெளிப்பட்டுள்ளது.

பாரதியாரிடமிருந்து கருத்தாக்கங்களைப் பெற்ற வ.ரா., பாரதியைப் போலச் சில நிலைகளில் அற்புத நவிற்சிப்

பாங்குடையவர். அற்புத நவிற்சி (romantic) என்ற கலைச்சொல், கவிதைக்குரியதாகவே கருதப்பட்ட சமயத்தில், சிறுகதை, நாவல், கட்டுரை போன்ற உரைநடை இலக்கிய வடிவங்களிலும் கையாண்ட முதல்வர் வ.ரா. இந்த இலக்கியப் போக்கில், வ.வே.சு.ஐயர் போன்றோருக்கும் வ.ரா. தான் முன்னோடி. அன்னியர்க்கு அடிமைப்பட்டிருந்த அன்றைய காலகட்டத்தில், தன் நாட்டைப் பற்றியும் தங்களைப் பற்றியுமான உணர்வை, இளைஞர்கள் பெறலாயினர். கடந்த காலச் செழுமையை உருவாக்குவதற்குத் தேசிய உணர்வு பெரிதும் துணைநின்றது. இதன் காரணமாக அரசியல் விடுதலையுடன் சமூக விடுதலை, பெண் விடுதலை, ஆண்-பெண் சம உரிமைகளை நிலைநாட்டல் ஆகிய கருத்தாக்கங்களை வ.ரா.தொடர்ந்து வலியுறுத்தினார். பாரதியாரின் கூட்டுறவால் பெற்ற பெண் விடுதலைச் சிந்தனை, வ.ரா.விடம் முழுவீச்சில், பல்வேறு பரிமாணங்களில் வெளிப்பட்டது.

## பெண்களின் சமூகச் சிக்கல்கள்: பெண்கல்வி

வ.ரா.வாழ்ந்த காலத்தில் நம்முடைய சமூக அமைப்பில் பெண்கள் பெரும்பாலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். நாட்டு விடுதலையை முன்வைத்துப் போராடிய தேசியவாதிகள் பெண் விடுதலையின் தேவையை வலியுறுத்தி வந்தனர். வ.ரா. தம் படைப்புக்களில் பெண் கல்வியின் தேவையை மிகுதியாக எடுத்துக் கூறினார். தங்களுடைய அடிமைநிலையை முதலில் பெண்கள் உணர்ந்து கொள்ளவும், தங்களுக்குக் காலங்காலமாக இழைக்கப்பட்டு வரும் சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராடி வெற்றி பெறவும் கல்வி தேவை. இதனை நாவல்களிலும், கட்டுரைகளிலும் மாயாமேயோ என்ற நூலிலும் வ.ரா. வலியுறுத்தியுள்ளார். நாவல்களில், கிராம வாழ்க்கைப் பின்னணியில், ஆசாரமான குடும்பச் சூழலில், பெண்கள் கல்வி கற்க - ஆங்கிலக் கல்வியை ஆண்களுடன் சரிசமமாக அமர்ந்து கற்க - முன் வந்தபோது அதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. பெண் கல்வியை ஆதரிப்போரையும், எதிர்ப்போரையும் வ.ரா. தம் நாவல்களில் ஆழமாகப் படைத்துள்ளார்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது பெண்ணுக்குக் கல்வியாகும். 'அடுப்பூதிகளுக்குப் படிப்பு வேண்டுமாம்' என்று திட்டிக்கொண்டே வாத்தியார் மங்களத்தை அடித்துக்

சொல்லுவார். பெண் குழந்தை படிப்பதை அந்த வாத்தியார் ஏற்றுக் கொள்ளவில்லை. '... இந்த வாத்தியாரிடம் நான்கு வருஷங்கள் படித்தேன். எவ்வளவோ மன்றாடிக் கேட்டுப் பார்த்தும், "பெண்களுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்க முடியாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டார்" (விஜயம், பக். 22,23) என்று விஜயம் நாவலில் கூறுவது இதை எடுத்துக்காட்டும். 'பெண் கல்வி கற்பதால் குடும்பத்தில் பெண்ணின் கை ஓங்குமானாலும் அதனால் தவறில்லை; ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் யார், யார் பேச்சைக் கேட்டாலென்ன' என்பது வ.ரா.வின் வாதம். கல்வி கற்பதால் தன்னையும், உலகத்தையும் புரிந்து கொள்ளவும் தீமையை எதிர்த்துப் போராடவும் முடியுமென்று கல்வியின் பயனையும் சொல்லுகிறார். பெண்ணுக்குக் கல்வி அளிப்பதால் அவர்கள் அலுவல் பார்த்துப் பொருளாதாரச் சமஉரிமையும் பெறமுடியும். பெண் கல்வியை எதிர்ப்பவர்கள் "இவர்கள் என்ன வேலைக்குப் போகப் போகிறார்கள்? வக்கீல் வேலையா, வைத்திய வேலையா, கவர்னர் வேலையா! ஒன்றுக்கும் தோதில்லாத பொம்மைகள். பெண் பிள்ளைகளுக்கு நகைகள் வேண்டும், நல்ல சேலைகள் வேண்டும், சமையல் தெரிய வேண்டும்; மற்றபடி வேறொன்றும் வேண்டியதில்லை; இல்லை யுத்தத்துக்குச் சிப்பாய்களாய்ப் போவார்களா? என்று சொல்லுவார் சுப்பராயர். படிப்புக்கு மூலதேவதை பெண்ணாக ஏற்படுத்தியிருக்கிறார்களே புராதன உறிந்துக்கள், அது ஒப்புக் கொள்ளத் தகுந்ததா என்று யாராகிலும் கேட்டால், அது தெய்வலோக ஏற்பாடு. நாம் இந்தக் களிமண் பூமியில் இருக்கிறோம்" (சுந்தரி, பக். 97,98) என்று விடையளிப்பதாக வ.ரா. காட்டுகிறார்.

இந்த உரையாடலில் மட்டுமின்றி, நாவல்களில், பெண் கல்வியை எதிர்ப்பவர்கள் பழைய தலைமுறையைச் சார்ந்தவர்களாக வ.ரா. காட்டுகிறார். எந்த ஒரு சமூக மாற்றத்தையும் இப்பெரியோர்கள் ஏற்பதில்லை. - எதையும் பிறருக்கு ஒரு நியாயம், தமக்கு ஒரு நியாயம் என்று பார்த்து, பேசி சாத்திரங்களுக்குத் தாமே மேலாண்மை பெற்றவர்கள் என்று விதண்டாவாதம் பேசுபவர்கள் இவர்கள் என்று வ.ரா. காட்டுகிறார். சமூக மாற்றத்திற்கு உறுதுணையாக நிற்பவர்கள் இளைய தலைமுறையினர் என்று வ.ரா.காட்டுகிறார். நம்முடைய சமூகத்தில் 'கல்விக்கு அதிதேவதை சரஸ்வதி' என்று சாத்திரம் பேசி, நடைமுறையில் பெண் கல்வியை எதிர்க்கும்

ஆண்களின் சுய முரண்பாட்டை - போலித்தனத்தை - வ.ரா. சுந்தரி நாவலில் கடுமையாகச் சாடுகிறார். சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால், பெண்கள் அதில் தீவிரப்பங்கும் பொறுப்பும் ஏற்க வேண்டும் என்ற வ.ரா.வின் தொலைநோக்கையும் இது புலப்படுத்துகிறது.

பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக சேர்ந்தே படிக்கின்றார்கள் என்று கோதைத்தீவு நாவலிலும் காட்டுகிறார். அது மட்டுமின்றிப் பெண்ணை இழிவுபடுத்தும் நம்முடைய புராணங்கள், பட்டினத்தார் பாடல்கள் முழுமையாகக் கோதைத்தீவில் தடைசெய்யப்பட்டுள்ளன என்றும் வ.ரா. காட்டுகிறார். பெண்களை அடிமைகளாகக் காட்டும் இத்தகைய இலக்கியக் கல்வி தடை செய்யப்பட வேண்டுமென்று வ.ரா. கூறுவது, சமூக மாற்றத்தை வலியுறுத்தும்போது, அதற்கு எதிரான தீமைகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற அவருடைய கருத்தையும் புலப்படுத்தும். இள வயதில் விதவையாகிப்போன சுந்தரி (சுந்தரி), நாகம்மாள் (சின்னச்சாம்பு) ஆகிய நாவல் கதை மாந்தர்கள், தம்முடைய வாழ்க்கையில் சமூக எதிர்ப்புக்களைக் கண்டு சிறிதும் துவளாமல் மறுமணம் செய்து கொள்ளுவதற்கு அவர்கள் கற்ற கல்வியே துணை புரிகிறது என்று வ.ரா. காட்டுகிறார். பெண்ணுக்கு ஏற்படும் கொடுமைகள் அனைத்திலிருந்தும் விடுபடவும், மேன்மையுறவும், சமஉரிமை பெறவும் அடிப்படையாகக் கல்வியையும், சொத்தில் சம உரிமையையும் வ.ரா. வலியுறுத்துகிறார். மிகவும் நீண்ட நாட்களுக்கு முன்பே வ.ரா. வலியுறுத்திய இந்த இரு நடைமுறைகளும் பெண்விடுதலைச் சிந்தனையில் அவருக்கு இருந்த உண்மையான பிடிப்பைக் காட்டும்.

## குழந்தை மணம்

வ.ரா.வின் காலத்தில் பெண் குழந்தைகளுக்குப் பொம்மைக் கல்யாணம் போல் மிக இளம் வயதில் - அவர்கள் வயதிற்கு வருமுன்-திருமணம் நடத்தப்பட்டது. இந்தக் கடுமையான பழக்கத்தை அவர் தம் நாவல்கள் நெடுகிலும் கண்டித்தார். சுந்தரி, விஜயம், சின்னச்சாம்பு ஆகிய மூன்று நாவல்களிலும், காலத்திற்கு ஒவ்வாத இந்தக் கொடிய பழக்கம் காட்டப்படுகிறது. குழந்தை மணத்தால் ஏற்படும் தொடர் விளைவாக, விவரமறியாத வயதில் சிறுமியர் விதவையாவதும், வாழ்க்கை முழுவதும் அச்சிறுமியர் தம் சொந்த உறவினர்களால்

கடும் கண்டனத்திற்குள்ளாவதும், அன்றைய சமூக நடப்புகளாக இருந்தன. மேலே குறித்த மூன்று நாவல்களிலும் இந்சச் சமூகச் சிக்கல் கதையின் மையப் பிரச்சினையாக அமைந்துள்ளது. சுந்தரி, சின்னச்சாம்பு இரண்டிலும் மறுமணம் வலியுறுத்தப் படுகிறது; மறுமணம் நிகழ்கிறது. விஜயம் நாவலில் மட்டும், மறுமணம் நிகழாதபோது, இயற்கையாக எழும் பாலுணர்வைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாத நிலையில் விஜயம் தவறுவதை வ.ரா. காட்டுவதன் மூலம் எதிர்மறையாக விதவை மறுமணத்தை வலியுறுத்துகிறார். வ.ரா.வின் காலத்தில் சமூகச் சீர்திருத்தவாதிகளின் இடைவிடாத முயற்சியால் பெண்களின் மணவயதைக் குறைந்த பட்சம் பதினான்கு ஆக வலியுறுத்திச் 'சாரதா சட்டம்' (1930ஆம் ஆண்டு) நிறைவேற்றப்பட்டது.

தொடக்க காலத்தில் இதற்கு வைதீகர்கள் கடுமையாக எதிர்த்தார்கள் என்றாலும் காலப்போக்கில் அவர்களுடைய எதிர்ப்பு மறைந்தது என்பதை வரலாறு காட்டும். இருபது வருஷங்களுக்குப் பின்னர், இந்து சமூகமும், ஸநாதனதர்மம் முதலியவையும் பொய்யாய், பழங்கதையாய், கனவாய், மெல்லப் போய்விடும் என்பதில் சந்தேகமில்லை. அறியாமையால் இறுமாந்து கிடக்கும் வைதீக இந்துக்களுக்கு எச்சரிக்கை!' (விஜயம், ப.162) என்ற வரிகள் அந்த நாளில் மிகவும் வலிமை வாய்ந்த, கடும் எதிர்ப்புக்களை மீறி வெளிப்பட்ட எழுத்தாகும். குழந்தை மணத்தால் விளையும் கொடுமைகளைச் சுந்தரி நாவலில் மிகுந்த கலைநயத்துடன் வெளியிட்டுள்ளார். படிப்பவர் மனத்தில் குழந்தைமணம் என்ற சமூகத் தீமை, அதனால் இளம் விதவை என்று பெண் அடையும் (தான் அறியாமலே, இளம் பெண் சுமக்கும் சிலுவை) மிகப்பெரிய துயரம் என்பவற்றை வ.ரா. காட்டுகிறார். 'பொம்மையும், பள்ளிக்கூடமும் தான் தெரியும். பாடப்புத்தகம் தெரியும்; சொல்லிக் கொடுத்தவற்றை மனப்பாடம் செய்யத் தெரியும்; வெளித் தோற்றத்தையே கொண்டு மயங்குகிற வயது. பிறந்த சத்தத்துக்கெல்லாம் காது கொடுக்கிற வயது; பொய்த்தூக்கமில்லாத வயது; கிழிந்த மயிலிறகு குட்டிபோடும் வயது. இந்த வயதிலே சுந்தரி விதவையானாள். விதவையென்ற வார்த்தைக்கு இந்தியாவிலே கொடுக்கிற முழு அர்த்தமும் அவளுக்குத் தெரியுமா?' (சுந்தரி, ப.97) என்ற வரிகள் குழந்தை மணத்தால், விவரம் அறியா வயதில், சுந்தரி விதவையான கொடுமையைக் காட்டுகிறது.

மயிலிறகு குட்டு போடும் வயது' என்ற கவித்துவம் மிக்க சொற்கள், மிகப்பெரிய பாதிப்பைப் படிப்பவர் மனத்தில் ஏற்படுத்தும். குழந்தை மணம், அதன் பயனாக இளம் வயதில் விதவை நிலை என்ற சமூகத் தீமையை வ.ரா. கடுமையாக எதிர்த்தார். சமூகத் தீமையை அறவே ஒழிப்பதற்குப் பெண்ணுக்குக் கல்வியும், சட்டபூர்வமாகத் திருமணவயதை உயர்த்துவதும், திருமணத்தில் பெண்ணின் விருப்பம் அறியப்பட வேண்டுமென்ற நடைமுறை ஆலோசனையும், சொத்தில் பெண்ணுக்குச் சம உரிமை என்பதும் வ.ரா. முன்வைத்த நடைமுறைக்குகந்த-சரியான தீர்வுகளாகும். நெடுநாளாக, சம்பிரதாயம் பேசிவந்த வைதீகர்களும், பிற்போக்குச் சிந்தனையாளர்களும் வ.ரா.வின் புரட்சிகரமான எண்ணங்களை அந்தநாளில் எதிர்த்தார்கள் என்றபோதிலும், தொலை நோக்குடன் சமூக மேன்மைக்காகத் தம்முடைய எழுத்துப் பணியை, வாழ்க்கையைச் செலவிட்ட வ.ரா., தமிழர்கள் நெஞ்சில் காலங்கடந்து நிற்கிறார்.

## விதவை நிலை

அந்த நாளில் இந்து சமூகத்தில் விதவை சகுனத்தடை எனவும், அவளுக்கு அடிப்படை உரிமைகள்கூட இல்லை எனவும் மறுக்கப்பட்ட நிலைமைகள் காணப்பட்டன. மேலும் அந்தணக் குடும்பங்களில் விதவை, அலங்கோலப்படுத்தப்பட்டு கொடுமைக்குள்ளானாள். இதனையும் தம்முடைய நாவல்களில் வ.ரா. எடுத்துக்காட்டுகிறார். சுந்தரி நாவலில் 'சுந்தரி விதவை சகுனத்தடை' என்று ஓர் இயலே எழுதியுள்ளார். சுந்தரி வாழ வேண்டியவள்; ஆக, அவளை இந்தப் பழைய வழக்கங்களுக்குக் கட்டுப்படவிடக்கூடாது என்ற நோக்கத்தில் நாவலின் கதையமைப்பு செல்கிறது. மூன்று நாவல்களிலும், இளம் வயதிலே விதவையாகிப் போன பெண்கள், விதவையான பெண் தலையை மழித்துக்கொள்ளவேண்டும். என்று உறவினர்கள் கட்டுப்படுத்தும்போது அதைமீறிச் செயல்படுவதையும், பிற பெண்களைப் போல இயல்பாக இருப்பதையும் வ.ரா. படைத்துக் காட்டியிருப்பது அந்தநாளில் பெருஞ் சாதனையாகும். கணவன் இறந்தவுடன் பெண் உடன்கட்டை ஏறுவதும் அன்றைய நாளில் இந்து சமூகத்தில் காணப்பட்ட கொடுமையான பழக்கமாகும். மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள், இதை எதிர்த்துப் போராடி, இக்கொடிய வழக்கத்தை

மாற்றினர். இந்தக்கால கட்டத்தில் தம் படைப்புகளில் பெண்ணுரிமைச் சிந்தனையைத் தீவிரமாக எழுதிய வ.ரா., உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும், விதவை நிலையையும் கண்டித்தார். விதவை நிலையும், அதன் தொடர்பாக அவளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும், சமூகத்தினின்றும் மறையவேண்டும்; உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கம் அறவே களையப்படவேண்டும் என்றும் வ.ரா. வலியுறுத்தினார். அத்துடன் இவற்றைப் பெண்ணுரிமை நோக்கில் அவர் சிந்தித்தார். உடன்கட்டை ஏறும் பழக்கத்தைப் புராண, சாத்திர மேற்கோள் காட்டி, சமூகத்தில் நிலைநிறுத்த முனையும் ஆண்களுக்குப் பதில் சொல்லுவது போலக் கோதைத்தீவு நாவலில் ஓரிடம் வருகிறது. கணவன் உயிரை மீட்பதற்காகக் காலனை எதிர்த்து உரையாடும் சாவித்திரியின் கூற்றாக இது வருகிறது. 'நீ உடன்கட்டை ஏறியிருக்கலாமே' என்று குத்தலாகக் கேட்டான். 'செய்திருக்கலாம்; செய்திருந்தால் காதல் பெரிது என்பது ருசுவாயிருக்கும். அதோடுகூட காதலைக்காட்டிலும் காலன் பெரியவன் என்பதும் ருசுவாயிருக்கும். அதனாலேதான் நான் உடன்கட்டை ஏறவில்லை'. (கோதைத்தீவு ப. 115). இந்த உரையாடலில் வ.ரா.வின் தீர்க்கமான சிந்தனை புலனாகிறது. உடன்கட்டை ஏறும் பழக்கத்தில் காணப்படும் சம உரிமையின்மையைக் காலனின் குரலில் உள்ள கிண்டல்தொனி காட்டுகிறது ('குத்தலாகக் கேட்டான்'). சமஉரிமையின்மையை மறுப்பதுடன், உயிர் தரும் சக்தியான பெண் பெரியவள் என்ற வாதம் சாவித்திரியின் பதிலில் உள்ளதும் குறிப்பிடத் தகுந்தது.

விதவை என்ற சொல் நம் மொழியில் வழக்கில் இருப்பதையே வ.ரா. எதிர்க்கிறார். 'புருஷனை இழந்த பெண்ணைக் கைம்பெண் என்று அழைக்கிறார்கள்; மனைவியை இழந்த புருஷனுக்கு இந்த மாதிரி ஒருவார்த்தை உண்டா' (கோதைத்தீவு, ப. 34) என்று அவர் முன் வைக்கும் சிந்தனை, மறுமலர்ச்சித் தமிழில் புதியதும், முதன்மையானதும் ஆகும். பெண்களுக்கு மட்டும் விதவை நிலை என்ற அவலத்தை அவர் ஏற்கவில்லை. இவ்வாறு செய்வது ஆணாதிக்க மனோபாவம் என்றும் அவர் காட்டுகிறார். இதற்கு மாற்றாக விதவை மறுமணத்தை அவர் முன்வைக்கின்றார். அத்துடன் கோதைத்தீவு நாவலில் கணவனை இழந்த பெண்ணும் (மூளி) மனைவியை இழந்த ஆணும் (மோழை) மறுமணம் செய்து கொள்ள விரும்பினால், அதைக் கோதைத்தீவின் சட்டம்

வரவேற்கிறதென்று வ.ரா. நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளார். மனைவியை இழந்த ஆணுக்கும், ஒரு சொல்லை (மோழை) அவர் உருவாக்கியுள்ளார்.

'தங்கள் தங்கள் குழந்தைகள் யாவரையும் ஒன்று சேர்த்து அவர்கள் இருவரும் தனிக்குடும்பம் நடத்துவார்கள்' (கோதைத் தீவு, ப. 77) என்று வ.ரா. காட்டுவது மிகவும் புரட்சிகரமான சிந்தனையாகும். குழந்தை மணத்தின் விளைவாகக் கணவனை இழந்த, பருவமெய்தாத சின்னஞ்சிறு பெண்ணைப் பிறகு அவள் பருவமடைந்தவுடன் மறுமணம் செய்து கொடுப்பதாக நாவல் படைத்த படைப்பாளர்கள், மறைமுகமாய்ப் பெண்ணுக்கு மட்டும் கற்புக் கோட்பாட்டை வலியுறுத்தினர். இதையும் உடைத்து, மணமாகி, குழந்தைகள் பிறந்து, தத்தம் துணையை இழந்த ஆணும், பெண்ணும் மனம் விரும்பி இணைந்து வாழ வ.ரா. கோதைத்தீவில் முன்வைக்கும் சிந்தனை காட்டுகிறது.

விதவை என்ற பெயரில் பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை ஏற்பதற்கு அவருடைய நாவல் கதை மாந்தர்கள் (இளைஞர்கள்) விரும்பவில்லை. அவற்றை முற்றுமாகப் புறந்தள்ளி வாழ்ந்து காட்டுகின்றனர். ஆனால் பழைய பழக்கங்களை வலியுறுத்தும் மூத்த தலைமுறையினருக்கு இவ்விளைஞர்களே, மாற்றத்தின் தேவையை வலியுறுத்துவதாக வ.ரா. காட்டுவது மாறிவரும் சமூக மதிப்பை அழகாக விளங்குகிறது. எந்த ஒரு சமூகத்திலும் பெண்ணுக்கு மதிப்புக் கொடுக்காத போது, அடிவலு இருக்கமுடியாது' என்று வ.ரா. கூர்மையாகச் சிந்திக்கிறார். திருமணத்திற்குரிய வயதை உயர்த்துவது, பெண்கல்வி, புதிய மாற்றங்களை வரவேற்கும் இளையதலைமுறையினரின் மனோபாவம் என்ற அடிப்படைகளில் விதவை மறுமணத்தை நடைமுறைப் படுத்தியிருப்பதும் காலமாற்றத்திற்கேற்ற சிந்தனைப் போக்காகும். இத்துடன் கலப்புமணம், மணம் பேசல், வரதட்சணை மறுப்பு, சடங்குகளை மறுதலித்த எளிய முறைத் திருமணம் என்பனவும் தம் படைப்புக்களில் வ.ரா. முன்வைக்கும் காலத்திற்குத் தேவையான தீவிர சிந்தனைகளாகும். கோதைத்தீவு நாவலில் சடங்குகளற்ற பதிவுத் திருமணங்களை வ.ரா. வலியுறுத்துகிறார். இரவு 9 மணிவரை பதிவுத்திருமண அலுவலகம் செயல்படுவதாகக் காட்டியுள்ளார். சின்னச்சாம்பு நாவலில் சூரியின் திருமணம் (சாம்புவின் தங்கை விதவையான நாகம்மாவை சூரி மணக்கிறான்) ஆடம்பரம், விருந்து ஏதுமின்றி

எளிமையாக நடைபெறுகிறது. விஜயம் நாவலில் விஜயத்தின் திருமணம் ஆடம்பரமாக நடைபெறுவதை அவள் விரும்பவில்லை எனவும் காட்டுகிறார். சூரி, சின்னச்சாம்பு வரதட்சணை வாங்காமலேயே மணந்து கொள்ளுகின்றனர். 'நாலாயிரம் ரூபாயில் ஒரு பைசா கூட குறையமாட்டேனென்று மாமனார் சொல்லிவிட்டானாம். ... கலியாணம் சந்தையிலே ஆடு, மாடு விலைக்கு வாங்குவதுபோல் ஆகிவிட்டது (சுந்தரி, பக். 121, 122) என்ற சுந்தரி நாவலில் மூத்த தலைமுறையினர் வரதட்சணையை வலியுறுத்துவதையும், இளைய தலைமுறை யினர் அதை எதிர்ப்பதையும் காட்டுகிறார். திருமணத்திறகு முன்பாக ஆணும், பெண்ணும் ஒருவரோடு ஒருவர் பழகி, புரிந்துகொண்டு மணம் செய்து கொள்வது ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றது. சுந்தரி நாவலில் சுந்தரியும் வேதாந்தமும் பேசி, பழகி, கடிதமெழுதிப் புரிந்து கொண்ட பின்னரே மணக்கின்றனர். இதனைச் சுந்தரியின் அண்ணன் முகுந்தன், வேதாந்தத்தின் நண்பர் ஆகியோர் ஆதரிப்பதாகவும் வ.ரா. காட்டுகிறார். சின்னச்சாம்புவில் சாம்பு-சீதா திருமணமும், சூரி-நாகம்மா திருமணமும் இவ்வாறு பேசி, பழகி, புரிந்து கொண்ட பின்னரே நடைபெறுகின்றன.

## கைம்பெண் துயரம்

தலைமயிர் மழித்தல் உள்ளிட்ட சடங்குகள் விஜயம் நாவலில் மட்டுமே விரிவாகப் பேசப்படுகின்றன. பொருளாதார வசதியுடையோர் விரும்பினால் கைம்பெண் கோலம் பூணாமல் இருப்பதைச் சமூகம் வம்பு பேசாமல் ஏற்றுக் கொள்வதையும், வசதியற்றவர்கள் வீட்டில் கைம்பெண் கோலம் பூணாமல் இருப்பின் அதே சமூகம், (சாத்திரங்களிலில்லாத) சாத்திர மேற்கோள்காட்டிப் பேசுவதையும் வ.ரா. கடுமையாக எதிர்க்கிறார். பணத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் போலிமதிப்பு வ.ரா.வினால் கண்டிக்கப்பதுகிறது. வ.ரா. வினுடைய படைப்புக்களில் இளம் கைம்பெண்கள் தலை மழிக்கப்படாமல், கைம்பெண் கோலம் பூணாமல் இருக்கின்றனர். கைம்பெண்ணைச் சமூகம் அவதூறு பேசுகிறது. 'சுமங்கலியைக் கண்டிக்க ஒரு மாமியாரும், ஒரு மாமனாரும் தான். ஆனால் பால்ய விதவைக்கோ உலகம் முழுவதும் மாமனாரும், மாமியாரும் '(விஜயம், ப. 122) என்று விஜயம் நாவலில் சமூகம் அவதூறு பேசுவதைக் காட்டுகிறார். ஆணுடன்

இளம் கைம்பெண் பேசுவதைக்கூட மிகக் கடுமையாகச் சமூகம் விமர்சிக்கிறது. விதவைக்கு ஜீவனாம்சம் உண்டு என்று நீதிமன்றம் கூறினாலும், நடைமுறையில் அதைப் பெறுவதற்குக்கூட அவளுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. பெண்களைக் கல்யாணம் செய்து கொள்ளும் காலத்தில், ஊர் நிலம் முழுவதும் தங்களுடையதுபோலச் சாதிக்கின்றார்கள். ஜீவனாம்ச காலத்தில் தாங்கள் பாப்பர்கள் என்று மனுப்பண்ணிக் கொள்ளுகிறார்கள். சிறிய தொகை ஜீவனாம் சமாகக் கோர்ட்டில் தீர்ப்புச் சொல்லப்பட்டாலும், அந்தத் தொகையை நேரே கொடுப்பதில்லை. அதற்கும் கட்சி; வருஷந்தோறும் தொகையின் வட்டியைக் கொடுத்து வருவதற்கு அனுமதிவேண்டும் என்கிறார்கள். வருஷந்தோறும் அற்பவட்டித் தொகைக்காக, இவர்கள் வாசலில் பெண்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது இவர்களது அகம்பாவக் கருத்துப்போலும்" (விஜயம், பக். 89,90). கைம்பெண்ணின் மறுவாழ்வு என்பது மறுமணத்தில் மட்டுமே நிறைவு பெறுமென்று அவர் கருதுகிறார். கல்வி, தொழில், பொருளாதார மேன்மை என்ற நிலைகளெல்லாம் அவளுடைய முதற்கட்டத் தேவைகளாகும். ஆனால் இயற்கையாக அமைந்த அவளுடைய உடல் தேவையை மறுமணமே நிறைவேற்றும். அதனை மறுப்போரை வ.ரா. கண்டிக்கிறார். 'விதவா விவாகம் பிரளயகாலம் வரையில் கூடாதென்று சாத்திரத்திலே தான் ஏற்பட்டுவிட்டதே. இனித் தமிழர்கள் என்ன செய்யக்கூடும்? சாத்திரத்தில் அவ்வளவு பக்தி இவர்களுக்கு!' (சுந்தரி, ப.116) என்றும் கூறும் வ.ரா. வாழ்க்கையின் நோக்கம் (வாழ்க்கை என்பது மணவாழ்க்கை) மகப்பேறு. எனவே பால்ய விதவைக்கு மறுமண உரிமை சாத்திர சம்பந்தமாக ஒப்புக்கொள்ளக் கூடியது என்ற கருத்தைச் சின்னச்சாம்பு நாவலில் அழுத்தமாகக் கூறுகிறார் (சின்னச்சாம்பு, ப. 94): 'விதவை என்றாலும் அவளும் பெண் தானே. குழந்தை பாக்யம் இல்லாத பால்ய விதவைக்குக் குடும்ப வாழ்வை எவ்வாறு மறுக்கமுடியும்" என்ற விஜயத்தின் கேள்வியின் மூலமும் மறுமணத்தேவையை வ.ரா. வலியுறுத்துகின்றார். வ.ரா.வின் நான்கு நாவல்களிலும் கைம்பெண் சிக்கலை எழுதியுள்ளார்.

கைம்பெண் மறுமணத்தை ஆதரிப்போர் படித்த, தீவிரமிக்க இளைய தலைமுறையினர். அவர்களிடம் வாழ்க்கையைப் பற்றிய தெளிவான சிந்தனையும், மனித

நேயமும், சிக்கலைப் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவும் உள்ளன. இளைஞர்கள் பேச்சுடன் நில்லாமல் செயல் வீரர்களாகவும் உள்ள நிலையை வேதாந்தம், சூரி ஆகியோர் நிறுவுகின்றனர். வ.ரா. விரும்பிய சமூக மாற்றம் இத்தகைய இளைஞர்களாலே தான் வரமுடியும். ஒரு நிலையில் தம்முடைய சிந்தனைகளின் பிரதிநிதிகளாக அவர் இந்த இளைஞர்களைப் படைத்துள்ளார். கைம்பெண் மறுமணத்தை எதிர்க்கும் பழைய தலைமுறையினர், பிறர் துயராகவே பார்த்து, அவதூறு பேசும் பழைய காலத்தின் பிரதிநிதிகள். முற்போக்கு எண்ணமும், புதிய கல்வியும் உடைய மறுமலர்ச்சியாளர்கள் எப்போதும் இத்தகைய பழைய தலைமுறை எதிர்ப்பை எதிர்கொள்ளவும் போராடி அவர்களின் கருத்தை மாற்றவும் முடியாதபோது தம் கருத்தை நிலைநாட்டி, தனித்தியங்கவும் வேண்டும் என்பதைச் சமூக, இயக்க விதிகளுக்கேற்ப, தம் நாவல்களில் வ.ரா. படைத்துக் காட்டியுள்ளார். மறுமணம், பிறர் கட்டாயமின்றி, கைம் பெண்கள் தாங்களாகவே உணர்ந்து, சிந்தித்து, மணக்க முன்வரும் இளைஞர்களுடன் பேசி, விவாதித்து முடிவெடுக்கும் நிலையில் இயற்கையாகக் காட்டப்படுகின்றது.

சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய அய்யர் 1899இல் இளம் விதவையான தம்முடைய மூத்த மகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். வ.ரா. காரைக்குடியில் ஊழியன் இதழில் பணியாற்றியபோது, அங்குச் செயற்பட்ட 'மாதர் மறுமண சகாய சங்கமும்' அவரிடம் இந்தச் சமூகச் சீர்திருத்தத்தின் தேவையை வலியுறுத்தியது. பாரதியாரின் சந்திரிகையின் கதையும் மேலே குறிப்பிட்ட ஜி. சுப்பிரமணிய அய்யரின் செயலும் வ.ரா.வைத் தூண்டி அவருடைய சிந்தனை ஓட்டத்தில் இந்தக் கருத்து நிலையை ஏற்படுத்தியிருக்கக்கூடும். சகோதரி சுப்புலட்சுமி அம்மையார் நடத்திய விதவைகள் காப்பு இல்லம் தொடர்பான நிகழ்ச்சியில் பிற்காலத்தில் பேசும் போது "சகோதரி சுப்புலட்சுமி மறுமணம் செய்து கொண்டிருந்தால் அது ஆயிரக்கணக்கான விதவைகளுக்கு வழிகாட்டுதலாக இருந்திருக்கும். அவர் மறுமணம் செய்து கொள்ளாதது தப்பிதம். எனக்கும் அது பெரிய மனக்குறை" (கிருஷ்ணவேணி, சகோதரி சுப்புலட்சுமி ப. 84) என்று வ.ரா. பேசினார். அவருடைய சிந்தனையில், கைம்பெண் துயரமும், அச்சமூகச் சிக்கலுக்கு மறுமணமொன்றே ஏற்புடைத் தீர்வு என்ற அவருடைய கருத்தும் இதன் மூலம் தெளிவாகத் தெரிகின்றன.

## பெண்ணுரிமை

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்ற பாரதியின் கோட்பாட்டை வ.ரா. தம் படைப்புக்களில் வலியுறுத்தியுள்ளார். 'பெண்கள் விடுதலை பெற்றாலன்றி நாடு சுதந்திரம் பெறமுடியாது. பெண்கள் கல்வி கற்க வேண்டும். பொது விஷயங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்" (கோதைத்தீவு, பக் 51,52) என்ற அவர் கூறுவது அவருடைய சிந்தனை முதிர்ச்சியைக் காட்டும். பெண்ணுக்குக் கல்வி, பொருளாதாரச் சுதந்திரம், சமஉரிமை என்பவற்றை வலியுறுத்திய வ.ரா. அரசாட்சி, நிர்வாகப் பொறுப்பு ஆகியவற்றைப் பெண் ஏற்றால், நாடு எவ்வாறு மேன்மையுறும் என்பதை நடைமுறைப்படுத்தி எழுதிய நாவல் கோதைத்தீவு. 'வாய்விட்டுச் சொல்லச் சந்தர்ப்பமும், தைரியமும் உண்டாகுமாகில் பெண்கள் என்ன சொல்லுவார்கள் என்பதையும், என்ன செய்வார்கள் என்பதையும் கோதைத்தீவு என்ற கற்பனையின் மூலமாக என் சகோதர ஆண் மக்களுக்கு எடுத்துக் காண்பிக்க எத்தனித்திருக்கிறேன்" (கோதைத்தீவு, ப.4) என்று அவர் கோதைத்தீவு முன்னுரையில் கூறுவது இதனை வலியுறுத்தும்.

கோதைத்தீவில் பெரும்பாலும், ஆட்சியின் உயர்பொறுப்பில் பெண்களே பணி செய்கின்றனர். பெண்களின் ஆட்சித்திறனை, கோதைத்தீவிற்குப் புதிதாக வந்த இரு ஆடவர்கள், 'அனைவரும் மரியாதை தெரிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இந்த நகரில் இவ்வளவு வேலை நடைபெறுகிறதே. சத்தமே காதில் கேட்கவில்லை.. பெண்கள் அரசியல் நடத்தினால் அது அழகாக நடைபெறும் போலிருக்கிறதே" (கோதைத்தீவு, ப. 67) என்று கூறுவதால், பெண்ணரசின் வலிமை புலனாகும். அந்த நாட்டில் பெண், ஆண் ஆகிய இருவருக்கும் உடல் உழைப்பு வற்புறுத்தப்படுகிறது. பெண் குழந்தைகளை ஆண்பிள்ளைகள் கேலி பேசுவது அந்தநாட்டில் கடுந்தண்டனைக்குரிய குற்றமாகும். செய்யும் தொழிலில் ஆண், பெண் வேறுபாடின்றி, பணிப்பங்கீடு சமமாக அந்த நாட்டில் உள்ளது. உடல் உழைப்பு, ராணுவப் பயிற்சி, சமையல் பயிற்சி ஆகியன கோதைத்தீவில் இருபாலர்க்கும் கட்டாயமாக அளிக்கப்படுகின்றன. மனவளர்ச்சியிலும், ஆளுமை உருவாக்கத்திலும், சமநிலை. ஏற்றத்தாழ்வின்மை இருக்க வேண்டும் என்ற வ.ரா.வின் தொலைநோக்குச் சிந்தனையே

இதற்கு அடிப்படைக் காரணம்.

பெண்ணுடைய சமூக நிலை, பெண்ணுரிமை ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் அல்லது உரிமை தர மறுக்கும், ஆணாதிக்க மனோபாவ வெளிப்பாடுகளாக அமைந்த புராண, இலக்கியக் கதைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்கிறார் வ.ரா. பட்டினத்தார் பாடல், பெண்ணடிமைத் தனத்தை முதன்மைப்படுத்தும் புராணங்கள், கோதைத்தீவில் முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. கம்பன் புகழேந்தி, தாயுமானவர் போன்ற பழைய இலக்கியப் புலவர்களின் படைப்புக்கள் யாவும் பெண்ணிய (Feministic) நோக்கில் ஆராயப்பட்டு, புதிய பதிப்புக்களாகத் தணிக்கை செய்யப்பட்டு, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன. பாரதிபாடல் முழுவதும் அந்த நாட்டில் அனைவராலும் பின்பற்றப்படுகிறது. பெண்ணை அடிமையாக, இன்ப நுகர்ச்சிக்குரிய பொருளாக, இரண்டாம் நிலையில் மதிப்பிடும் போக்கை வ.ரா. கண்டிக்கிறார். சுந்தரி நாவலில் இராமாயணக்கதையையும் ('பிறர் வம்புப்பேச்சு சிறிய மனிதர்களின் சோதனைக் கருவி. ராமன் இதைக்கொண்டு, ஸ்திரிக்கு உயிர்த் தோழனென்று தன்னைக்காட்டிக்கொள்ளத் தவறினான். ராமனை நல்ல அரசனாக்க எண்ணி, மனிதனுடைய சாதாரண அன்பு அவனிடம் இல்லாமல் அடித்துவிட்டார் வால்மீகி. கர்ப்ப சமயத்தில் சீதையைக் காட்டுக்கனுப்புதல் அவளுக்குச் சாவை உண்டாக்கவும் கூடும் என்று ராமன் எண்ணினதில்லை போலும்!' (சுந்தரி, ப. 254). கோதைத் தீவில், நளன் - தமயந்தி கதை (ப.30), சிலப்பதிகாரக்கதை (ப. 31,32), ஆண்டாள் கதை (ப. 91-97), சத்தியவான் - சாவித்திரி கதை (பக். 114-117), அகலிகை கதை (பக். 100-108) ஆகியவற்றையும் பெண்ணுரிமை நோக்கில் வ.ரா. விமர்சிக்கிறார். இந்தக் கதைகளையெல்லாம் எழுதியவர்கள் ஆணாதிக்கச் சமூகப் பிரதிநிதிகளாக இல்லாமல், பெண் படைப்பாளர்களாக இருந்திருந்தால், எவ்வாறு இக்கதைகளை எழுதியிருப்பார்கள் என்று வ.ரா. இவற்றைப் பார்த்துள்ளார். இந்த நாவல்களில் மட்டுமல்லாது, மழையும் புயலும், சொர்க்கத்தில் சம்பாஷணை, மாயாமேயோ ஆகிய நூல்களிலும் பெண்ணுரிமைச் சிந்தனைகளை வ.ரா. தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார். 'கொடுங்கோலனாக விளையாடும் ஆண்மகனுக்குக் கோதையே கோடாலி போன்றவள். பெண்களின் சுதந்திரத்தை வானத்தை முட்டும் படியாகக்

கவிதையில் காண்பித்தவள் கோதை' (கோதைத்தீவு, ப. 96) என்ற கோதையின் சிறப்பைக் கூறுமிடத்தில் மரபு வழியான வைணவராகவோ, ஆணாகவோ இக்கதைகளை வ.ரா. பார்க்கவில்லை. மாறாகப் பெண்ணின் உணர்வு கொண்டு இவற்றைப் பார்த்துள்ளார்.

பெண் அடிமையானதற்குக் காரணம், ஆண் அவளைத் தன்னுடைய சொத்தாகவும், நுகர்பொருளாகவும் கருதியதாகும். பெண்ணுக்குச் சொத்துரிமை வரும்போது இந்த நிலைமாறுமென்றும் வ.ரா. காட்டுகிறார். ஆண்பிள்ளைகளிடமிருந்து விடுதலை பெறுவதற்காகப் பெண்கள் போராட வேண்டும் என்றும் கூறுகிறார்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவெங்கும் காணப்பட்ட சமூகச் சீர்திருத்த இயக்கங்களின் முயற்சிகளும், விடுதலைப் போராட்ட வீரர்களின் பணியும், வ.ரா.வை இளம் வயதில் பாதித்தன. பங்கிம் சந்திரர் போன்ற வங்க மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் படைப்பும், அரவிந்தர், பாரதியார் போன்றோரின் அணுக்க உறவும், ஜி.சுப்பிரமணிய அய்யர், வீரேசலிங்கம் பந்துலு, முத்துலட்சுமி ரெட்டி, சகோதரி சுப்புலட்சுமி போன்றோரின் செயல்களும் வ.ரா.வை மிகவும் பாதித்து, பெண் விடுதலையின் தேவையை அவருள் உருவாக்கின. இதனால் உரம் பெற்ற வ.ரா. தம்முடைய படைப்பிலக்கியங்களில் பெண்ணுரிமைச் சிந்தனைகளைத் தொடர்ந்து வலியுறுத்தினார். ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம் என்பது அவருடைய அடிப்படைக் கோட்பாடு. காலம் காலமாகப் பெண்ணை அடிமையாகக் கருதி வந்த ஆண் மனப்பாங்கை இனங்காட்டி, சமூக மாற்றம் ஏற்பட வேண்டிய தேவையை வலியுறுத்தினார். 1927-ஆம் ஆண்டில் எழுதிய மாயாமேயோ நூலிலேயே, பெண்ணுக்குச் சொத்துரிமை வேண்டும் என்று அவர் முழங்கியது இந்தியச் சமூகச்சீர் திருத்தவாதிகளின் மத்தியில் புரட்சிகரமான சிந்தனையாகும். பெண்ணுக்குக் கல்வியும், பொருளாதாரச் சுதந்திரமும் அவரால் வலியுறுத்தப்பட்டன. அந்த நாளில் பெருவாரியாக இருந்த குழந்தை மணத்தை அவர் கடுமையாக எதிர்த்தார். குழந்தை மணமும், அதன் தொடர் விளைவான கைம்பெண் நிலை, அவளுடைய மறுமணமறுப்பு ஆகியவற்றை மூன்று நாவல்களில் காட்டினார். இளமை மணம் என்ற கொடுமைக்கு மாற்றாகப் பெண்ணின் மண வயது உயர்த்தப்பட

வேண்டும் என்று வலியுறுத்தினார். திருமணத்தில் பெண்ணுடைய விருப்பம் கட்டாயம் கேட்கப்பட வேண்டும் என்று கூறினார். விதவை மறுமணத்தை வலியுறுத்தி எழுதினார். ஆடம்பரமான பழையகாலச் சடங்குகளின்றி, எளிய முறையில் திருமணம் நடைபெறவேண்டும் என்றார். பதிவுத் திருமணங்களை வலியுறுத்தினார். சாதி வேறுபாடுகள் மறைந்தால் தான் உண்மையான விடுதலை கிட்டும் என வலியுறுத்தினார். கலப்புத் திருமணங்களை ஆதரித்து எழுதினார். பெண்ணுரிமைச் சிந்தனைகளை வலியுறுத்தினார். பெண்ணை அடிமையாகவும், நுகர்பொருளாகவும் கருதி, அவளைப் பாதாதிகேசம் கேசாதிபாதம் வருணிக்கும் தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள் மத்தியில், பெண்ணிய நோக்கில், பெண்ணுரிமைச் சிந்தனை-களைத் தம்முடைய உரைநடை எழுத்துக்கள் மூலம் சரியாக முன்வைத்தவர் வ.ரா. பெண்ணை இழிவுபடுத்தும் புராண, இதிகாச, இலக்கிய நூல்களையெல்லாம் தடை செய்யவும், தணிக்கை செய்யவும் வேண்டுமென்ற வ.ரா.வினுடைய சிந்தனை, மனிதனுடைய ஆளுமை உருவாக்கம் பற்றி அவர் எவ்வளவு தூரம் தொலைநோக்குடன் கூர்மையாகச் சிந்தித்தார் என்பதைக் காட்டும். அரசியல் பங்கேற்பு, நிர்வாகப் பொறுப்பு என்பவற்றைப் பெண் ஏற்கும்போது சமூகம் எவ்வாறு மேன்மையுறும் என்பதை நடைமுறைப்படுத்துவதாக அவருடைய கோதைத்தீவு அமைந்துள்ளது.

# இயல் 9

## வ.ரா. என்ற மனிதர்

1889–ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் குக்கிராமத்தில், பழமைமிக்க வைணவ அந்தணக் குடும்பத்தில், தோன்றின வ.ரா., சமூகச் சீர்திருத்தவாதியாகவும், நாடு, மொழி, தமிழினப்பற்று மிக்கவராகவும் தம்மை வெளிப்படுத்தி கொண்டார். சமூகச் சீர்திருத்தம், நாட்டு விடுதலை, பெண் விடுதலை, மூட நம்பிக்கை எதிர்ப்பு ஆகிய கருத்தாக்கங்களின் மறுவடிவமாக வ.ரா. விளங்கினார். அவருடைய படைப்புக்கள் மட்டுமின்றி, அவருடைய வாழ்க்கையே இதற்குச் சான்று.

மிக இளம் வயதில் கிராமத்தில் பழமைப் பிடிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து அந்த நாளைய அடிமை இந்தியாவின் நிலையைக் கண்ணாரக் கண்டு அரசியல் விடுதலை மட்டுமின்றி, சமூகத்தளைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெறவேண்டும் என்று கனவு கண்டார். இதனையே தம்முடைய எல்லாப் படைப்புக்களிலும் அடிச் சரடாக எடுத்துரைத்தார். தம்முடைய கிராமத்தில், அரிஜன இனத்தைச் சார்ந்த மனிதரின் இறுதி ஊர்வலம் அந்தணர்கள் வாழும் தெரு வழியே செல்வதைத் தடுத்த பழமைவாதிகளை அவர் எதிர்த்து நிற்கவே, தம் இனத்தாரால் சாதிநீக்கம் செய்யப்பட்டார். வைணவ அந்தணருக்குரிய ஆசார அனுஷ்டானங்களையும், நெற்றியில் திருமண் இட்டுக் கொள்வதையும் அவர் இளமையிலே விட்டொழித்தார். பாரதியாரைப் பின்பற்றிப் பூணூலையும் நீக்கிவிட்டார். தம்முடைய சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளுக்கு இந்தப் புறச்சின்னங்கள் தடை என்று அவர் நினைத்தார். இராமானுசரிடம் மெய்யான ஈடுபாடு கொண்டு அன்பு, அஹிம்சை, பிறரின் துன்பம் கண்டு துடிக்கும் உள்ளம், கடையனுக்கும் கதிமோட்சம், உலகம் உய்ய வேண்டுமென்ற பெரு நோக்கின் காரணமாகத் தமக்குவரும் கெடுதலையும் எண்ணிப்பாராத ஆத்ம தியாகம் என்பவற்றை வ.ரா. வைணவ சமயத்தின் மெய்யான கொள்கைகளாக உணர்ந்து தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார். அவற்றையே தம் எழுத்துகளில் எழுதிவந்தார். இந்த அடிப்படைப் பண்புகளே காந்தியக் கோட்பாடுகளுக்கும் இயைந்து வருவதை அவர்

உணர்ந்தார்.

சீர்திருத்தவாதிகள், பிறருக்கு எடுத்துரைத்துவிட்டு, முரண்பாடாகத் தாம் இருப்பர். இது பெரும்பான்மையான வழக்கம். இதற்கு மாறாகச் சொல்லும் செயலும், எழுத்தும் நடப்பும் ஒன்றுபோல வாழ்ந்தவர் வ.ரா. இந்தப் போக்கிலும் இராமானுசரே அவருக்கு வழிகாட்டி. அவர் தம் வாழ்நாளில் ஏற்றத்தாழ்வு காட்டாமல் அனைவரிடமும் சமமாகப் பழகினார். 'எளியவர்களிடமும், தாழ்ந்தவர்களிடமும் அவர் க்ஷேம லாபங்கள் விசாரிக்கும் தோரணை ஒரு அருங்கலை. ஒரு வரியில் சொல்ல'ப்போனால் வ.ரா. மனிதாபிமானம் நிறைந்த பூர்ண கலசம் (வ.ரா. வாசகம், ப. XXVI) என்று அவருடன் நெருங்கிப் பழகிய மணிக்கொடி ஸ்ரீனிவாசன் கூறுவது இதனை வலியுறுத்தும்.

சாதி வேறுபாடுகள் நீங்க இளைஞர்கள் கலப்புமணம் செய்துகொள்ளவேண்டும் என்பதை வ.ரா. தம்முடைய நாவல்களில் வலியுறுத்தினார் என்று முன்னர்க் கண்டோம். வ.ரா. எழுதியது மட்டுமல்லாமல், தாமே கலப்புத் திருமணம் புரிந்துகொண்டார். அவர் கலப்பு மணம் செய்து கொண்டிருக் கிறார் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அவருடைய கொள்கையில் அவருக்குள்ள உறுதிக்கு அது ஒரு நிரந்தரச் சின்னமாய் இருக்கிறது. தாம் சொல்லுகிறபடி வ.ரா. செய்து காட்டுகிறபடியால் சமூகச் சீர்திருத்த விஷயமாக அவர் எழுதும் எழுத்துகளுக்குத் தனி வேகமும் மதிப்பும் இருக்கின்றன' (வ.ரா', டி.எஸ். சொக்கலிங்கம், குமரிமலர், ப. 22) என்று அவருடைய நெருங்கிய சகாவான பத்திரிகையாளர் திரு டி.எஸ். சொக்கலிங்கம் கூறுவது இங்கு உணரத்தக்கது. சொல்லும் செயலும் ஒன்றென இருந்ததால் தான் அவரை, அறிஞர் அண்ணா 'அக்கிரகாரத்தில் உதித்த அதிசயப்பிறவி' (திராவிட நாடு 2.9.1951) என்று கொண்டாடினார்.

அடிமை இந்தியாவில் பழமையில் மூழ்கி, அச்சத்துடன், மூடநம்பிக்கையும் கொண்டு கோழையாக வாழ்ந்து வந்த மக்களின் போக்கை அவர் தொடர்ந்து சாடினார். தம்முடைய எழுத்துக்களில், பழமொழிகளையும், தொடர்களையும், பேச்சு வழக்கிலுள்ள சொலவடைகளையும் இந்த நோக்கில் விமர்சனம் செய்தார். 'அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்' என்ற வரிக்கு அவர் கூறும் விளக்கம் (கலையும் கலை வளர்ச்சியும்,

ப.100) இதை வலியுறுத்தும். நேரடி உரையாடலில் இதேபோல அவர் புதிய விளக்கம் சொல்லுவார். 'வாசல்படி இடித்து விட்டது. முள் தைத்துவிட்டது என்று யாராவது சொல்லு வதைக் கேட்டால் பொல்லாத கோபம் வந்துவிடும். ஆம், ஆம் இவர் ஜாக்கிரதையாகத்தான் போனார்; வாசற்படி குனிந்து இவரை இடித்துவிட்டது. இவர் ஜாக்கிரதையாக நேர் வழியாகத்தான் போனார்; முள் ஓடோடியும் வந்து இவர் காலின் கீழே போய் தைத்துவிட்டது என்று நையாண்டி செய்வார்". (வ.ரா. வாசகம், XVIII) என்று ஸ்ரீனிவாசன் கூறுவது இதனை வலியுறுத்தும் மழையும் புயலும், கலையும் கலை வளர்ச்சியும், புண்ணியமும் பலவீனமும் போன்ற கட்டுரை நூல்களில் இத்தகைய புது விளக்கங்கள் நிறைய உள்ளன. இவை வரா.வினுடைய வெளிப்படையாகப் பேசும் பண்பை நமக்குக் காட்டுகின்றன.

நாடு அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில் நகைச்சுவை கலந்த பத்திரிகை எழுத்தை அவர் கடுமையாகச் சாடினார். இந்த வாழ்க்கை நோக்குத்தான், வ.ரா. மணிக்கொடிக்குப் பொறுப்பேற்றபொழுது. இலக்கியத்தின் நோக்கம், சமூகச் சீர்திருத்தமும், அடிமையாகிப் போன மனிதனின் மனத்தில் அச்சத்தைப் போக்கி சிந்தனையைப் பெருக்குவதும் ஆகும்' என்று எழுத உதவியது' 'நாடு அடிமைப்பட்டுக்கிடக்கிறது. சமூகம் கட்டழிந்து அழுகி மடிகிறது. விகடமென்ன ஐயா, வேண்டிக் கிடக்கிறது விகடம் என்று வ.ரா. கடிந்து கொள்ளுவார்" (வ.ரா. வாசகம், ப. XIV). இந்த நோக்கத்தில் தான் பரதநாட்டியத்தில் காணப்பட்ட இன்பச் சுவைமிக்க (சிருங்கார ரஸம்) பாடல்கள், அபிநயம் இவற்றைக் கடுமை யாகச் சாடினார் (மழையும் புயலும், ப. 134). திருவையாற்றுக்கு மிக அருகில் வாழ்ந்தும், தியாகராஜ இசை உற்சவத்திற்கு அவர் செல்லாததற்கும் இதுவே காரணம். இசையை வெறுத்தார் என்பதல்ல பொருள்; அடிமை நாட்டில், வீரத்திற்கும் நாட்டுப் பற்றிற்கும் தூண்டுதலாக இல்லாத, பொருள் புரியாத பாட்டால் பயனில்லை என்பது அவர் கொள்கை. ஆனால் பாரதி பாட்டைப் பிறரைப் பாடச் சொல்லிக்கேட்டு மகிழ்வார். (சங்கு சுப்பிரமணியன், மணிக்கொடி அலுவலகத்தில் பாரதியின் ஊழிக் கூத்தைப் பாடியபோது வ.ரா. பாராட்டியது இதற்குச் சான்று). (பி.எஸ்.ராமையா, மணிக்கொடிக்காலம், ப.56)

தம்முடைய போலித்தனமில்லாத வெளிப்படையான பண்பிற்கு ஏற்ப, தம் எழுத்து நடையையும் அவர் அமைத்துக் கொண்டார். எளிய நடை, அதுவும் ஓரளவு தமிழில் எழுதப்படிக்கத்தெரிந்த, ரிக்ஷாக்காரனுக்கும் புரியும் தமிழில் எழுதவேண்டுமென்பது அவர் கொள்கை. இதனால் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் பண்டிதத் தமிழ் நடையை அவர் கடுமையாகச் சாடினார். ஆனால் அதே நேரத்தில் ஆங்கில மோகத்தை கடுமையாகச் சாடினார். பிறமொழிகளிலுள்ள புதியனவற்றைத் தமிழுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதும் அவருடைய கொள்கையாகும். அவரே வங்காளம், ஆங்கிலம் போன்ற மொழிகளிலிருந்து நிறைய மொழிபெயர்த்தார். அத்துடன், நடைச்சித்திரம் என்ற புதிய இலக்கிய வகையையும், 'உயர் கற்பனை' (Utopian ) என்ற நாவல் வகையையும் தமிழுக்கு முதன் முதலில் அவர்தான் அறிமுகஞ் செய்தார். அதுபோல, சென்னை வானொலி நிலையத்தில், மாறுபட்ட இரண்டு இலக்கிய, புராணக் கதைமாந்தர்களைச் சந்திக்க வைத்து அவர்களின், உரையாடலைச் 'சுவர்க்கத்தில் சம்பாஷணை' என்ற புதிய இலக்கிய வடிவமாகவும் அறிமுகஞ் செய்தார்.

மனிதர்களில் உழைப்பை மட்டுமே அவர் போற்றினார். உழைக்காமல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சோதிடம், சகுனம், ஜாதகம், அதிர்ஷ்டம், வினைப்பயன் என்று பேசும் பழம்போக்கை மிகக் கடுமையாகச் சாடினார். மழையும் புயலும் தொகுப்பிலுள்ள பல கட்டுரைகள் இதனைக் காட்டும். நாடு அடிமைப்பட்டுப் போனதற்கு இத்தகைய பழமைப்போக்கே காரணம் என்பது அவருடைய அழுத்தமான நம்பிக்கை. இந்த நோக்கத்தில், உழைத்து முன்னேறிய பலதுறை சார்ந்த பெரிய மனிதர்களைத் 'தமிழ்ப் பெரியார்கள்' என்ற பெயரில் அவர் அறிமுகப்படுத்தி எழுதிய நூல் அமைந்திருப்பது அறியத்தக்கது. எந்தத் தரப்பில் இருந்தாலும் அவர்களை இந்த நோக்கத்திற்காக வ.ரா. பாராட்டியமையும், அப்பெரியார்கள் வேறு சமயங்களில் தவறான நிலைப்பாட்டை மேற்கொண்ட போதில் வ.ரா. கடுமையாகச் சாடியதையும் இணைத்துப் பார்க்க வேண்டும். ராஜாஜியைத் 'தமிழ்ப் பெரியோர்கள்' நூலில் பாராட்டிய வ.ரா., பாரதியாரை வேதாந்தக் கவி என்று ராஜாஜி கூற முற்பட்ட போது அதை எதிர்த்த போக்கையும் இதற்குச் சான்றாகக் கூறலாம்.

வ.ரா. தம்முடைய வாழ்நாள் முழுவதிலும் இளம் எழுத்தாளர்களைத் தூண்டி உற்சாகப்படுத்திப் பாராட்டினார். மணிக்கொடியில் பணியாற்றிபோது, அவர் மணிக்கொடிப் பரம்பரை என்ற இளைஞர் கூட்டத்தையே உருவாக்கினார். பி.எஸ். ராமையா, புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, சிட்டி, ந. சிதம்பர சுப்பிரமணியன், தி.ஜ.ரங்கநாதன் போன்ற பலருக்கும் வ.ரா.வே வழிகாட்டி. 'வ.ரா. கலிஸ்தீனஸ்' (முப்பதுகளில் 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில், தம்முடைய கம்பெனி விளம்பரத்திற்காக எழுதிய ஒருவர், தம்முடன் உள்ள ஒவ்வொருவரையும் மிகுதியாக உற்சாகப்படுத்தி எழுதினார். அவருடைய புனைபெயர் கலிஸ்தீனஸ்) வேலையை மேற்கொண்டார். அவரிடம் போகும் இளம் எழுத்தாளர்கள், சில நிமிஷங்கள் அவரிடம் பேசினால் போதும். தாங்கள் ஆகாயத்தில் மேகங்களுக்கிடையே சஞ்சாரஞ் செய்யும் ஆனந்தத்தை அநுபவிப்பதுபோல நினைப்பார்கள். அவ்வளவு தூரம் அவர்களை உற்சாகமூட்டுவார். அவர்களுடைய எழுத்துக்களிலுள்ள சிறந்த அம்சங்களை எடுத்துக்காட்டி, அவர்களுக்குப் புதிய ஆர்வத்தையும், தன்னம்பிக்கையையும் கொடுப்பார். இன்று தமிழ் நாட்டிலுள்ள இளம் எழுத்தாளர்களில் மிகப் பெரும்பான்மையோர், அவருடைய கலிஸ்தீனஸ் கொள்கையால் முன்னுக்கு வந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும்" (வ.ரா., டி.எஸ் சொக்கலிங்கம், குமரிமலர் பக். 19,20) என்பது இங்கு அறியத்தக்கது. இவர்களுக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் எழுத்துத் துறையிலிருந்த பலருக்கும் வ.ரா. வழி காட்டினார். கல்கியின் முதல் நாவல் 'விமலா' வைத் தம்முடைய சுதந்திரன் இதழில் 1920 இல் வ.ரா. வாங்கி வெளியிட்டார். இதே போல, பல இளம் எழுத்தாளர்களின் நூல்களுக்கு வ.ரா. முன்னுரை கொடுத்ததும் இங்கு அறியத்தக்கது. கொத்தமங்கலம் சுப்பு, தி.ஜ.ர., சுதேசமித்திரன் சி.ஆர். ஸ்ரீனிவாசன் ஆகியோர் நூல்களுக்கு அவர் முன்னுரை தந்து ஊக்கப்படுத்தினார்.

எழுத்து, சொல், செயல் ஆகிய அனைத்தும் ஒன்றுபோல வாழ்ந்த வ.ரா., பாரதியாரால் 'உரைநடைக்கு வ.ரா.' என்று தமிழர்களுக்குச் சரியாக அடையாளம் காட்டப்பட்டு, தம் எழுத்துப் பணியைத் தொடங்கி, பாரதியின் கூற்றைத் தம் வாழ்நாளிலே மெய்ப்பித்தார். தேசப்பற்று, மக்கட்சமூக

விடுதலை, பெண்ணுரிமை, தமிழ் மொழி மேன்மை என்ற அடிப்படைக் கோட்பாடுகளைத் தம் படைப்புக்களில் தொடர்ந்து வெளிப்படுத்தினார். பாரதி புகழ் பாடிய வ.ரா., பாரதியாரின் பெயர் உள்ளளவும் தமிழர்களின் நெஞ்சில் நிலைத்து வாழ்வார்.

# பிற்சேர்க்கை

## வ.ரா.வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

**1889** - செப்டம்பர் 17-இல் தஞ்சை மாவட்டம் திங்களூர் கிராமத்தில் பிறந்தார். பெற்றோர்: வரதராச ஐயங்கார், பொன்னம்மாள். வ.ராமசாமி என்பது இயற்பெயர். மூத்த பிள்ளை இவரே. உடன்பிறந்தவர் எழுவர். இளமைக் கல்வியை அருகிலுள்ள உத்தம தானபுரத்தில் பயின்றார். திருவையாறு உயர்நிலைப் பள்ளியில் பயின்று மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்றார். (1905). தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் எப்.ஏ. பயின்று தேர்வில் தோல்வியுற்றார். கல்கத்தாவில் சுரேந்திர நாத் பானர்ஜி நடத்திய கல்லூரியில் சேர்ந்து பயிலச் சென்றார். தக்கார் பரிந்துரையின்மையால், சேரவியலாமல் ஊர் திரும்பினார்.

**1910** - காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு நாட்டு விடுதலைக்காக இளமை முதல் உழைத்தார். கல்லூரி நாட்களிலே 'வந்தே மாதரம்' முழக்கமிட்டு, கல்லூரி முதல்வரால் தண்டனை பெற்றவர் வ.ரா.

அலகாபாத் நகரில் காங்கிரசு மாநாட்டில் வ.ரா. கலந்துகொண்டார்.

**1911** -ஜூன் மாதம் புதுவை சென்றார். ஸ்ரீரங்கம் கொடியாலம் ரங்கசுவாமி ஐயங்கார் என்னும் தேசபக்தரின் வேண்டுகோளின்பேரில் அரவிந்தரைக் காணப் புதுவை சென்றார். சென்னை ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த வி.கிருஷ்ணசாமி ஐயர் அந்த நாட்களில் பாரதியாரின் (சுதேசகீதங்களை) தேசியப்பாடல்களை இரு பகுதிகளாக அச்சிட்டு இருந்தார். அவற்றைப் படித்து முன்னமே ஈடுபட்டிருந்த வ.ரா.விற்குப் புதுவை செல்வதால் பாரதியாரைத் தரிசனம் செய்யலாம் என்று விரும்பினார்.

பாரதியாரைச் சந்தித்தார். தம் குருவாக வரித்தார். தேசியம், சமூகச் சீர்திருத்தம், பெண் விடுதலை, தமிழ் மொழிப்பற்று என்ற கருத்தாக்கங்களுக்கு வ.ரா. விற்குப்

பாரதியாரே வழிகாட்டி. அங்கு அரவிந்தரைச் சந்தித்தார். 1911 முதல் 1914 ஜனவரி முடிய புதுவையில் பாரதியாருடனும் அரவிந்தருடனும் இருந்தார்.

1914 - ஜனவரியில் புதுவையிலிருந்து சொந்த ஊர் திரும்பினார் வ.ரா. (21.01.1914).

1914 - பிப்ரவரியில் வ.ரா.வின் முதல் இலக்கியப் படைப்பான ஜோடிமோதிரம் என்ற மொழிபெயர்ப்பு நூல் வெளிவந்தது. பங்கிம் சந்திரரின் 'யுகல் ஆங்ருவையா' என்ற வங்காளி நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. புதுவையில் இருந்த காலத்திலேயே வ.ரா.வால் மொழிபெயர்க்கப்பட்டு, அரவிந்தர், பாரதி இருவராலும் பாராட்டப்பெற்றது. ஆயின் 1914-இல் தான் வெளிவந்தது.

1914 - அக்டோபரில் திருச்சியில் டாக்டர் ராஜனிடம் இதய நோய்க்குச் சிகிச்சை பெற்றார். மருத்துவரின் பரிந்துரையின்படி சென்னையில் சில காலம் வசித்தார்.

1915 ஆகஸ்ட் முதல் - 1916 மார்ச் வரை சுந்தரி என்னும் வ.ரா.வின் முதல் நாவல் உருப்பெற்று எழுதி முடிக்கப் பெற்றது.

1917 - டாக்டர் ராஜனின் பொருள் உதவியுடன் சுந்தரி நாவல் அச்சாகி வெளிவந்தது. சுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு என்பது பெயர். ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பெற்று மூன்றே மாதங்களில் யாவும் விற்பனையாகும் அளவிற்கு வரவேற்பைப் பெற்ற நாவல்.

1919 - காந்தியடிகள் - மகாகவி பாரதி சந்திப்பின்போது வ.ரா. உடனிருத்தல். பின்னர் இந்த நிகழ்ச்சியை வ.ரா.தான் முதன் முதலாக எடுத்துரைத்தார்.

1919 - மார்ச் -அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லல்.

1920 - 'சுதந்திரன்' என்ற சொந்த இதழை நடத்தினார். கல்கியின் முதல் நாவலான 'விமலா'வை வ.ரா. இந்த இதழில் வெளியிட்டார்.

1920 - புனாவில் இராணுவக் கணக்கு அலுவலகத்தில் சிலமாத காலம் பணிபுரிந்து பின் தம் ஊர் வரல்.

**1920** - டாக்டர் வரதராஜுலு நாயுடு நடத்திய 'தமிழ் நாடு' நாளிதழில் பணிபுரிதல்.

**1924** - காரைக்குடியிலிருந்து வந்த 'சமரசபோதினி' இதழில் பணியாற்றுதல். சொ.முருகப்பாவின் 'குமரன்' இதழில் எழுதினார்.

**1925** - சென்னையிலிருந்து வெளியான 'தமிழ் சுயராஜ்யா' இதழில் பணிபுரிதல்.

**1927** - **1928** –காரைக்குடியில் இருந்து வெளியான 'ஊழியன்' இதழில் உதவி ஆசிரியராகப் பணிபுரிதல். ஊழியன் இதழில் நிறையக் கட்டுரைகளை எழுதினார்.

'மாயாமேயா' என்ற மறுப்புநூல் எஸ்.எஸ்.வாசனால் வாசன் புத்தக சாலை வெளியீடாகக் கொண்டு வரப்பட்டது.

**1929** - மானாமதுரையில் தொடர் வண்டிப்பாதை அமைக்கும் பணியை ஒப்பந்த அடிப்படையில் செய்தார்.

**1930** - உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெற்று அலிப்பூர் சிறையில் இருந்தார். சிறையில் இருந்து போது What is poetry என்ற நீண்ட ஆங்கிலக் கட்டுரையை எழுதினார். சிறையிலிருந்த போது வேறு சில கட்டுரைகள், கதை கள், ஜெயில் டைரி இவற்றையும் எழுதினார்.

**1933** - செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி கு.ஸ்ரீனிவாசன், டி.எஸ்.சொக்கலிங்கம், வ.ரா. மூவரும் இணைந்து மணிக்கொடி இதழைத் தொடங்கினர். மணிக்கொடி இயக்கம் என்ற தீவிர இலக்கிய இயக்கத்திற்கு வ.ரா.தலைமை ஏற்று வழிகாட்டினார்.

**1934** - அக்டோபர் - மணிக்கொடியிலிருந்து விலகல்.

**1935** - இலங்கை சென்று 'வீரகேசரி' இதழுக்கு உதவி ஆசிரி யராகப் பணியாற்றல்.

நேரு வாழ்க்கை வரலாறு, பர்டோலிக் கதை போன்ற படைப்புகள் வெளிவரல்.

**1936** - மே மாதம் - இலங்கையில் புவனேசுவரி அம்மையாரை மணம் செய்து கொள்ளுதல்.

'மகாகவி பாரதியார்' இலக்கிய விவாதத்தில் ஈடுபட்டு, தொடர்ந்து எழுதுதல்.

1937 - சென்னை திரும்புதல். சென்னையில் அகில இந்திய வானொலி நிலையத் தொடக்கம் - தொடர்ந்து வானொலியில் உரையாற்றல்.

1938 - 'தமிழ்நாடு' நாளிதழில் பணியாற்றுதல்.

ஜூலை மாதத்தில் 'பாரததேவி' என்னும் இதழுக்கு ஆசிரியராதல்.

1940 - வாழ்க்கைச் சித்திரம் நூல் வெளி வருதல்.

1941 - அக்டோபர் 2 'நவயுகம்' இதழுக்கு ஆசிரியராதல்

1942 - சின்னச்சாம்பு நாவல் வெளிவரல்.

1943 - தமிழ்ப் பெரியார்கள், மழையும்புயலும், ஜப்பான் வருவானா? ஆகிய நூல்கள் வெளிவரல்.

1944 - கோவையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுதல்.

திருப்பழனத்தில் தந்தையாரின் மறைவு.

விஜயம், மகாகவி பாரதியார், கற்றது குற்றமா ஆகிய நூல்கள் வெளிவரல்.

1945 - கோதைத்தீவு நாவல் வெளிவரல்.

1946 - சென்னையில், சிறை சென்று மீண்டோர் சங்கத்தில் சேருதல்.

1947 - வாழ்க்கை விநோதங்கள், கலையும் கலைவளர்ச்சியும், நூல்கள் வெளிவரல்.

1948 - மார்ச்சு, 11 - 'பாரதி விடுதலைக் கழகம்' உருவாதல், வ.ரா.இதற்குத் தலைவரானார். பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்க வேண்டியதன் தேவையை முதல் நோக்கமாகக் கொண்ட அமைப்பு.

1948 - செப்டம்பர் 11 ஆம் நாள் எட்டயபுரத்தில் நடைபெற்ற முதலாவது பாரதியார் விழாவில் கலந்து கொள்ளல். (புண்ணியமும் பலவீனமும் நூல் வெளிவரல்). அக்டோபர் மாதம் சென்னையில் அன்றைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராசர் தலைமையில் வ.ரா.வுக்கு மணிவிழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் வழங்கப்பட்ட பணமுடிப்பைக் கொண்டு சென்னையில் சொந்த வீடு வாங்கி அதில் குடியேறினார்.

1949 - அக்டோபர் 10ஆம் நாள் சாலை விபத்தில் சிக்கி இடுப்பு எலும்பு முறிந்தது. முன்னமே ஆஸ்துமா நோயினால் போராடி வந்தவருக்கு இந்த விபத்து இன்னும் சுமை ஆயிற்று; எழுத்துப் பணி தொடரல்.

1951 - ஆகஸ்ட் 29ஆம் நாளன்று பகல் உணவிற்குப் பிறகு வழக்கம்போலக் கண்ணயர்ந்த வ.ரா. மீண்டும் கண் விழிக்காமலேயே தம்முடைய 62ஆம் வயதில் மறைந்தார்.

## வ.ரா.வின் நூல்கள்

### நாவல்கள்

1. சுந்தரி, - ராயவரம், பவானி பிரசுரம், 1946 (இரண்டாம் பதிப்பு).

   சென்னை, அல்லயன்ஸ் 1990 (மறு பதிப்பு)

2. சின்னச்சாம்பு - சென்னை, ஜோதி நிலையம், 1942 (முதற்பதிப்பு).

   சென்னை, அல்லயன்ஸ் 1990 (மறு பதிப்பு)

3. விஜயம் - சென்னை, பாரதி பதிப்பகம், 1956 (இரண்டாம் பதிப்பு)

   சென்னை, அல்லயன்ஸ், 1990 (மறு பதிப்பு)

4. கோதைத்தீவு - திருச்சி, புத்தக நிலையம் 1945, (முதற்பதிப்பு).

### சிறுகதை

5. கற்றது குற்றமா? - திருத்துறைப்பூண்டி, கஸ்தூரி பதிப்பகம், 1944 (முதற்பதிப்பு)

   சென்னை, அல்லயன்ஸ், 1970, (மறு பதிப்பு)

### வாழ்க்கை வரலாறு

6. மகாகவி பாரதியார் - சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 1968 (ஏழாம் பதிப்பு)

### வாழ்க்கைச் சித்திரம்

7. நடைச்சித்திரம் - சென்னை, நவயுகப்பிரசுராலயம், 1940, (முதற்பதிப்பு)

   சென்னை அல்லயன்ஸ், 1990 (மறு பதிப்பு)

8. வாழ்க்கை விநோதங்கள். - திருத்துறைப்பூண்டி, கஸ்தூரி பதிப்பகம், 1947, (முதற்பதிப்பு)

வாழ்க்கை விநோதங்கள், சென்னை, அல்லயன்ஸ், 1990 (மறுபதிப்பு)

9. தமிழ்ப்பெரியார்கள் - சென்னை, தமிழ்ப்பண்ணை 1943 (முதற்பதிப்பு)

சென்னை, அல்லயன்ஸ், 1990 (மறு பதிப்பு)

**கட்டுரை நூல்கள்**

10. மழையும் புயலும் - சென்னை, நவயுகப் பிரசுராலயம், 1943, (முதற் பதிப்பு)

சென்னை, அல்லயன்ஸ், 1990 (மறு பதிப்பு, (இந்த நூலில் புண்ணியமும் பலவீனமும் என்ற நூலும் இணைக்கப்பட்டு இப்பதிப்பு வெளிவந்துள்ளது).

11. புண்யமும் பலவீனமும் - திருத்துறைப்பூண்டி, கஸ்தூரி பதிப்பகம், 1948 (முதற்பதிப்பு)

(1990-ஆம் ஆண்டில், அல்லயன்ஸ் பதிப்பில் புண்ணியமும் பலவீனமும் என்றுள்ளது.)

12. கலையும் கலைவளர்ச்சியும் - ராமச்சந்திரபுரம், கார்த்திகேயினி பிரசுரம், 1947 (முதற்பதிப்பு).

சென்னை, அல்லயன்ஸ், 1990, (மறு பதிப்பு)

13. வசந்தகாலம் - சென்னை, எழுத்து பிரசுரம், 1964, (முதற்பதிப்பு)

சென்னை, அல்லயன்ஸ் 1990, (மறு பதிப்பு)

14. சுவர்க்கத்தில் சம்பாஷணை - சென்னை, எழுத்து பிரசுரம், 1964, (முதற்பதிப்பு)

- (இப்பதிப்பில் சொர்க்கத்தில்' என்றே தலைப்புள்ளது. அல்லயன்ஸ் பதிப்பில் 'சுவர்க்கத்தில்' என்றுள்ளது).

சுவர்க்கத்தில் சம்பாஷணை - சென்னை அல்லயன்ஸ் 1990, (மறு பதிப்பு)

15. வ.ரா.வாசகம் - சென்னை, வாசகர் வட்டம், 1968, (முதற் பதிப்பு).

சென்னை, அல்லயன்ஸ் 1990 (மறு பதிப்பு)

**பிற நூல்கள்**

**அரசியல்**

16. க்காங்கிரஸ் ஆட்சி - சென்னை, காங்கிரஸ் சட்டசபைக் கட்சி, 1938 (முதற்பதிப்பு)

17. ஆண்டு நிறைவு - (ஒரு வருஷ காங்கிரஸ் ஆட்சி), சென்னை, காங்கிரஸ் சட்டசபைக்கட்சி 1938, (முதற்பதிப்பு)

**மொழிபெயர்ப்பு**

18. ஜோடி மோதிரம் - 'லோகோபகாரி' (பரலி சு.நெல்லையப்பர்), சென்னை, 1938.

19. ஜவஹர்லால் சுயசரிதம் - இரண்டு தொகுதிகள், சென்னை, சுதந்திரச் சங்கு காரியாலயம், 1935.

20. பர்டோலிக் கதை - (மகாதேவதேசாய் எழுதியது), சென்னை, சுதந்திரச் சங்கு காரியாலயம், 1935.

21. நமது இந்தியா - (மினுமசானி எழுதியது), சென்னை, ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், 1943 (இரண்டாம் பதிப்பு)

**கொள்கை விளக்க நூல்**

22. ஜப்பான் வருவானா? - சென்னை, தமிழ்ப் பண்ணை பதிப்பகம், 1943.

**மறுப்பு நூல்**

23. மாயாமேயோ அல்லது மேயோவுக்குச் சவுக்கடி, சென்னை, வாசன் புஸ்தகசாலை, 1928.

**நூலாக வெளிவராமல் இதழ்களில் மட்டும் இடம்பெற்ற வ.ரா.வின் படைப்புக்கள்**

**கட்டுரைகள்**

1. 'பாரதியும் இலக்கிய மதிப்புரையும்', - சுதேசமித்திரன், 30.11.35, சென்னை.

2. 'பாரதியும் இலக்கிய மதிப்புரையும்' - சுதேசமித்திரன், 15.12.1935.

3. 'வேதாந்தச் சிமிழிலே அடைக்க வேண்டாம்', - காந்தி, 1934.

4. 'உலக மகாகவி பாரதியார்', - தினமணி, 10.09.1940.

5. 'பாரதியார், - ஊழியன், 31.08.26

6. 'ஔவை-ஆண்டாள்,' - ஊழியன், 26.10.26.

7. 'ஐம்பது வருஷங்களுக்கு முன்', - ஆனந்த விகடன் (6 பகுதிகள்), 1943, சென்னை.

8. 'பெண்கள் விடுதலை சபை', - தினமணி, 1.10.1941, சென்னை.

9. 'உண்மையான பெரியோர்கள்', - தினமணி, 25.4.1943, சென்னை.

10. "What is poetry" The Indian Review" PP. 37-44, August 1982, PP. 33-47, September, 1982.

சிறுகதைகள்

1. 'கோகிலத்தின் குதர்க்கம்', இலக்கியச் சிந்தனை, சென்னை, 1984.

2. 'கோட்டை வீடு', கதைக்கோவை, தொகுதி - 2, சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி, 1942.

3. 'கட்டைவண்டி அல்லது பரதர அரசர்' மணிக்கொடி 1933 சென்னை.

4. 'விதவை யமுனாபாய்', மணிக்கொடி, 13.5.1934.

5. 'காளிதாசன்', ஊழியன், 29.6.26, 6.7.26, 20.7.26, 23.11.26.

## துணை நூற்பட்டியல்

1. அண்ணாதுரை, சி.என்., 'அக்கிரகாரத்தில் உதித்த அதிசய மனிதர்', திராவிடநாடு, 02.09.1951.

2. அதியமான், பழ., வ.ராவின் எழுத்துக்கள் ஓர் ஆய்வு, ஏப்ரல் 1989, சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம் (அச்சிடப்பெறாத பிஎச்.டி.பட்ட ஆய்வேடு).

3. அதியமான், பழ., 'வ.ரா. என்றொரு மானுடன்' தமிழ்மணி – தினமணி ப. 1, 23.12.1989, சென்னை.

4. அதியமான், பழ., "வ.ரா.வின் சிறுகதைத் தொகுதி', தமிழ்மணி – தினமணி, ப. 5, 22.12.'90, சென்னை.

5. இளங்கோவன், 'இன்றைய இளம் எழுத்தாளர்களின் மீது பாய்ச்சல்', தினமணி, 21.12.'35, சென்னை.

6. கமலம், 'துண்டுபட்ட நினைவுகள்', ஊழியன், ப.8, 15.05.1936, காரைக்குடி.

7. கல்கி,'பாரதி பிறந்தார், சென்னை, பாரதி பதிப்பகம், 1964.

8. 'கல்கி, (ரா.கிருஷ்ணமூர்த்தி), 'பாரதியும், இலக்கிய விமர்சனமும்', சுதேசமித்திரன், 7.12.'35, சென்னை.

9. கல்கி, 02.09.1951, சென்னை.

10. கிருஷ்ணவேணி, கா., சுகோதரி சுப்புலட்சுமி, சென்னை, சாரதா மாதர் ஐக்கிய சங்கம், 1962.

11. கொத்தமங்கலம் சுப்பு, மஞ்சி விரட்டு, வ.ரா. முன்னுரை, சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி, 1946.

12. சண்முகம், டி.கே. 'பேராசிரியர் வ.ரா.', சக்தி பக்.39–40, நவம்பர், 1948, சென்னை.

13. சாமிநாத சர்மா, வெ., நான் கண்ட நால்வர், சென்னை, பிரபஞ்சஜோதி பிரசுராலயம், 1974.

14. சிட்டி, அமரர் வ.ரா., சென்னை, பாரதி கலைக்கழகம், 1988.

15. சிட்டி (சுந்தரராஜன், பெ.கோ.), 'பாரதியும் இலக்கிய விமர்சனமும்', சுதேசமித்திரன், 15.12.1935, சென்னை.

16. சிட்டி 'பாரதியும் உலக இலக்கியமும்', சுதேசமித்திரன், 21.12.'35.

17. சிதம்பர சுப்பிரமணியன், ந., 'தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை', தினமணி, 08.02.'36.

18. சிவத்தம்பி, கா., மார்க்ஸ், அ., பாரதி மறைவு முதல் மகாகவி வரை, சென்னை, நியூ நெஞ்சுரி புக் ஹவுஸ், 1984.

19. சிவராமன், நீ., அறிஞர் வ.ரா.வின் வழி, சென்னை, வ.ரா. தமிழ் மன்றம், 1964.

20. சீனிவாசன், சி.ஆர். தராசு (வ.ரா.வின் முன்னுரை), சென்னை.

21. சுந்தா, பொன்னியின் புதல்வர், சென்னை, வானதி பதிப்பகம், 1976.

22. செல்லப்பா, சி.சு., மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள், சென்னை, பீக்காக் பதிப்பகம், 1990.

23. செல்லப்பா, சி.சு., வ.ரா.வும் மறுமலர்ச்சியும்', நிகழ், டிசம்பர், 1990, பக்.21–32, 53–59, கோயம்புத்தூர்.

24. சொக்கலிங்கம், டி.எஸ்., வ.ரா., குமரிமலர், பக். 16–37, 1943, சென்னை.

26. பத்மநாபன், ரா.அ., சித்திரபாரதி, சென்னை, அமுதநிலையம், 1957.

27. பத்மநாபன், ரா.அ., (பதிப்பாசிரியர்), பாரதியார் கவிநயம், சென்னை, வானதி பதிப்பகம், 1982.

28. மணி, பெ.சு., பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகள், சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1983.

29. மாலன், 'வ.ராவின் மகாகவி பாரதியார்', செம்மவர், பக். 5–9 செப்டம்பர், 1990, மதுரை.

30. ரங்கநாதன், தி.ஜ., புதுமைக்கவி பாரதியார், (வ.ரா.வின் முன்னுரை), சென்னை, அல்லயன்ஸ், 1940.

31. ராமஸ்வாமி, ப., 'வ.ரா', சக்தி, பக் 195–196, நவம்பர், 1940, சென்னை.

32. ராமஸ்வாமி, ப., வ.ரா. (வாழ்க்கைச் சித்திரம்), சென்னை, நவயுகப் பிரசுராலயம், 1941.

33. ராமையா, பி.எஸ்., 'பாரதியும் இலக்கிய விமர்சனமும்', தினமணி, 13.12.'35.

34. ராமையா, பி.எஸ்., மணிக்கொடி காலம், சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1980.

35. ராஜகோபாலன், கு.ப., சுந்தரராஜன், பெ.கோ. (சிட்டி), கண்ணன் என் கவி, சென்னை, பூங்கொடி பதிப்பகம், 1981.

36. ராஜூ, தி.சா., 'அறிஞர் வ.ரா.', மஞ்சரி, பக். 25–28, ஏப்ரல், 1958, சென்னை.

37. ராஜூ, தி.சா., 'அறிஞர் வ.ரா.' தினமணி கதிர், பக். 11–12, 17.06.'90, சென்னை.

38. விசுவநாதன், சீனி., பாரதி போற்றிய பெரியோர்கள், சென்னை, சங்கம் புக்ஸ், 1983.

39. வேங்கடராமன், சு., 'வ.ரா. நாவல்களில் பெண் விடுதலை நோக்கு', செம்மலர், பக் 10–13, செப்டம்பர், 1990, மதுரை.

40. வ.ரா.மணிமலர், சென்னை, சக்தி காரியாலயம் 1948.

41. இந்தியமாதா, மிஸ் காதரைன் மேயோவின் நூலின் தமிழாக்கம், மதுரை, கார்முகில் பதிப்பகம், 1987 (இரண்டாம் பதிப்பு). (மொழிபெயர்ப்பாளர் பெயர் இல்லை. முதற்பதிப்பு, 1928, சென்னை, K.S.முத்தையா வெளியீடு).

42. CHITTI, Va.Raa. Master
The Indian Express - Weekend,
17.09.1988, Madras.

வ.ரா. (1889-1951) என்று அன்புடன் அழைக்கப்படும் வ.ராமசாமி அய்யங்கார் 1889-ஆம் ஆண்டு செப்டம்பர் 17ந்தேதி தஞ்சைமாவட்டத்தில் திங்களூர் என்ற சிற்றூரில் பிறந்தார். நாவலாசிரியர், நாடகாசிரியர், வாழ்க்கை வரலாற்றாசிரியர், உரைநடை ஆசிரியர், இதழாசிரியர்; மற்றும் சிறந்த மொழிபெயர்ப்பாளாரான வ.ரா. பாரதியின் தலையாய சீடர். புரட்சிகரமான கருத்துக்களை, சொல்லிலும், செயலிலும் கடைப்பிடித்தார். நாட்டுப் பற்றும், மனித நேயமுமே அவரது படைப்புகளில் அடிநாதமாக ஒலிக்கின்றன. பாரதியால் "உடைநடைக்கு வ.ரா" என்றும், அறிஞர் அண்ணாவால் "அக்கிரகாரத்தில் உதித்த அதிசய மனிதர்" என்றும் பாராட்டப் பெற்ற வ.ரா. தேசப்பற்று, பெண்ணுரிமை, விடுதலை, தமிழ்மொழி மேன்மை என்ற அடிப்படைக் கோட்பாடுகளைத் தன்படைப்புகளில் சித்தரித்தார். பாமரருக்கும் எளிதில் புரியும் தமிழிலே அவர் எழுதினார்.

இந்நூலாசிரியர் சு. வேங்கடராமன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் பணிபுரிகிறார். பல ஆய்வு நூல்களைப்படைத்துள்ள, இவர், பிறமொழி வாசகர்களையும் கருத்தில் கொண்டு இச்சிறு நூலை ஆக்கியுள்ளார்.

ISBN 81-7201-543-7 Va.Ra (Va. Ramasamy) **Rs. 15**

முன் அட்டையில்
கோட்டுருவம் : கே. எம். ஆதிமூலம்